தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
முன்வைக்கப்பட்ட நாள்
11 (6) 1997

# உயர்நிலைக் குழு

## நிருவாகச் சீரமைப்பு மற்றும் ஊழல் தடுப்பு




## முதல் அறிக்கை

கூன் 1997

தமிழ்நாடு அரசு


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

# உயர்நிலைக் குழு

## நிருவாகச் சீரமைப்பு மற்றும் ஊழல் தடுப்பு




## முதல் அறிக்கை

சூன் 1997

தமிழ்நாடு அரசு


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

# பொருளடக்கம்


| | அத்தியாயங்கள் | பக்கம் |
|---|---|---|
| 1. | தோற்றுவாய் | 3 |
| 2. | ஒப்பந்தப்புள்ளி நடைமுறை | 8 |
| 3. | கொள்முதல் நடைமுறை | 37 |
| 4. | பரிந்துரைகளின் சுருக்கம் | 51 |
| 5. | இணைப்புகள் | |
| | இணைப்பு - 1 - நியமனக்குழு ஆணை மற்றும் செயல்பாடுகள் | 67 |
| | இணைப்பு - 2 - வினாப்பட்டிகள் | 70 |


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

அத்தியாயம் - 1

# தோற்றுவாய்

நிருவாகத்தில் ஊழலை ஒழிக்கவும் ஊழல் நடைபெறாமல் தடுக்கவும் மேற்கொள்ளப்பட வேண்டிய நடை முறைச் சீர்திருத்தங்கள் குறித்து ஆய்வு செய்து, பரிந்துரைகள் அளிப்பதற்காக தமிழ்நாடு அரசு, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (எண்) துறையின் 2-8-1996 ஆம் நாளிட்ட 289-ஆம் எண் அரசாணையில், திரு. நீதிபதி ஜி. இராமானுஜம் அவர்கள் தலைமையில் உயர்நிலைக் குழு ஒன்றை அமைத்தது. அந்த அரசாணையின் நகல் இணைப்பு-1ல் தொடுக்கப்பட்டுள்ளது.

2. பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையில் (பயிற்சி) செயலாளர், திரு.பி. நடேசன், இ.ஆ.ப. அவர்கள், அரசு செயலாளர் என்ற முறையிலான தன்னுடைய பொறுப்புகளோடு கூடுதலாக இக்குழுவின் செயலாளராகவும் செயல்படுவதற்காக நியமிக்கப்பட்டார். இக்குழு, தன் ஆய்வு குறித்த விவாதங்களைத் தொடங்கியபோது, பல அரசுத் துறைகள் மற்றும் பொதுத் துறை நிறுவனங்களின் செயல்பாடு பற்றி ஆழ்ந்து ஆய்வு செய்வதற்கான பணியைக் கவனிக்க முழு நேரச் செயலாளர் ஒருவர் தேவைப்படுவார் என்று உணரப்பட்டது. அரசு, திரு.ஆர். வரதராஜலு, இ.ஆ.ப. (ஓய்வு) அவர்களை 16-11-1996 அன்று முதல் இக் குழுவின் முழுநேர உறுப்பினர்-செயலாளராக நியமித்தது.

3. குழுவின் நிருவாகப் பணிகளைக் கவனிப்பதற்காக, துணைச் செயலாளர் ஒருவர், சார்புச் செயலாளர் ஒருவர், இரு பிரிவு அலுவலர்கள் மற்றும் தேவையான துணைப் பணியாளர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

4. குழு உறுப்பினர்களில் ஒருவரான திரு.கே.எஸ். இலட்சுமிகாந்தன் பாரதி, இ.ஆ.ப. (ஓய்வு) அவர்கள், சொந்தக் காரணங்களினால் தொடர்ந்து உறுப்பினராகப் பணியாற்ற இயலாமையைத் தெரிவித்து, 21-9-1996 அன்று உறுப்பினர் பொறுப்பிலிருந்து விலகிக் கொண்டார். மற்றோர் உறுப்பினரான திரு.சி. தங்கராஜ், இ.ஆ.ப. (ஓய்வு), மாநில நிருவாக நடுவர் மன்றத்தின் உறுப்பினராக நியமிக்கப்பட்டதையடுத்து, 31-1-1997 அன்று குழுவிலிருந்து விலகிவிட்டார்.

5. இக்குழு, முழுநேர உறுப்பினர்-செயலாளர் ஒருவருடன் செயல்படத் தொடங்கிய பின்னர் அதன் முழு அமைப்பு பற்றிய விவரம் பின்வருமாறு -

| | | | |
|---|---|---|---|
| (1) | திரு. நீதிபதி ஜி. இராமானுஜம் | -- | தலைவர் |
| (2) | செல்வி எம்.எஸ். ரமேஷ், இ.ஆ.ப. (ஓய்வு) | -- | உறுப்பினர் |
| (3) | திரு.கி.வி. நரசிம்மன், இ.கா.ப. (ஓய்வு) | -- | உறுப்பினர் |
| (4) | டாக்டர் எம். அனந்தகிருஷ்ணன்,<br>முன்னாள் துணைவேந்தர்,<br>அண்ணா பல்கலைக்கழகம் | -- | உறுப்பினர் |
| (5) | திரு. ஏ.ஆர். தாமோதரன்<br>(முன்னாள் உறுப்பினர், சட்ட மன்ற மேலவை) | -- | உறுப்பினர் |
| (6) | திரு.ஆர். வரதராஜுலு, இ.ஆ.ப. (ஓய்வு) | -- | உறுப்பினர்/<br>செயலர் |

6. இக்குழுவின் ஆய்வு வரம்புகளில், ஊழல் தடுப்பு மற்றும் நிருவாகச் சீர்திருத்தங்கள் குறித்து, பின்வரும் தலைப்புக்களின் கீழ் பரிந்துரைகள் அளிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்பட்டது

(i) நிருவாகத்தில் வெளிப்படை தன்மை, தகவல் அறிந்து கொள்ள மக்களுக்கு உரிமை ஆகியவைகளைப் பெறுவதற்காக, தலைமைச் செயலகம் தொடங்கி கிராம அளவிலான நிருவாகம் வரை, நிருவாக நடைமுறைகளிலும் செயல்முறைகளிலும் செய்யப்பட வேண்டிய மாற்றங்கள்.

(ii) அரசு துறைகள், மற்றும் பொதுத் துறை நிறுவனங்கள் பொருட்களை வாங்குதல், அது சம்பந்தமாக விலைப்புள்ளி கோருதல் தொடர்பாகப் பின்பற்றி வரும் நடைமுறைகளில் செய்யப்பட வேண்டிய மாற்றங்கள்.

(iii) ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை அதன் பணியை மேலும் செவ்வனே செய்ய மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள்.

(iv) அரசுத் துறைகளிலும் பொதுத் துறை நிறுவனங்களிலும் தவறு செய்யும் பணியாளர்களுக்கெதிரான ஒழுங்கு நடவடிக்கைகளை விரைவு படுத்துவதற்கான நடவடிக்கைகள்.

7. குழுவின் உறுப்பினர்கள் தமக்கிடையே தொடக்கநிலை விவாதம் மேற்கொண்ட பிறகு இக்குழு பல்வேறு துறைகளின் அரசு செயலாளர்கள், துறைத் தலைவர்கள், மற்றும் சரக அளவிலும் மாவட்ட அளவிலும் உள்ள சில முதுநிலை

அதிகாரிகள் ஆகியோருடன் விவாதங்களை நடத்தியது. இவ்விவாதங்களில் பங்கேற்ற துறைகளுள் வருவாய்த்துறை, உள்துறை, கல்வித்துறை, மக்கள் நல்வாழ்வுத்துறை, உள்ளாட்சித் துறை, வனத்துறை மற்றும் உணவுப் பொருள் வழங்கு துறை ஆகியன அடங்கும். மின்வாரியம், வீட்டுவசதி வாரியம், பெருநகர வளர்ச்சிக் குழுமம் மற்றும் குடிநீர் வழங்கு—கழிவு நீரகற்று வாரியம் போன்ற சில பொதுத் துறை நிறுவனங்களின் தலைவர்களுடனும் விவாதிக்கப்பட்டது. இவ்விவாதங்களின் மூலம் உருவான கருத்துக்கள், கருத்துரைகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு, ஊழல் நடைமுறைகள் மற்றும் ஏனைய தவறான வழிகளில் சலுகைகள் பெற விழைவதின் காரணமாக, பொது மக்களுக்கு பெருமளவில் கேடும், தொல்லையும், அநீதியும் விளைவிக்கும் செயல்பாடுகள் களையப்படுவதற்கான சில கருத்துரைகள் அடங்கிய விரிவானதொரு வினாப்பட்டியல் தயாரிக்கப்பட்டது. உத்தேசித்துள்ள சீர்திருத்தங்கள் பற்றி மக்களின் கருத்தைத் தெரிந்து கொள்ள இவ் வினாப்பட்டியல் இரண்டு பாகங்களாகத் தயாரிக்கப்பட்டது. பாகம் 1-ல் 51 வினாக்கள் இடம் பெற்றிருந்தன. இவை பெரும்பாலும் அரசு அமைப்புகளோடு மக்களுக்குள்ள நேரடித் தொடர்புகள் பற்றிய நேரடியான கேள்விகள். பாகம்-2ல் 45 வினாக்கள் இடம் பெற்றிருந்தன. இவை பெரிதும் நிருவாகத் துறைகள் தங்களுக்குள்ளேயே பின்பற்றும் நடைமுறைகள் தொடர்பானவையாகும். இவ்வினாப்பட்டியலின் நகல், இணைப்பு-11ல் கொடுக்கப்பட்டுள்ளது.

8. இவ்வினாப்பட்டியல் 25,000 படிகள் அச்சிடப்பட்டு, 1997 பிப்ரவரி முதல் வாரத்தில் வெளியிடப்பட்டது. அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், நிர்வாகத்திலும் / பொது வாழ்விலும், உயர் பதவி வகித்த பெருமக்கள், தலைமைச் செயலகத்திலும், மாவட்டங்களிலும் உள்ள மாவட்ட அலுவலர்கள் மற்றும் அதற்கு மேலான பதவித் தரத்தையும் சேர்ந்த அனைத்து முதுநிலை அலுவலர்கள், பணிச் சங்கங்கள், ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள், ஊராட்சித் தலைவர்கள், பொது வாழ்வில் ஈடுபட்டுள்ள ஏனைய புகழ் வாய்ந்த பெரியோர்கள் உட்பட, பல்வேறு தரப்பைச் சேர்ந்தவர்களுக்கு இவ்வினாப் பட்டியலின் நகல்கள் வழங்கப்பட்டன. வினாப்பட்டியலுக்குப் பதில் அளிக்க 15-3-1997 வரை கால அவகாசம் அளிக்கப்பட்டிருந்தது.

9. வினாப்பட்டியலோடு, பொது மக்களிடமிருந்து கருத்துரைகள் கோரி, பொதுவான பத்திரிக்கை செய்தியும் வெளியிடப்பட்டது. இக்குழுவுக்கு, பொது மக்களிடமிருந்து 2000க்கும் மேற்பட்ட கடிதங்கள் வந்தன. இவை பெரும்பாலும் புகார்க் கடிதங்களாகவும், சில கடிதங்கள் கருத்துரைகள் அடங்கியனவாகவும் இருந்தன.

10. இவ்வினாப் பட்டியலுக்கு பொது மக்களின் வெவ்வேறு பிரிவினரிடையேயிருந்து 2335 பதில்கள் வரப்பெற்றன. அவற்றின் விவரம் வருமாறு :-

| | |
|---|---|
| அமைச்சர் | 1 |
| அரசியல்வாதிகள் | 16 |
| மாநகராட்சிகள், நகராட்சிகள் | 82 |
| இ.ஆ.ப. அதிகாரிகள் | 16 |
| இ.கா.ப. அதிகாரிகள் | 11 |
| இ.வ.ப. அதிகாரி | 1 |
| தொழிலதிபர் | 1 |
| சட்டப்படிக்கான வாரியம் | 1 |
| மருத்துவர் | 1 |
| கல்வியாளர்கள் | 48 |
| வழக்குரைஞர்கள் | 7 |
| சங்கங்கள் | 55 |
| பொறியாளர் | 1 |
| அரசுப் பணியாளர்கள் | 138 |
| பத்திரிக்கையாளர்கள் | 4 |
| சமூகப்பணியில் ஈடுபட்டுள்ள அரசு சாரா அமைப்புகள் | 7 |
| ஊராட்சிகள் | 1676 |
| ஊராட்சி ஒன்றியங்கள் | 47 |
| பெருமக்கள் மற்றும் பொதுவாழ்வில் ஈடுபட்டுள்ள புகழ்வாய்ந்த ஏனைய பெரியோர்கள் | 11 |
| ஏனையோர் | 211 |
| மொத்தம் | 2335 |

11. வினாப்பட்டியல்களுக்கான பதில்களைப் பகுப்பாய்வு செய்யும் பணி, சென்னைப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்களடங்கிய ஒரு குழுவிடம் ஒப்படைக்கப்பட்டது. இக்குழு, முனைவர் திருமதி சுசிலா மாரியப்பன் அவர்கள் தலைமையில் இப்பணியை மேற்கொண்டது. உயர்நிலைக் குழு இப்பகுப்பாய்வின் முடிவுகளையும் பரிசீலித்தது. வினாப் பட்டியலுக்கு அளிக்கப்பட்ட பதில்களில் மிகப் பெரும்பான்மையானவை, வினாப் பட்டியலில் தெரிவிக்கப்பட்டிருந்த உத்தேச

மாற்றங்கள், மற்றும் சீர்திருத்தங்களை வரவேற்பதாக இருந்தது இக்குழுவிற்கு மனநிறைவளித்தது.

12. இந்த முதல் அறிக்கை முடிவு செய்யப்படும் நாள் வரையில் இக்குழு மொத்தம் 38 கூட்டங்கள் நடத்தியது. அரசுத் தலைமைச் செயலாளர் பொதுத் துறை நிறுவனங்களின் தலைவர் போன்ற உயர் பதவி வகித்த முதுநிலை அதிகாரிகளோடு தனித்தனியாக நடத்திய விவாதங்களும் இதில் அடங்கும். தொடர்புடைய சில பொருள்களில் அவர்கள் தெரிவித்த குறிப்பான கருத்துரைகளும் குழுவின் கருத்திற் கொள்ளப்பட்டன.

13. தமிழ்நாடு அரசின் விழிப்புப்பணி ஆணையாளர் திரு.எஸ்.ஏ. சுப்ரமணி, இ.ஆ.ப. அவர்கள், இக்குழுவின் அழைப்பின் பேரில், பெரும்பாலான கூட்டங்களில் கலந்துகொண்டு தனது கருத்துரைகளையும் ஆலோசனைகளையும் வழங்கினார். இவை, குழு தன்னுடைய கருத்துக்களுக்கு திட்டவட்டமான உருகொடுப்பதில் பெரிதும் உதவியாக இருந்தன.

14. இக்குழு 1997 மார்ச் திங்களில், மதுரை, சேலம் மாவட்டங்களுக்குச் சென்று, மாவட்ட அளவிலுள்ள அதிகாரிகளுடன் விவாதித்ததோடு, சில கள அலுவலகங்களிலும், வட்டாரப் போக்குவரத்து அலுவலகம், சார் பதிவாளர் அலுவலகம், காவல் நிலையம், தலைமையிட மருத்துவமனைகள், நியாய விலைக் கடைகள் ஆகியவற்றிலும் அலுவல்கள் நடைபெறுவதைப் பார்வையிட்டது. இக்குழு, தன் இறுதி அறிக்கையைத் தயாரிப்பதற்கு முன்னதாக மேலும் சில மாவட்டங்களைப் பார்வையிடத் திட்டமிட்டுள்ளளது.

15. இக்குழு ஆய்வுப் பணியை மேற்கொண்டிருந்தபோதே, கட்டுமானப் பணிகளுக்கான ஒப்பந்தங்கள், வெவ்வேறு துறைகள் / நிறுவனங்கள் செய்யும் கொள்முதல்கள் ஆகியவற்றில் வெளிப்படைத் தன்மை நிலவுவதை உறுதிப்படுத்த, அரசு சட்டம் கொண்டு வரக் கருதியிருப்பதாக தெரிவிக்கப்பட்டது. எனவே, இக்குழு, ஆய்வு வரம்பின் இனம் (11)-க்குத் தொடர்புடைய இந்த அம்சத்திற்கு முன்னுரிமை கொடுக்க முடிவு செய்தது. இக்குழு, ஒப்பந்தப்புள்ளி நடைமுறைகள், கொள்முதல்கள் ஆகியவற்றில் கொண்டு வரப்பட வேண்டிய மாற்றங்கள் குறித்த தன்னுடைய கருத்துக்களை முடிவு செய்து, இது தொடர்பாகச் செய்யப்படவேண்டிய சில அடிப்படையான சீர்திருத்தங்கள் குறித்து அதன் பரிந்துரைகளை முதல் அறிக்கையாக அளிக்கிறது.

* * *

அத்தியாயம் - 2

# ஒப்பந்தப்புள்ளி நடைமுறை

**பணிகள் மற்றும் கணக்குகள் விதிக்கோவை (Codes for Works and Accounts)**

தமிழ்நாடு பொதுப்பணித் துறை விதிக்கோவையும் (Tamil Nadu Public Works Department Code), தமிழ்நாடு பொதுப்பணி கணக்கு விதிக்கோவையும்(Tamil Nadu Public Works Account Code), நெடுஞ்சாலைகள், ஊரகப்பணிகள் துறை உள்ளிட்ட பொதுப்பணித் துறை மேற்கொள்ளும் அனைத்து கட்டுமானப் பணிகள் மற்றும் பராமரிப்புப் பணிகளை நெறிப்படுத்துகின்றன. தகுதிவாய்ந்த அதிகாரியால் திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்படுவதில் தொடங்கி, திட்டப்பணிகள் முடிவுறுவது வரையிலான அனைத்து நிலைகளிலும் நடைபெறும் பணிகளுக்கு இவ்விதிக் கோவைகள் வகை செய்கின்றன. பொதுவாக, சட்டப்படிக்கான அமைப்புகள் (Statutory Bodies) மற்றும் பொதுத்துறை நிறுவனங்களின் பணிகளும் இவ்விதிக் கோவைகளுக்கு உட்பட்டவையாகும். ஆனால், இத்தகைய அமைப்புகள் மற்றும் நிறுவனங்களுக்குரிய சிறப்புத் தன்மை வாய்ந்த சில பணிகள் இவ்விதிக் கோவைகளுக்கு உட்படமாட்டா. இவை தொடர்பாக, அவ்வவற்றின் நிர்வாகக் குழுக்கள் சொந்தமாக விதிமுறைகள் இயற்றியுள்ளன.

**தற்போதைய நிலை :**

2. வரையறுக்கப்பட்ட நடைமுறைகளும் முறைப்படுத்தும் விதிகளும் கடந்த 50 ஆண்டுகளுக்கும் மேலாக, பொதுவாக சிறப்பாக செயல்பட்டு வந்தாலும், அண்மைக் காலமாக, வரையறுக்கப்பட்ட நடைமுறைகள் வேண்டுமென்றே மீறப்படுவதும் தற்போதைய ஏற்பாட்டில் உள்ள சில குறைபாடுகளைச் சாதகமாக்கிக் கொண்டு, பொது நன்மையைப் புறத்தே தள்ளிவிட்டு, தமக்கு வேண்டிய நபர்களுக்கு, தகாத முறையில் பண ஆதாயம் கிடைக்கச் செய்வதுமான சில நடைமுறைகள் உருவாகியுள்ளன. இத்தகைய ஒழுங்கீனமான விதிமீறல் நடவடிக்கைகள், முறைகேடுகள் அனைத்திற்கும் எங்கும் பரவியுள்ள ஊழல்தான் காரணம் என்று நம்பப்படுகிறது.

**முறைகேடுகள் :**

3. இக்குழுவின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்ட சில குறிப்பிடத் தகுந்த முறைகேடுகள் கீழே தரப்பட்டுள்ளன :-

i) அங்காடி விலை வீதங்களைவிட மிக அதிகமான வீதங்களைப் பின்பற்றி, கட்டுமானப் பணிகளுக்கான துறை மதிப்பீடுகளை முதல் நிலையிலேயே வேண்டுமென்றே அதிகரித்துக் குறிப்பிடுவது.

ii) மதிப்பீட்டு வீதங்கள், நியாயமானவைதானா என்பதை, மதிப்பிடுவதற்கு ஆதாரமாக விளங்கக் கூடிய ஆவணமான, கட்டண வீத அட்டவணை (Schedule of Rates) நாளதுவரையிலானதாக்கப்பட வில்லை. ஏதேனும் ஒரு குறிப்பிட்ட நேர்வில், இவ்வீதங்களை மறுஆய்வு செய்து திருத்த நேரிட்டாலும், புதிய வீதங்கள் தற்காலிக அடிப்படையில்தான் நிர்ணயிக்கப்படுகின்றன.

iii) துறை நிர்ணயிக்கும் கட்டண வீதங்கள் மிகவும் கமுக்கமாக வைக்கப்பட்டுள்ளன. செல்வாக்கு உள்ளவர்களுக்கு -- (அ) நியாயமற்ற முறைகளால் வாய்ப்பு பெறமுடிகிறவர்களுக்கு மட்டும் -- அவை தெரியப்படுத்தப்படுகின்றன. இதனால் சாதகமான நபர்கள் தங்களுக்கு அதிக லாபம் கிடைப்பதற்குப் பொருத்தமான கட்டண வீதங்களைக் குறிப்பிட முடிகிறது.

iv) பகிரங்க ஒப்பந்தப்புள்ளிகள் கேட்கப்பட்டன என்று பதிவேடுகள் தெரிவித்த போதிலும், சாதகமான ஒப்பந்தக்காரர்கள் சிலருக்கு மட்டுமே துறை அதிகாரிகள் ஒப்பந்தப்புள்ளி அட்டவணைகளை வழங்குகின்றனர்.

v) ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்வது நியாயமாகவும், வெளிப்படையாகவும் செய்யப்படவில்லை என்பது மட்டுமின்றி, ஊழல் உட்பட புறத்தேயிருந்து வரும் சலுகைகளின் செல்வாக்குக்கு ஆளாகிற தனிப்பட்ட அதிகாரிகளின் விருப்பத்தின் அடிப்படையிலேயே அது இறுதியாக்கப்படுகிறது.

vi) பகிரங்க ஒப்பந்தப்புள்ளிகளைக் கேட்காமலேயே சாதகமான ஒப்பந்தக் காரர்களுக்கு நியமனம் மூலம் அரசு துறைப் பணிகள் வழங்கப் படுகின்றன.

vii) ஒப்பந்தப்புள்ளிகளை மதிப்பிடுதற்கும் ஏற்றுக் கொள்வதற்குமான நடைமுறை பகிரங்கமானதல்ல. எனவே, சலுகை அளிக்கவும் ஊழலுக்கும் அது வாய்ப்பளிக்கிறது.

viii) ஒப்பந்தக்காரர்கள், தங்களுக்குள்ளேயே திட்டமிட்டு ஒரு வட்டமாகச் செயல்பட்டு நியாயமான போட்டி ஒப்பந்தப்புள்ளிகளை பல பணிகளில் வழங்குவதைத் தடுத்து விடுகின்றனர்.

ix) ஒப்பந்தக் காரர்கள் நிறைவேற்றும் பணிகளைப் பார்வையிடுவதற்கு, பொறியியல் துறைகளில் உள்ள மேற்பார்வைப் பணியாளர்கள் போதிய கவனம் செலுத்துவதில்லை. இதனால் மொத்தத்தில் பணிகளின் தரம் மோசமாக உள்ளது.

x) மேல் நிலைகளிலிருந்து கீழ்நிலைவரை, எங்கும் பரவியிருக்கிற கபடம் நிறைந்த ஊழல் சூழ்நிலையில், பணியைக் குறைந்த தரமுடன் நிறைவேற்றும் ஒப்பந்தக்காரர்கள், தங்களின் குறைந்த தரமுள்ள பணிக்காக எந்த ஒரு முறையிலும் தண்டிக்கப்படாமல், அல்லது, அம்பலப்படுத்தப்படாமல் தங்களின் வணிகத்தில் தொடர்ந்து செழித்தோங்குகின்றனர்.

4. பொதுப்பணித் துறையின் முதுநிலை பொறியாளர்கள், சில அரசு நிறுவனங்கள், சில ஐ.ஏ.எஸ். அதிகாரிகள், பொதுப்பணிகளில் அனுபவம் கொண்ட நிதித்துறை அதிகாரிகள் ஆகியோருடன் இக்குழு தொடர்ந்து பேச்சுவார்த்தைகள் நடத்தியது. முதல் சுற்றுப் பேச்சுவார்த்தையின்போது குழுவின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்ட முறைகேடுகள், குழுவினால் வெளியிடப்பட்ட விரிவான வினாப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளன. நடைமுறையில் இயலக்கூடிய சில மாற்றங்கள் அதில் தெரிவிக்கப்பட்டிருந்தன. அத்தகைய மாற்றங்கள் விரும்பத்தக்கதா, சாத்தியமானதா என்பது குறித்து கருத்து கேட்கப்பட்டது. வினாப்பட்டிக்கு வரப்பெற்ற கருத்துக்களையும், விவாதங்களின்போது வெளியான கருத்துக்களையும் கவனமாகப் பரிசீலித்த பின்னர், ஒப்பந்தப் புள்ளி நடைமுறையில் வெளிப்படை தன்மையை உறுதி செய்வதற்காகவும், பொறியியல் பணிகளுக்காக ஒப்பந்தப்புள்ளிகளை வழங்குவதில் ஊழல், சலுகை, தொடர்பான முறைகேடுகள் ஆகியவற்றுக்கான வாய்ப்பைக் குறைக்கவும் குழு பின்வரும் கருத்துக்களையும் பரிந்துரைகளையும் தெரிவிக்கிறது.

**ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல் :**

5. ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்வதற்கான நடைமுறை, பொதுப்பணித் துறை விதிமுறைக் கோவையின் ஒரு முக்கிய பகுதியாகச் சேர்க்கப்பட்டுள்ளது. இது இணைப்பு XXIII ஆக சேர்க்கப்பட்டுள்ளது. அண்மைக்கால நடைமுறை பற்றி பொதுப்பணித் துறையின் 29-12-1992 ஆம் நாளிட்ட 1789 ஆம் எண் அரசாணையில்

விவரிக்கப்பட்டுள்ளது. பொதுவான பொறியியல் பணிகள் (General Engineering Works) தொடர்பாக அரசு துறைகள், அரசு நிறுவனங்கள் அனைத்திற்கான தேவையை நிறைவு செய்ய, இத்திட்டத்தின் கீழ் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்வது விரிவான முறையில் மேற்கொள்ளப்படலாம் என்று குழு பரிந்துரை செய்கிறது. இந்த மத்திய திட்டத்தின் கீழ் ஒப்பந்தக்காரர் ஒரு முறை பதிவு செய்து கொண்டு விட்டாரானால், பொதுவான பணிகளுக்காக வெவ்வேறு துறைகளுக்கு, அரசு நிறுவனங்களுக்கு அவர் தனியே பதிவு செய்து கொள்ள வேண்டிய அவசியமிருக்காது. சில துறைகளும், நிறுவனங்களும் தங்களின் சிறப்புத் தன்மை வாய்ந்த பணிகள் குறித்து, சில வரையறுக்கப்பட்ட, குறிப்பிட்ட நோக்கங்களுக்காக (peculiar to certain departments) தங்களின் சொந்த சிறப்பு ஒப்பந்தக்காரர்கள் பதிவேட்டை அந்தந்தத் துறையும், நிறுவனமும் தயார் செய்துகொள்ளலாம்.

6. நிறைவேற்ற தகுதியெனத் தாங்கள் கருதுகிறவாறு பணிகளின் நிதி மதிப்பினை ஒட்டி தற்போதுள்ள ஒப்பந்தக்காரர்களை ஐந்து வகையாக வகைப்படுத்தும் முறை (Categorisation of Contractors) தொடரப்படலாம்.

7. பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர்கள் அனைவரும் (வகை V ஒப்பந்தக்காரர்கள் உட்பட) மாநிலத்தின் எந்த ஒரு பகுதியிலும் அவரவர் வகையில் பணிகளுக்கு ஒப்பந்தப் புள்ளி அனுப்ப அனுமதிக்கப்பட வேண்டும்.

8. ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்து கொள்வதற்கான படிவம், அதனுடன் அளிக்கப்பட வேண்டிய விவரங்கள், பொதுப்பணித் துறை விதிக்கோவையின் XXIII ஆம் இணைப்பின் பிற்சேர்க்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன. இது தொடர்பாக குழு பின்வரும் மாறறங்களைப் பரிந்துரைக்கிறது.

i) வருவாய்த்துறை அதிகாரிகளிடமிருந்து செல்வநிலைச் சான்றிதழை (Solvency Certificate) அளிக்க வேண்டும் என்று கேட்பதற்குப் பதிலாக, விண்ணப்பதாரருக்குச் சொந்தமான இயங்கா சொத்துக்கள் குறித்து சான்றுறுதி அலுவலர் (Notary Public) முன் சான்றொப்பமிட ஆணை உறுதிப்பத்திரம் (affidavit) ஒன்றை தாக்கல் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படலாம்.

ii) I, II, III வகை ஒப்பந்தக்காரர்களைப் பொறுத்த வரை, விண்ணப்பதாரர் அவருடைய வருமானவரி விவரக் கணக்குகள் மீது அண்மைக்கால

வருமானவரி மதிப்பீட்டு (Income-tax assessment order) ஆணையைத் தாக்கல் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப் படலாம். IV, V வகையைப் பொறுத்தவரை, நாட்டுடைமை யாக்கப்பட்ட வங்கியிலிருந்து வேண்டிய வங்கி உத்தரவாதத்தை தாக்கல் செய்யுமாறு விண்ணப்பதாரர் கேட்டுக் கொள்ளப்படலாம்.

iii) பதிவு செய்ய விழையும் ஒரு நிறுவனம் அல்லது கூட்டு (Corporate Firm) நிறுவனத்தைப் பொறுத்தவரையில் தணிக்கையாளரின் ஆண்டறிக்கையின் (Auditor's Annual Report) அண்மைக்கால நகல் ஒன்றை அளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படலாம்.

iv) விண்ணப்பதாரர்கள் அனைவரும் அவரவர் விற்பனை வரி பதிவுச் சான்றிதழை அளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படலாம்.

v) பதிவு செய்யும் அதிகாரி, குறிப்பிட்ட பணியினைச் செயல்படுத்துவதற்காக பதிவு செய்ய வரும் விண்ணப்பதாரரின் தொழில் நுட்பத் தகுதியினைப் பற்றிய அனைத்து விவரங்களையும் தெரிந்து கொள்வதற்காக, பொதுப்பணித்துறை விதிக்கோவையின் XXIII ஆம் இணைப்புடன் பிற்சேர்க்கையின் படிவம் 2-ல் வரையறுக்கப்பட்டவாறு முழு விவரங்களையும் விண்ணப்பதாரர் கண்டிப்பாக கொடுக்க வேண்டும் என கேட்டுக் கொள்ளப்பட வேண்டும்.

9. முதலில் IV, V வகைகளைப் பொறுத்தவரை செயற் பொறியாளர் நிலையிலும், I, II, III வகைகளைப் பொறுத்தவரை மேற்பார்வைப் பொறியாளர் நிலையிலுமாக ஒப்பந்தக்காரர்களை இரண்டு நிலைகளில் பதிவு செய்யலாம். செயற்பொறியாளர் நிலையிலான பதிவு செய்யும் பணியை செயற்பொறியாளர், மூதுநிலை வரைவு குறிப்பு அதிகாரி (Senior Drafting Officer), கோட்ட கணக்காளர் (Divisional Accountant) ஆகியோரடங்கிய குழு ஒன்று முடிவு செய்ய வேண்டும். மேற்பார்வைப் பொறியாளர் நிலையிலான பதிவு செய்யும் பணியை, மேற்பார்வைப் பொறியாளர், தலைமை வரைவு குறிப்பு அதிகாரி (Head Drafting Officer), கோட்ட கணக்காளர் ஆகியோரடங்கிய குழு ஒன்று முடிவு செய்ய வேண்டும். மேற்பார்வைப் பொறியாளர் செய்த பதிவுகளைத் தலைமைப் பொறியாளருக்குத் தெரிவிக்க வேண்டும். மாநிலத்தில் மேற்பார்வைப் பொறியாளர்கள் செய்த அத்தகைய பதிவுகள் அனைத்தையும் உள்ளடக்கிய மாநிலப் பட்டியல் ஒன்றை அவர் தயாரிக்க வேண்டும். அனைத்துத் துறைகளில் / அரசு நிறுவனங்களில் உள்ள பொதுவான பொறியியல் பணிகள் சம்பந்தப்பட்ட அனைத்து அதிகாரிகளுக்கும் மாநிலப் பட்டியல் சுற்றனுப்பப்படவேண்டும்.

10. மாநிலப் பட்டியலை ஒவ்வோர் ஆண்டும் ஏப்ரலில் தலைமைப் பொறியாளர் ஆய்வு செய்திட வேண்டும். ஒரு துறையில் / அரசு நிறுவனத்தில் தொடர்ந்து மூன்று ஆண்டுகளாக ஒப்பந்தப்புள்ளி நடைமுறைகளில் கலந்து கொள்ளாத ஒப்பந்தக்காரர்களின் பெயர்கள் அவர்களுக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டு பட்டியலிலிருந்து நீக்கப்படவேண்டும்.

11. பொதுப் பணிகள் அனைத்தையும் நிறைவேற்றுவதற்குரிய தொழில் ரீதியிலான தகுதியையும் நாணயத்தையும் உறுதி செய்வதற்கான முதல் படி, ஒப்பந்தக் காரர்களைப் பதிவு செய்யும் நடைமுறையாகும். எனவே, விண்ணப்பதாரரின் தொழில் நுட்ப அடிப்படைக் கட்டமைப்பு (technical infrastructure), அவரிடம் உள்ள நிதி ஆதாரங்கள் ஆகியவற்றுடன் அவரின் பின்னணி, அனுபவம், கடந்த கால சாதனை ஆகியவற்றை முழுவதுமாக சரிபார்க்க போதுமான கவனம் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். விண்ணப்பதாரர் எங்கேயாவது தன் பணியில் தவறிழைத்ததாகப் பதிவு செய்யும் அதிகாரிக்குத் தகவல் தெரிய வந்தால், சம்பந்தப்பட்ட துறை / நிறுவனத்திடம் இது பற்றி தெரிந்து கொள்ள வேண்டும். அதன் பின்னர், விண்ணப்பதாரரின் தகுதியை மதிப்பிட வேண்டும். இந்த நடைமுறையில் கவனமாகப் பரிசீலனை செய்த பின்னர், ஒப்பந்தக் காரர் பதிவு செய்து கொண்டால், பின்னர் பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர் ஒருவர் வழக்கமான நடைமுறையில் ஒரு பணிக்காக ஒப்பந்தப்புள்ளியைத் தாக்கல் செய்யும்போது விரிவான நேரிடை சரிபார்ப்புப் பணியை செய்ய வேண்டிய அவசியம் இருக்காது என்று குழு வலியுறுத்திக் கூற விழைகிறது. ஒரு குறிப்பிட்ட பணிக்கான ஒப்பந்தப்புள்ளிகளை மதிப்பிடும் நிலையில், பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர்கள் தெரிவித்த போட்டி வீதங்களுக்கு மட்டுமே முக்கியத்துவம் அளிக்கப்படுமேயல்லாமல், அந்த நிலையில், ஒப்பந்தக்காரர்களின் முந்தைய வரலாற்றை அல்லது பின்னணியை சரிபார்க்க அவ்வளவாக முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டியதில்லை.

## கட்டண வீதங்களின் அட்டவணை (பொது) - Schedule of Rates (General)

12. எந்த ஒரு பணிக்கும் சரியான மதிப்பீட்டைத் தயாரிப்பதற்குரிய மிக முக்கியமான, அடிப்படை ஆவணம் கட்டண வீத அட்டவணையாகும். பொதுப்பணித் துறையில் இதனை எப்பொழுதும் அன்றைய நிலவரப்படி தயாரித்து வைத்திருக்க வேண்டும் என்றும், இதனை ஒவ்வோர் ஆண்டும் ஆய்வு செய்ய வேண்டும். என்றும், அங்காடி நிலைக்கு ஏற்ப இந்த வீதங்களில் அவசியமான திருத்தங்கள் செய்யப்பட வேண்டும் என்றும் துறை ஆணைகள் கேட்டுக் கொள்கின்றன. ஆண்டுதோறும் இவ்வாறு ஆய்வு செய்வதும், திருத்தங்கள் செய்வதும் முறையாக மேற்கொள்ளப் படுவதில்லை என்றும், அவ்வாறு மேற்கொள்ளப்பட்டாலும் அச்சமயத்தில் நிலவுகின்ற சில தற்காலிக விவரங்களின் அடிப்படையிலேயே மேற்கொள்ளளப்படுகின்றன என்றும்

குழுவுக்கு தெரிய வந்துள்ளது. உதாரணமாக, சில சமயங்களில், ஒரு குறிப்பிட்ட கால அளவில், மதிப்பிடப்பட்ட வீதங்களுக்குக் (estimated rates) குறைவாகவோ அல்லது மேற்பட்டோ உள்ள சதவீதத்தில் ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தால், அதை மட்டும் கவனத்தில் கொண்டு, இந்த சதவீதத்தைப் பிரதிபலிக்கும் வகையில் கட்டண வீத அட்டவணையில் பெயரளவுக்கு மாற்றங்கள் செய்யப்படுகின்றன என்று குழுவுக்குத் தெரிய வருகிறது. இது அதிருப்தி அளிக்கும் ஒரு நடைமுறையாகும். கட்டண வீத அட்டவணையை முடிவு செய்ய அப்போது நிலவுகின்ற வெளி அங்காடி வீதம் மிக முக்கியமானதாகும். மதிப்பிடப்பட்ட வீதங்களுக்கு (estimated rates) மேற்பட்டோ அல்லது குறைவாகவோ ஒப்பந்தக்காரர்கள் தெரிவித்த வீதங்கள், கட்டணவீத அட்டவணையை நிர்ணயிக்க அடிப்படையாகக் கருதப்பட முடியாது. ஏனெனில் ஒப்பந்தக்காரர்கள் பல வேறு காரணங்களை மனத்தில் கொண்டு தங்களது வீதங்களைக் குறிப்பிடுகிறார்கள். உதாரணமாக, ஊழல் அதிகாரிகளின் எதிர்பார்ப்பை நிறைவு செய்வதற்காக அதிகப்படியான வீதங்களைக் குறிப்பிடுவார்கள், அல்லது தங்களுக்குள்ளேயே திட்டமிட்டுக்கொண்டு, அதிக லாபம் பெறுவதற்காக, எல்லோருமே ஒருமுகமாக அதிகப்படியான வீதங்களைக் குறிப்பிடுவார்கள். ஆகையால் அவர்கள் குறிப்பிடும் வீதங்களின் அடிப்படையில் நிருவாகத்தின் கட்டண வீத அட்டவணையை நிர்ணயிப்பது சரியாகாது. சரிநிலையான அங்காடி நிலவரத்தை ஒட்டியே கட்டண வீத அட்டவணை நிர்ணயிக்கப்பட வேண்டும். அதன் துல்லியமான தன்மை, ஒப்பந்தப்புள்ளி நடைமுறையின் நாணயத்தைப் பாதுகாப்பதற்கு மிகவும் முக்கியமானதாகும்.

## தலைமையிடத்தில் சிறப்பு பிரிவு (Special Cell at Headquarters)

13. பொதுப்பணித் துறை தலைமையிட அலுவலகத்தில் போதுமான அனுபவப் பின்னணியுடன் உள்ள மேற்பார்வைப் பொறியாளர் அல்லது முதுநிலை செயற் பொறியாளர் தலைமையில் சிறப்புப் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டும் என குழு பரிந்துரைக்கிறது. கட்டண வீத அட்டவணையை ஆய்வு செய்யவும், திருத்தி அமைக்கவும் இவர் பொறுப்பாவார். இப்பிரிவில் புள்ளியியல் துறை, மண்ணியல் சுரங்கங்கள் துறை (Department of Geology), தொழிலாளர் நலத்துறை ஆகிய துறைகள் ஒவ்வொன்றிலிருந்தும் ஒரு அதிகாரி இடம்பெற வேண்டும், இந்தப் பிரிவு ஆண்டு முழுவதும் செயல்பட வேண்டும். கண்டறியப்பட்ட புள்ளி விவரங்களின் அடிப்படையில் பல்வேறு பணிகளுக்காக தொழிலாளர் கூலி, பொருள் நிலை எண் (material constant) ஆகியவற்றைத் திருத்தி அமைப்பதில் அது ஈடுபடவேண்டும். உரியவாறு பகுப்பாய்வு செய்த பின்னர், கட்டண வீதங்கள் அட்டவணையில் சேர்ப்பதற்காக புதிய

பொருள்களையும் புதிய இனங்களையும் கண்டறியவேண்டும். ஒவ்வோர் ஆண்டும் பிப்ரவரி மாதத்தில் இப்பிரிவு விரிவான குறிப்பைச் சுற்றனுப்ப வேண்டும். அவசியமானவிடத்து கட்டண வீதங்களில் மாற்றங்களை அதில் சேர்க்க வேண்டும். அவ்வாறு சேர்ப்பதற்கு ஆதரவாக அவசியமான பொருட்களுடன் புதிய இனங்களை அறிமுகப்படுத்தவேண்டும். இந்த நோக்கத்திற்காக கூட்டப்படவிருக்கும் பொதுப் பணித்துறை மேற்பார்வைப் பொறியாளர்கள் மற்றும் ஏனைய துறைகளின் கூட்டத்தில் இந்த குறிப்பு பரிசிலிக்கப்பட வேண்டும். அதன் பின்னர் கட்டண வீதங்கள் அட்டவணை இறுதியாக்கப்பட வேண்டும். பொதுப்பணித் துறைத் தலைமைப் பொறியாளர் தொடக்க நிலையிலிருந்து மாநாடு கூட்டப்படும் நிலை வரை அந்த ஆண்டுக்கான இப்பணியின் அட்டவணையைத் தயாரிக்க வேண்டும். கட்டண வீதங்களை இறுதியாக வழங்குவதற்கான கால அட்டவணையையும் தயாரிக்க வேண்டும். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அனைவரும் இந்த கால அட்டவணையை உரியவாறு பின்பற்றுமாறு தலைமைப் பொறியாளர் வலியுறுத்த வேண்டும்.

14. பொதுப்பணித் துறையின் தலைமையிடத்தில் இயங்கும் இந்த சிறப்புப் பிரிவு, விழிப்புப் பணிக்குப் பொறுப்பாக உள்ள மேற்பார்வைப் பொறியாளரின் நிருவாக ஆய்வு வரம்புக்குள் வரவேண்டும் என குழு மேற்கொண்டும் பரிந்துரை செய்கிறது. பரவலான நிலையில் சலுகைகளையும், ஊழலையும் செய்ய வழிவகுக்கிற முறை கேட்டினைத் தடுக்க இப்பணி முழுவதற்கும் தேவையான ஆற்றுப்படுத்தும் (orientation) பயிற்சியை இது உறுதி செய்யும்.

## கட்டண வீதங்கள் அட்டவணை (சிறப்பு) - Schedule of Rates (Special)

15. பொதுவான அனைத்துப் பொறியியல் பணியாளர்களுக்கும் கட்டண வீத அட்டவணையைத் தயாரித்து வைத்து வர பொதுப்பபணித்துறை பொறுப்பாக இருக்கும்போது, சில சிறப்புப் பொறியியல் பணிகள் செய்யும் அரசு துறைகள், அரசு நிறுவனங்கள் அவற்றுக்குத் தொடர்பான சிறப்பான கட்டண வீதங்கள் அட்டவணையைத் தயாரிக்கலாம். நவீன சாதனம் அல்லது தொழில்நுட்பவியல் அல்லது அவற்றின் தேவைக்கு ஏற்ப தனித்தன்மை வாய்ந்த சிறப்பு கட்டண வீத அட்டவணை தயாரித்தலும், அதன் ஆண்டு ஆய்வும், இன்றுள்ளவாறு அதனை வைத்து வருதலும், துறையில் / நிறுவனத்தில் உள்ள ஒரு சிறப்புப் பிரிவால் கவனிக்கப்பட வேண்டும். இந்த சிறப்புப் பிரிவு, துறையின் / நிறுவனத்தின் தலைமை விழிப்புப் பணி அதிகாரியின் நிருவாக ஆய்வு வரம்பின் கீழ் இயங்க வேண்டும்.

**மதிப்பீட்டிற்கு மேற் மிகையாக ஆகும் செலவுக்கு நிதி ஒதுக்குவதை நிறுத்திவிடுதல்**

16. ஒரு திட்டத்தின்கீழ் குறிப்பிட்ட பணிக்கு மதிப்பீடு ஒன்றைத் தயாரிக்கும் போது, தற்போதுள்ள நடைமுறைப்படி (1) எதிர்பாராத இனங்களுக்கு (unforeseen items) செலவு செய்ய மதிப்பீட்டுச் செலவில் கூடுதலாக 5 சதவீதமும் (2) சிறு மேற்பார்வை, சில்லறை செலவுகளுக்காக (Petty supervision and contingencies) மதிப்பீடு செலவில் கூடுதலாக 5 சதவீதத்திற்கும் வகை செய்ய இடமிருக்கிறது. இந்த வசதியைத் தவிர, மதிப்பீட்டை அனுமதிக்கும் அதிகாரிக்கு, மதிப்பீட்டிற்கு மேல் 5 சதவீதம் வரை கூடுதலாக அனுமதியளிக்க பொதுவான அதிகாரமும் உண்டு. இவ்வாறாக, கள அதிகாரிகள் 'எதிர்பாரா' இனங்கள் குறித்த செலவையும் அதுபோன்ற ஏனைய செலவையும் ஏற்பதற்கு மதிப்பீட்டுச் செலவில் 15 சதவீதம் மொத்தத் தொகை கிடைக்கிறது. தற்போது ஒரு சில கோடி ரூபாய் மதிப்பீடுகள் உள்ள பணிகள் சாதாரணமாக உள்ளன. அத்தகைய மதிப்பீடுகளில் 15 சதவீதத் தொகை, கள அதிகாரிகள், தங்களுடைய விருப்ப உரிமையின்படி (discretion) முடிவு செய்யக் கூடிய சில விஷயங்கள் குறித்து செலவு செய்வதற்கு அவர்களிடம் கணிசமான தொகையாக (பல இலட்சம் ரூபாய்) இருக்கும். இத்தகைய ஏற்பாட்டு முறையில் பெருமளவு ஊழல் ஏற்படக்கூடிய வாய்ப்புள்ளது என்பது வெளிப்படை.

17. மேற்கூறிய விஷயத்தின் அனைத்துக் கூறுகள் குறித்தும் குழு உன்னிப்பாகப் பரிசீலித்தது. மேற்பார்வைப் பணிகளுக்காக, வேலை நிதி ஊதியம் பெறும் பணியாளர்களாக (work charged staff) அவ்வப்போது தனிப்பட்ட அடிப்படையில் சில சார்நிலைப் பணியாளர்களை அமர்த்தும் மிகப்பழைய நடைமுறையின் அடிப்படையில் பல ஆண்டுகளாக 'சிறு மேற்பார்வை' என்று விளக்கப்படும் இனம் தொடர்ந்து இருந்து வந்துள்ளது. அண்மை ஆண்டுகளில் இந்த நடைமுறை படிப்படியாக குறைந்துள்ளது. கீழ் மட்டம் வரையிலுள்ள பணியாளர்கள் அனைவரும் தற்போது முறையான பணியாளரமைப்பின் (regular establishment) அங்கமாக இருந்து, பணியாளரமைப்புப் பட்டியலிலேயே தங்களுடைய சம்பளத்தையும் படிகளையும் பெறுகின்றனர். எனவே, 'சிறு மேற்பார்வை' என்ற இனத்திற்காக மதிப்பீட்டிலேயே ஒரு மொத்த நிதி ஒதுக்கம் செய்ய வேண்டிய அவசியம் இப்போது இல்லை. எதிர்பாரா இனச் செலவிற்காக மற்றுமொரு 5 சதவீத தனி ஒட்டுமொத்த நிதி ஒதுக்கம் செய்யவும் எந்தவித அவசியமுமில்லை, ஏனெனில், அனுமதியளிக்கும் அதிகாரி, அத்தகைய செலவினங்களை ஏற்பதற்கு 5 சதவீதம் வரையில் மதிப்பீட்டிற்குக் கூடுதலான தொகைக்கு அனுமதி வழங்குவதற்குத் தனக்குள்ள வழக்கமான அதிகாரங்களைச் செலுத்தலாம். பொது நிதியிலிருந்து இத்தன்மையான செலவு செய்வது நேர்மையானது, சரியானது என்று கருதும்போது அத்தகைய இனங்களை, அனுமதியளிக்கும் அதிகாரி, தனக்குள்ள

வழக்கமான அதிகாரங்களைக் கொண்டு இத்தகைய இனங்களை ஏற்பது பொருத்தமானதாக இருக்கும். ஏனெனில் மதிப்பீட்டிற்குக் கூடுதலாக மிகையான செலவுக்கு வழக்கமாக அளிக்கப்படும் அத்தகைய அனுமதிகள் தணிக்கையில் பரிசிலிக்கப்பட்டு நியாயமற்ற அனுமதிகள் வெளிக் கொணரப்படும். ஆனால், 'எதிர்பாரா' இனச் செலவு என தற்போது செய்வது போல 5 சதவீத தனிப்பட்ட ஒட்டுமொத்த நிதி ஒதுக்கத்தின் மூலம் ஏற்கப்படுமாயின், கூடுதல் செலவு, அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டில் ஒரு பகுதியாகவே கருதப்பட்டு, இது குறித்து குறிப்பாக தணிக்கையில் வினா எழுப்பப்படாமலே போய் விடும். இக் கருத்துக்களின் அடிப்படையில், குழு பின்வருமாறு பரிந்துரைக்கிறது.

(1) 'எதிர்பாரா இனங்களுக்காக' தற்போது கூடுதலாக ஒதுக்கப்பட்டுவரும் 5 சதவீத நடைமுறை நிறுத்தப்பட வேண்டும்,

(2) 'சிறு மேற்பார்வை', 'எதிர்பாரா செலவு' ஆகியவற்றுக்காக தற்போது மற்றுமொரு 5 சதவீத தொகை ஒதுக்கப்பட்டு வரும் நடைமுறை 'எதிர்பாராச் செலவினத்திற்காக' மட்டுமே 2 1/2 சதவீதமாகக் குறைக்கப்பட வேண்டும்.

**ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிப்பு (Notice Inviting Tender - NIT)**

18. குறிப்பிட்ட பணிக்கான ஒப்பந்தப்புள்ளிகளைக் கோரும் அறிவிப்புகளை வெளியிடுவதுதான் ஒப்பந்தப்புள்ளி நடைமுறையின் முதல்படி. இதற்காகத் தகுதிவாய்ந்த அதிகாரி, நிருவாக ஒப்புதலையும், தொழில் நுட்ப ஒப்புதலையும் அளித்திருக்க வேண்டும் என்பதுதான் பொதுப்பணித் துறையின் விதிமுறை. ஆனால், தொழில்நுட்ப ஒப்புதலைப் பெறக் காத்திராமலேயே பல நேர்வுகளில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன என்பது குழுவின் கவனத்திற்கு வந்துள்ளது. அவசரத் தன்மை வாய்ந்த பணிகளைத் தவிர (இது குறித்து அறிக்கையின் பிற் பகுதியில் தனியாக விவரிக்கப்பட்டுள்ளது). ஒரு பணிக்கான தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்ட பின்னர்தான், ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட வேண்டுமென்ற கண்டிப்பான விதியைக் குழு பரிந்துரைக்கின்றது. தொழில்நுட்ப ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது பற்றிய குறிப்பு ஒன்றை ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிப்பு ஒவ்வொன்றிலும் குறிப்பிட வேண்டியது பயனுள்ள காப்பாக இருக்கும்.

**பகிரங்க ஒப்பந்தப்புள்ளி**

19. மேலே 41 ஆம் பத்தியில் விவரிக்கப்பட்டுள்ளவை நீங்கலாக, அனைத்துப் பணிகளும் பகிரங்க ஒப்பந்தப்புள்ளி நடைமுறையைப் பின்பற்றி அளிக்கப்பட வேண்டும்.

பின்வரும் பத்திகளில் குறிப்பிட்டுள்ளபடி, இந்த நடைமுறையின் முக்கியக் கூறுகள் பின்வருமாறு:-

(1) நடைமுறையின் வெளிப்படைத் தன்மை,

(2) இயன்ற வரையில் பல ஒப்பந்தப் புள்ளிகளைப் பெறுவதற்கு ஒப்பந்தப் புள்ளி கோரும் அறிவிப்பைப் போதுமான அளவுக்கு விளம்பரப்படுத்தல்,

(3) பொது நலனைக் கருத்திற்கொண்டு, மிகவும் அனுகூலமான வீதத்தில் ஒப்பந்தப் புள்ளிகளை அளித்தல்,

(4) தன்னிச்சையாக, சாதகமான நபர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்துகிற நிலையைத் தவிர்த்தல்.

**விளம்பரம்**

20. பணிக்கான நிருவாக ஒப்புதலும் தொழில்நுட்ப ஒப்புதலும் அளிக்கப்பட்டவுடன், வரையறுக்கப்பட்ட நிதி வரம்புக்கிணங்க, பணிக்கு அனுமதியளிக்கத் தகுதிவாய்ந்த துறை அதிகாரி, பணிக்கான ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிப்பை வெளியிட வேண்டும். ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிப்பு தமிழிலும் ஆங்கிலத்திலும் முதன்மையான செய்தித்தாள்களில் வெளியிடப்பட்டும், மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள், ஊராட்சி அலுவலகங்கள், மாவட்ட அளவு வரையில் பொதுப் பணித்துறை அலுவலகங்கள் ஆகிய இடங்களில் அறிவிப்புப் பலகைகளில் ஒட்டப்பட்டும் பரவலாக விளம்பரப்படுத்தப்பட வேண்டும். இதற்கான செய்தித் தாள்களை, பணியின் மதிப்பையும், நல்ல விளம்பரத்தை அளிப்பதற்கான செய்தித்தாள்கள் விற்பனையாகும் எண்ணிக்கையையும் கருத்திற் கொண்டு, அரசு குறிப்பிட வேண்டும். ரூ.10/- இலட்சத்திற்கு மேற்பட்ட மதிப்புடைய பணிகளைப் பொறுத்தமட்டில், அரசு பத்திரிக்கையான 'தமிழரசில்' வெளியிடுவதற்காகவும் ஒப்பந்தப் புள்ளி கோரும் அறிவிப்பை அனுப்பவேண்டும். ரூ.10/- இலட்சத்திற்கு மேற்பட்ட மதிப்புடைய பணிகளுக்காக மாநிலத்தில் பல்வேறு அதிகாரிகள் வெளியிடும் ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிப்புகள் அனைத்தின் விளம்பரமும் தமிழரசு பத்திரிக்கையில் வெளியிடப்படுவது ஒரு வழக்கமான முறையாக இருக்கவேண்டும். தமிழரசு பத்திரிக்கையில் வெளியிடப்படுவதுடன், ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிப்புகள் அனைத்தும் இந்திய வணிக பத்திரிக்கைகள், இந்திய பில்டர்ஸ் அஸோஸியேஷன் (Builders Association of India) ஆகியவற்றுக்கும் அனுப்பப்பட வேண்டும்.

**மாவட்ட, மாநில அளவிலான விளம்பரம்**

21. ஒவ்வொரு மாவட்டத்திலும் அவ்வப்போது வெளியிடப்படும் ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிப்புகளுடன் கூடிய முறையான வெளியீடு ஒன்று அலுவல் முறைப்படி வெளியிடக்கூடுமாயின் (officially published), அவ்வாறு வெளியிடப்படுவது முறையானதாகவும் மிகவும் செவ்வையாகவும் இருக்கும். ஒன்றுக்கு மேற்பட்ட மாவட்டங்கள் தொடர்பான அல்லது வரையறுக்கப்பட்ட மதிப்புக்கு மேற்பட்ட மிகப் பெரிய பணிகள் தொடர்பான ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிப்புகளைப் பொறுத்தமட்டில், அதுபோன்றே மாநில தலைமையிடத்தில் அரசு வெளியீடு வெளியிடப்படுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படலாம். மாவட்ட அளவிலும் மாநில அளவிலும் வெளியீடுகள் வெளியிடப்படுவதற்கான பொறுப்பு, இதற்கென்றே குறிப்பாக நியமிக்கப்பட்டுள்ள அதிகாரிகளின்மீது (designated officers) நிர்ணயிக்கப்படலாம். ஒப்பந்தப்புள்ளி கோரும் அனைத்து அதிகாரிகளும் - மாவட்ட அளவிலும் மாநில அளவிலும் ஒப்பந்தப் புள்ளி கோரும் அறிவிப்புகளின் நகல்களை வெளியீடுகளில் சேர்ப்பதற்கு இவ்வாறு நியமிக்கப்பட்ட அதிகாரிகளிடம் அளிப்பதற்கு ஆணைகள் மூலம் கடமைப்பட்டவர்களாவர்.

**ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களை வழங்குதல் (Supply of Tender documents)**

22. பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர் எவரும் ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிப்புகளுக்குப் பதிலளிக்கவும், குறிப்பிட்ட கட்டணம் செலுத்துவது உட்பட, வரையறுக்கப்பட்ட நடைமுறைகளுக்கிணங்க நடந்து கொண்ட பின்னர் ஒப்பந்தப்புள்ளி விவர அட்டவணைத் தாள்களைக் கேட்டுப் பெறவும் உரிமையுடையவராவர். ஒப்பந்தப்புள்ளி அட்டவணை விதங்களின் நகல்களை வட்ட அலுவலகங்களில் / வட்டார வளர்ச்சி அலுவலகங்களில் / மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் விற்பனைக்குக் கிடைக்கச் செய்ய வேண்டும். அப்போதுதான் ஒப்பந்தப்புள்ளி விதங்களைப் பெற விழையும் ஒப்பந்தக்காரர்கள், கால விரயமின்றி உடனடியாக அவற்றைப் பெறக்கூடும்.

23. ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிப்பு வெளியிடப்படும் நாளுக்கும், ஒப்பந்தப்புள்ளிகளைப் பிரித்துப் பார்க்கும் நாளுக்கும் இடையே போதுமான கால அளவு உள்ளதா என்பது உறுதிசெய்யப்படவேண்டும். இக்கால அளவு, ரூ.15/- இலட்சம் வரை மதிப்புள்ள பணிகளுக்கு 15 நாட்களுக்கும், ரூ.25/- இலட்சம் வரை மதிப்புள்ள பணிகளுக்கு 3 வாரங்களுக்கு குறையாமலும், பெரும் பணிகளுக்கு அல்லது சிறப்புப் பணிகளுக்கு குறைந்தது 4 வாரக் காலமும் இருக்க வேண்டும். மாநிலத்திற்கு வெளியே இருக்கும் முதன்மையான, பெயர்பெற்ற ஒப்பந்தக்காரர்களும் ஒப்பந்தப்புள்ளி

அட்டவணை வீதங்களை வாங்கவும் பணியிடத்தைப் பார்வையிட்டு அவசியமான ஆய்வை மேற்கொள்ளவும் பின்னர், வரையறுக்கப்பட்ட காலத்திற்குள் தங்களுடைய ஒப்பு அறிவிப்புகளை அளிக்கவும் இக்கால அளவு அவசியம்காகவும் போதுமானதாகவும் இருக்கும்.

**ஒப்பந்தப்புள்ளிகளை பிரித்துப் பார்த்தலும் அவற்றை மதிப்பீடு செய்தலும் - ஒப்பந்தப்புள்ளி ஆய்வுக்குழு (Tender Scrutiny Committee - TSC)**

24. ஒப்பந்தப்புள்ளிகளைப் பிரித்துப் பார்த்து மதிப்பீடு செய்யும் பணி நடைமுறையின் அடுத்தக்கட்டப் பணி இந்தப் பணி ஒரே ஒரு நபருக்குப் பதிலாக மூன்று அதிகாரிகள் அடங்கிய குழு ஒன்றிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். இக்குழு, "ஒப்பந்தப்புள்ளி ஆய்வுக் குழு" என அழைக்கப் பெறும். இக்குழுவின் அமைப்பு பற்றிய விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :-

| **பணியின் தன்மை** | **ஒப்பந்தப்புள்ளி ஆய்வுக் குழுவின் அமைப்பு** |
|---|---|
| (1) ரூ.5/- இலட்சம் வரை மதிப்புள்ள பணிகள் | செயற்பொறியாளர், கோட்டக் கணக்கர், தலைமை வரைபட அதிகாரி. |
| (2) ரூ.5/- இலட்சத்திற்கு மேற்பட்டு மற்றும் ரூ.15- இலட்சம் வரை மதிப்புள்ள பணிகள். | 2) கண்காணிப்புப் பொறியாளர், கணக்கு அலுவலர், தலைமை வரைபட அதிகாரி. |
| (3) ரூ.15/-இலட்சத்திற்கு மேல் மதிப்புள்ள பணிகள் | 3) தலைமைப் பொறியாளர், முதன்மைத் தலைமை வரைபட அதிகாரி, முதுநிலை கணக்கு அலுவலர். |

25. சட்டப்படிக்கான அமைப்புகள், பொது நிறுவனங்கள் ஆகியவற்றில் ஒப்பந்தப்புள்ளி ஆய்வுக் குழுவின் அமைப்பு, சட்டப்படிக்கான அமைப்பிற்குள் / நிறுவனத்திற்குள் பொருத்தமான பதவித் தரத்திலுள்ள அதிகாரிகளை நியமிப்பதன் அடிப்படையில் முடிவு செய்யப்பட வேண்டும். அமைப்பிற்குள் இதற்காக ஒத்த பதவித் தரத்தில் அதிகாரிகளை நியமிப்பது சாத்தியமாக இல்லாதபோது, அதே தொழிலில் ஈடுபட்டுள்ள ஏனைய துறைகளில், சம பதவித் தரத்திலுள்ள அதிகாரிகளின் பணிகளைப்

பயன்படுத்திக் கொள்ளப்படலாம். இது குறித்த முடிவு, சம்பந்தப்பட்ட தலைமைப் பொறியாளரால் எடுக்கப்படவேண்டும்.

26. ஒப்பந்தப்புள்ளிகள் சில நேரங்களில் சில நிர்வாகக் காரணங்கள் காரணமாக முதற்கண் அறிக்கையிட்ட நாளல்லாமல் வேறொரு நாளில் பிரித்துப் பார்க்கப்படுவதாகக் குழுவின் கவனத்திற்கு வந்துள்ளது. வெளிப்படை தன்மையைத் தோல்வியுறச் செய்யும் இந்த முறையற்ற நடைமுறை நிறுத்தப்பட வேண்டும். அசாதாரணமான சில நேர்வுகளில் ஒப்பந்தப்புள்ளி பிரித்துப் பார்க்கப்படும் நாளை, நியாயமான காரணங்களுக்காக ஒத்திவைக்க வேண்டியிருந்தால், அவ்வாறு நாளைத் தள்ளிப் போடுவதற்கான காரணமும் மூல அறிவிப்பு பொன்றே நன்கு விளம்பரப்படுத்தப்பட வேண்டும்.

**சதவீத ஒப்பந்தப்புள்ளி**

27. ரூ.50/- இலட்சம் வரையில் மதிப்புள்ள பணிகளுக்கு, இனம் வீதத்தில் ஒப்பந்தப்புள்ளிகளைக் (item rate tender) கோருவது தற்போதைய நடைமுறையாகும். நடைமுறையை எளிமையாக்குவதற்கும், ஒப்பந்தப் புள்ளிகளை ஒப்புநோக்குவதை எளிமைப் படுத்தவும் ரூ.20/- இலட்சம் வரை மதிப்புள்ள பணிகளுக்கு (பணியின் அனைத்து இனங்களும் அட்டவணை வீதங்களிலிருந்து வந்தால்) சதவீத ஒப்பந்தப்புள்ளி (Percentage rate tender) முறை பின்பற்றப்படலாமென குழு பரிந்துரைக்கிறது. இந்த புதிய நடைமுறையைப் பின்பற்றிய பின்னர், ஓராண்டில் கிடைக்கும் அனுபவத்தின் அடிப்படையில், சதவீத ஒப்பந்தப் புள்ளி முறைக்கான நிதி வரம்பு நடைமுறைப்படுத்தக் கூடியதாகக் கருதப்படுமாயின், அவ்வரம்பு உரியவாறு உயர்த்தப்படலாம்.

**மதிப்பீடு செய்வதற்கான வரையறை (Criteria for evaluation)**

ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டுக் குழு நடப்பு விவர அட்டவணை வீதங்களுக்கிணங்கவும், விவர அட்டவணையில் குறிப்பிடப்படாத இனங்களைப் பொறுத்த வரையில் நிலவும் அங்காடி விலை வீதத்திற்கிணங்கவும் அனைத்து ஒப்பந்த ஆவணங்களில் கொடுக்கப் பட்டுள்ள வரையறை அளவுக்கிணங்க (criteria), ஒப்புமை அறிக்கையைத் தயாரிக்க வேண்டும். வேறெந்த வரையறையும் இந்த மதிப்பீட்டிற்குப் பொருந்தாது. ஆனால், ஒப்பந்தப்புள்ளி நடைமுறையில் பங்கு கொள்வதனின்று ஏதேனும் பிற துறையில் ஒரு ஒப்பந்தக்காரர் தடைசெய்யப்பட்டுள்ளதாக, ஒப்பந்தப் புள்ளி ஆய்வுக் குழுவின் கவனத்திற்கு வரப் பெற்றால், பணியை அளிக்கப் பரிந்துரைக்கையில் ஒப்பந்தப்புள்ளி ஆய்வுக் குழு அதுகுறித்து கவனத்தில் எடுத்துக்கொள்ளலாம்.

**ஒப்பந்தப்புள்ளி ஏற்புக் குழு (Tender Award Committee - TAC)**

29. ஒப்பந்தப்புள்ளிக்கான பணியை அளிப்பது குறித்து முடிவு செய்வதற்கான அமைப்பு, தற்போதுள்ளவாறு தனிப்பட்ட ஒரு அதிகாரியாக இருப்பதற்குப் பதிலாக, மூன்று உறுப்பினர்களடங்கிய குழு வடிவில் இருக்க வேண்டும். இக்குழு "ஒப்பந்தப்புள்ளி அளிக்கும் குழு" என்று அழைக்கப்பெறும். இக்குழு கீழே குறிப்பிடப்பட்டவாறு இருக்கும் :-

| பணியின் தன்மை | ஒப்பந்தப்புள்ளி அளிக்கும் குழுவின் அமைப்பு |
|---|---|
| 1) ரூ.5/- இலட்சம் வரை மதிப்புள்ள பணி | 1) பணிக்கு அதிகார வரம்புடைய செயற்பொறியாளர், அண்மை-யிலுள்ள கோட்டச் செயற்பொறி யாளர், கோட்டக் கணக்கர் ஒருவர். |
| 2) ரூ.5/- இலட்சத்திற்கு மேலும் ரூ.15/- இலட்சம் வரையிலும் மதிப்புள்ள பணிகள். | 2) பணிக்கு அதிகார வரம்புடைய கண்காணிப்புப் பொறியாளர், அண்மையிலுள்ள வட்டத்தின் கண்காணிப்புப் பொறியாளர், கோட்டக் கணக்கர். |
| 3) ரூ.15/- இலட்சத்திற்கு மேல் மதிப்புள்ள பணிகள். | 3) தலைமைப் பொறியாளர், திட்டம் வடிவமைப்புக்குப் பொறுப்பு வகிக்கும் கண்காணிப்புப் பொறி யாளர், முதுநிலைக் கணக்கு அலுவலர். |

ஒப்பந்தப்புள்ளி அளிக்கும் குழுவின் ஆய்வுப் பணியின்போது அதன் நடைமுறைகளில் முதுநிலைத் தலைமை வரைபட அதிகாரி (Senior Head Draughting Officer) ஒருவர் உடன் பங்குகொள்வார்.

30. ரூ.25/- இலட்சத்திற்கு மேற்பட்ட மதிப்பீடு கொண்ட பணிகளைப் பொறுத்தமட்டில் ஒப்பந்தப்புள்ளி அளிக்கும் குழுவில், தலைமைப் பொறியாளர், மற்றொரு துறையைச் சேர்ந்த இதுபோன்ற ஒத்தப் பதவித் தரத்திலுள்ள பிறிதொரு பொறியாளர், நிதித்துறையின் அரசு இணைச் செயலாளர் ஆகியோர் இருப்பர்.

இவ்வகையைச் சேர்ந்த ஏதேனும் குறிப்பிட்ட பணியில், மிகவும் சிக்கல் வாய்ந்த பொறியியல் வடிவமைப்புகள் சம்பந்தப்பட்டிருப்பின், இது போன்ற பணியைக் கவனிக்கின்ற பொது நிறுவனத்தைச் சேர்ந்த அல்லது தனியார் துறையைச் சேர்ந்த முதுநிலை தொழில்நுட்ப வல்லுநர் ஒருவரும் இக்குழுவின் உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ளப்படலாம்.

**ஒப்பந்தப்புள்ளி வழங்குதல்**

31(i) ஒரு பணி, சாதாரணமாக மிகக் குறைந்த வீதங்களைக் கொடுத்துள்ள ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட வேண்டும். ஒப்பந்தப்புள்ளி கோருகின்ற அதிகாரி, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களில் சில சிறப்பு தொழில்நுட்ப நிபந்தனைகள் நிறைவு செய்யப்படவேண்டும் என்று விதித்திருந்தால், அத்தகைய தொழில்நுட்ப நிபந்தனைகள் தொடர்பான கூறுகளின் அடிப்படையில் முடிவுசெய்த மிகக் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த நபரிடம் இப்பணிப் பொறுப்பு ஒப்படைக்கப்படவேண்டும். ஆனால் இந்தச் சிறப்புக் கூறுகள், பணமாக அளவிடத்தக்கதாக (quantifiable) அல்லது குறிப்பிடத்தக்கதாக இருக்கவேண்டும்.

(ii) சில புதிய ஒப்பந்தக்காரர்கள், இத்துறையில் இடம்பிடிக்க வேண்டுமென்ற ஆவலுடன், மிகக் குறைந்ததும் செயல்படுத்த இயலாததுமான வீதங்களைக் கொடுத்து, ஒப்பந்தப் பணிகளை ஏற்று, இப்பணிகளை இடையிலேயே விட்டு விட்டது, அல்லது தரங்குறைந்த பணிகளை செய்துமுடித்தது தொடர்பான நிகழ்வுகள் பற்றிக் குழு விற்குத் தெரியவந்துள்ளது. இவ்விருவகை நிகழ்வுகளிலும் அரசுக்கு இழப்பு ஏற்படுவதோடு, கூடுதல் செலவுத் தொகையை வசூலிப்பதற்கான வழக்காடல் நடைமுறைகளில் ஈடுபடவும் வேண்டியுள்ளது. எனவே, ஒப்பந்தப்புள்ளி ஏற்புக் குழுவானது (TAC) கொடுக்கப்பட்டுள்ள வீதங்கள் நடைமுறைக்கு ஏற்ப உள்ளனவா என்பதையும் கவனமாக ஆய்வு செய்த பின்னர் ஒப்பந்தப்புள்ளி அளிப்பது பற்றி முடிவு செய்யவேண்டும்.

32. ஒப்பந்தப்புள்ளி ஆய்வுக்குழுவானது, அதன் மதிப்பாய்வு மற்றும் பரிந்துரைகளின் நியாயத்தன்மையை நிரூபிக்கும் வகையில் போதிய விரிவான காரணங்களைப் பதிவு செய்ய வேண்டும். அதுபோன்று, ஒப்பந்தப்புள்ளி ஏற்புக் குழுவானது, இறுதியாகப் பணிப் பொறுப்பு ஒப்படைப்பது தொடர்பாக எடுத்த இறுதி முடிவுக்குரிய காரணங்களை விரிவாக எழுதிப் பதிவு செய்ய வேண்டும்.

33. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந்தக்காரர்கள் ஒரே வீதங்களைக் கொடுத்திருக்கும் நேர்வில், ஒப்பந்தப்புள்ளி ஏற்புக் குழுவானது, ஒரே வீதங்களாகக் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி அளித்த நபர்களிடையே அந்த ஒப்பந்தப் பணியைப் பிரித்துக் கொடுக்க வேண்டும். அவ்வாறு பணியைப் பிரித்துக் கொடுக்க இயலாத நேர்வில், ஒப்பந்தப்புள்ளி ஏற்புக் குழுவானது, ஒப்பந்தம் வழங்குவது தொடர்பாக எடுத்த அதன் இறுதி முடிவுக்குரிய காரணங்களை எழுதிப் பதிவு செய்யவேண்டும்.

## இரட்டை உறை முறை (Double Cover Method)

34. நிரைச் சுத்திகரிக்கும் நிலையத்தை அமைத்தல், விளைவு அணைகள், விளையாட்டு அரங்குகள் ஆகியவற்றைக் கட்டுதல் முதலியன போன்ற பெரிய அளவிலான சில சிறப்புப் பணிகளைப் பொறுத்த வரையில், தற்போது பின்பற்றப்பட்டு வருகின்ற இரட்டை உறை முறை முதலாவது உறையில் கட்டும் அமைப்பாளரின் தொழில் திறமை மற்றும் பணி சம்பந்தப்பட்ட தொழில்நுட்ப அறிவுத்திறன் பற்றிய விவரங்கள் இருக்கும். இரண்டாவது உறையில், நிதிநிலை வகையிலான ஒப்பந்தப்புள்ளி விவரங்கள் இருக்கும். தொடர்பாடல். இந்த இரட்டை உறை முறையில் முதலாவதாக ஒப்பந்தப்புள்ளிகள், ஒப்பந்தப்புள்ளி ஆய்வுக் குழுவால் (TSC) ஆய்வு செய்யப்பட்டு, அவர்களது தொழில்நுட்பத் திறமைக்கேற்ப முன்னுரிமை வரியான (order of preference) அடிப்படையில் பட்டியலிடப்படும். இரண்டாவது உறையில், நிறுவனம் அளிக்க முன்வந்த ஒப்பந்தப்புள்ளித் தொகைகள் தனித்தனியாக ஒப்பந்தப்புள்ளி ஆய்வுக் குழுவினால் மதிப்பீடு செய்யப்பட்டு, அதில் சம்பந்தப்படும் விலைப்புள்ளிக்கேற்ப (cost) முன்னுரிமை வழியான அடிப்படையில் பட்டியலிடப்படும். ஒப்பந்தப்புள்ளி ஏற்புக் குழுவானது (TAC) இவ்விரு பட்டியல்களை மிகக் கவனத்துடன் ஒட்டுமொத்தமாக ஆய்வு செய்யவேண்டும். பின்னர் தொழில்நுட்பத் திறமையையும், விலைப்புள்ளியையும் (cost) சரிபார்த்து, எந்த நபர் முன்வந்த ஒப்பந்தப்புள்ளித் தொகை பொதுமக்கள் நலத்திற்கு மிகவும் அனுகூலம் தரத்தக்கதுமாக இருக்குமோ அந்த ஒப்பந்தப்புள்ளி தொகையை அளித்த நபரைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

35. இரட்டை உறை முறை பின்பற்றப்படும் இனங்களைப் பொறுத்த வரையில், இந்தத் துறையில் உள்ள பிரபலமான சிறந்த ஒப்பந்தக்காரர்கள் அனைவரும், பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர்களது பட்டியலில் இடம் பெற்றிருந்தாலும் அல்லது இல்லையாயினும், அவர்கள் தங்களது ஒப்பந்தப்புள்ளி கோரிக்கைகளை அளிக்க அனுமதிக்கப்படுவர்.

## ஒப்பந்தப்புள்ளிக் குழுவின் நடவடிக்கைகள்

36. ஒப்பந்தப்புள்ளி ஆய்வுக் குழு மற்றும் ஒப்பந்தப்புள்ளி ஏற்புக் குழுவின் நடவடிக்கைகள், பொது நலத்தைப் பேணுவது என்னும் குறிக்கோளைப் பெரிதும் உளம் கொண்டும், அதில் பெரிதும் அக்கறை காட்டியும் நடைபெற வேண்டும். இக்குழுக்களின் முடிவுகள், உறுப்பினர்கள் பெரும்பாலோரின் கருத்தின் அடிப்படையில் அமைந்திருக்க வேண்டும். குழு உறுப்பினர் ஒருவரது மாறுபட்ட கருத்தினைப் பதிவு செய்ய அவருக்கு உரிமையுண்டு. இக்கருத்து, குழுவின் நடவடிக்கை ஆவணத்தின் ஒரு பகுதியாக வைத்து வரப்படவேண்டும். ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பிட்டு பரிசீலனை செய்யும்போதும், பிறகு ஒப்பந்தப்புள்ளி அளிப்பு குறித்து முடிவு எடுக்கும் போதும் முறைகேடான நிர்பந்தங்களையும், செல்வாக்கின் வாயிலாக வரும் தலையீடுகளையும், குறுக்கீடுகளையும் தவிர்த்து, நேர்மையாகத் துணிவுடன் செயல்பட ஒரு தனிப்பட்ட அதிகாரியை விட, மூன்று அதிகாரிகள் சேர்ந்து இயங்கும் ஒரு குழுவிற்கு சாத்தியக் கூறு அதிகம் என்று உயர்நிலைக்குழு நம்புகிறது. ஆகையால்தான் இப்பணிகளை குழுக்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று உயர்நிலைக் குழு பரிந்துரைத்துள்ளது.

## ஒப்பந்தப்புள்ளிகள் தொடர்பாக முடிவுகளை எடுப்பதில் ஏற்படக்கூடிய காலதாமதத்தைத் தவிர்த்தல்

37. ஒப்பந்தப்புள்ளி அளிப்போர் தங்களது ஒப்பந்தப் புள்ளிக் கோரிக்கையின் செயல்திறன் கால அளவை ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்ட நாளிலிருந்து 120 நாட்கள் வரையில் வைத்திருக்க வேண்டுமென்று ஒப்பந்தப்புள்ளிகளைக் கேட்கும் அறிவிப்பில் (NIT)-ல் சுட்டிக் காட்டுவது தற்போதைய நடைமுறை வழக்கமாகும். இக்கால அளவு, மிகவும் அதிகமானது என்றும், ஒப்பந்தப்புள்ளி சரியாக வழங்குவது தொடர்பான முடிவுகளை எடுப்பதில் அளவுக்கு மீறி நீண்டகால அளவிற்குக் கால தாமதம் ஏற்படுத்துவதற்கு ஏதுவாக அனைத்து அதிகாரிகளையும் இது பொதுவாக ஊக்குவிக்கிறது என்றும் குழு கருதுகிறது. ஆகையால், சதவீத விகிதங்கள் அடங்கிய ஒப்பந்தப்புள்ளிகள் தொடர்பான முடிவுகள், ஒரு மாதத்திற்குள் எடுக்கப்பட வேண்டுமென்றும், ஏனைய ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த முடிவுகள், அதிகபட்சம் 90 நாட்களுக்குள் எடுக்கப்பட வேண்டுமென்றும் குழு பரிந்துரைக்கிறது. இவ்வாறு மாற்றியமைக்கப்பட்ட கால அட்டவணை பற்றிய தகவல், வருங்காலத்தில் ஒப்பந்தப்புள்ளிகளைக் கேட்கும் அறிவிப்பில் (NIT) சரியாக வெளியிடப்படலாம்.

38. கோட்டப் பொறியாளர், மேற்பார்வைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் அலுவலகங்களில் ஒப்பந்தப்புள்ளி கோப்பு பகுப்பாய்வு செய்யப்படும்

போது, மேலும், கீழும், இங்கும் அங்குமாக ஒப்பந்தப்புள்ளி கோப்புகள் அனைத்தும் அலுவலகத்தின் நிருவாகம், கணக்குகள் மற்றும் பொறியியல் பிரிவுகள், பலவற்றிடையே சுற்றி வருகின்றன என்று குழு அறிந்துள்ளது. இந்த முறையில் கணிசமான அளவுக்கு காலதாமதம் ஏற்படவும் முறைகேடுகள் நிகழவும் வாய்ப்புள்ளது. துறை மற்றும் நிறுவனத் தலைவர்கள், இந்த விஷயத்தை மிக நுணுக்கமாக ஆய்வு செய்து காலதாமதத்தையும் அது தொடர்பாக ஏற்படக்கூடிய முறைகேடுகளையும் தவிர்க்கும் பொருட்டு, சம்பந்தப்பட்ட அலுவலகப் பிரிவுகளில் இக்கோப்புகளின் ஆய்வுக்காக எடுத்துக் கொள்ளப்படும் கால அளவைக் குறைக்கவியலும் வகையில், அலுவல் பணி நடைமுறைகளைத் தக்கவாறு மாற்றியமைக்கலாம்.

39. ஒப்பந்தப்புள்ளி ஏற்புக் குழு, ஒப்பந்தத்தை வழங்குவதற்குரிய முடிவை எடுத்தபிறகு, அவ்வாறு எடுத்த முடிவையும் அதற்குரிய காரணங்களையும் அனைத்து ஒப்பந்தப்புள்ளி அளித்த நபர்கள் அனைவருக்கும் அனுப்பி வைக்க வேண்டும்.

40. மேலே விவரிக்கப்பட்ட அனைத்து வகை ஒப்பந்தப்புள்ளி கோப்புகளை ஆய்வு செய்வதற்கான விரிவான திட்டத்தின் அடிப்படையில், பல நிலைகளில் இயங்கும் ஒப்பந்தப்புள்ளி ஏற்புக் குழுக்களே அனைத்து ஒப்பந்தப்புள்ளிகள் வழங்குவதற்கான முடிவை எடுத்து விடலாம். யாதொரு ஒப்பந்தப்புள்ளி அனை வழங்குவது தொடர்பான முடிவு எடுப்பதை அரசுக்கு அனுப்பத் தேவையில்லை.

**பகிரங்க (திறந்த) ஒப்பந்தப்புள்ளி ஏற்பாட்டில் விதிவிலக்குகள்**

41. பின்வருவனவற்றைத் தவிர, பிற அனைத்துப் பொறியியல் பணிகளிலும் மேலே விவரிக்கப்பட்டபடி பகிரங்க ஒப்பந்தப்புள்ளி ஏற்பாட்டு முறையைக் கண்டிப்பாக பின்பற்ற வேண்டும்.

(1) இயற்கைச் சீற்றங்களின்போதும் அரசால் அவ்வாறு அறிவிக்கப்படும் அவசரச் சூழ்நிலைகளின் போதும் அவசரப் பணிகளை மேற்கொள்ளுதல்; இது போன்ற அவசரப் பணியினை அறிவிப்பதற்குரிய அதிகாரங்களை மாவட்ட ஆட்சியர்களிடமும் தலைமைப் பொறியாளரிடமும் பிரித்தளிக்கலாம்.

(2) வழக்கமானப் பராமரிப்புப் பணிகள், புதிய கட்டுமானப் பணிகள் அல்லாதவையுமான குறைந்த மதிப்புள்ள பணிகள்; இதுபோன்ற குறைந்த மதிப்புப் பணிகளுக்கான நிதிநிலை வரம்பு வரையறுக்கப்படலாம்.

(3) மிக நவீன, மேம்பட்ட தொழில்நுட்ப உத்தி சம்பந்தப்பட்ட பணிகள்; செம்மையாக நிறைவேற்றப்பட வேண்டுமெனில், அவற்றை மேம்பட்ட தொழில்நுட்பத் திறனைப் பெற்றுள்ள குறிப்பிட்ட ஒப்பந்தக்காரரிடமே ஒப்படைக்க வேண்டும் என்ற சூழ்நிலையில் அத்தகைய ஒரு பணியானது இந்த இனத்தைச் சார்ந்ததா என்பதைத் தீர்மானிக்க, சம்பந்தப்பட்ட பொறியியல் பிரிவைச் சேர்ந்த தொழில்நுட்பப் பிரதிநிதி ஒருவரும், இதுபோன்ற நவீன வகைப் பணிகளைக் கவனித்து வருகின்ற மாநில அல்லது மத்திய அரசின் இன்னொரு நிறுவனத்தைச் சேர்ந்த தொழில்நுட்ப பிரதிநிதி ஒருவரும் இதே வகைப் பணியில் அனுபவமும், வல்லுநர் திறமையையும் பெற்றுள்ள பெயர்பெற்றத் துறையின் அல்லது வாணிகம் அல்லாத ஆராய்ச்சி நிறுவனத்தின் பிரதிநிதி ஒருவரும், அடங்கிய மூன்று பேர் கொண்ட வல்லுநர் குழு ஒன்று, அப்பணி தொடர்பான விஷயங்களை ஆராய்ந்து முடிவு எடுக்க வேண்டும்.

42. மேலே 41-ஆம் பத்தியின் (1) ஆம் இனத்தில் குறிப்பிட்டப்பட்டுள்ள வகையைச் சேர்ந்த அவசரப் பணிகளை விரைவாகவும், செம்மையாகவும் நிறைவேற்ற, ஒப்பந்தக்காரரின் பின்னணி, அனுபவம், பணித்திறன், மற்றும் நம்பகத் தன்மை ஆகியவற்றின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட கோட்டப் பொறியாளர் / மேற்பார்வைப் பொறியாளர் / தலைமைப் பொறியாளரின் விருப்பத்திற்கும் முடிவிற்கும் இணங்க பதிவு பெற்ற பட்டியலிலிருந்து ஒப்பந்தக்காரர்களிடம் நியமன அடிப்படையில் ஒப்படைக்கலாம். இருப்பினும், கோட்டப் பொறியாளர் / மேற்பார்வைப் பொறியாளர் / தலைமைப் பொறியாளர், அனுமதிக்கக்கூடிய இதுபோன்ற அவசரப் பணிகளின் நிதி வரம்பு, அவர்களது அனுமதி சம்பந்தப்பட்ட வழக்கமான நிதி வரம்புப் பகுதியில் நான்கிலொரு பகுதி வரம்பிற்குட்பட்டு இருக்குமாறு அளிக்கப்படலாம்.

**பணி ஆணை (Work Order)**

43. பணிக்குரிய ஆணையானது, ஒப்பந்தப்புள்ளி ஏற்பு நாளிலிருந்து 7 நாட்களுக்குள், அல்லது ஒப்பந்தப்புள்ளி செய்திறன் கால அளவு முடிவடைவதற்குள், இவற்றில் எது முன்போ அக்கால அளவிற்குள் வழங்கப்படவேண்டும். அவ்வப்போது பணிக்குரிய ஆணைகளை வழங்குவது தொடர்பான சுருக்கத் தகவல், நேர்விற்கேற்ப கோட்டப் பொறியாளர் / மேற்பார்வைப் பொறியாளர் / தலைமைப் பொறியாளர் அறிவிப்புப் பலகையில் பார்வைக்கு வைக்கப்பட வேண்டும்.

44. ஐந்து இலட்சம் ரூபாய் மதிப்பிற்கும் மேற்படக்கூடிய பணி ஆணைகளின்

நகல்கள் சம்பந்தப்பட்ட விற்பனை வரி அதிகாரிக்கும் மத்திய ஆயத்தீர்வை அதிகாரிக்கும் அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

45. பத்து இலட்சம் ரூபாய் மதிப்பிற்கும் மேற்பட்ட பணி ஆணைகளின் நகல்கள், அதே சமயத்தில் கண்காணிப்பு மற்றும் ஊழல் தடுப்புத் துறை இயக்குநருக்கும் அனுப்பிவைக்கப்பட வேண்டும். அப்போதுதான் அவர், இயக்க நிருவாக நடைமுறைக்கிணங்க விழிப்புப் பணி கோணத்தில் நிறைவேற்றப்படும் பணியை ஆய்வு செய்ய முடியும்.

46. பணி ஒப்படைப்பு ஆணையில், பணிப்பொறுப்பு ஆணை பெற்றவர் (awardee), பிணை வைப்புத் தொகையை அனுப்பி வைப்பதற்கான கட்டாயக் காலக்கெடு வரையறை பற்றியும் சம்பந்தப்பட்ட அலுவல் நடைமுறைகளில் குறிப்பிட்ட நிதி நிபந்தனைகளுக்கு இணங்கிச் செயல்படுவது பற்றியும் தெரிவித்திருக்கவேண்டும். முறையான ஒப்பந்தம் ஒன்று, பணிக்குரிய ஆணை நாளிலிருந்து 15 நாட்களுக்குள் வரையறுத்த படிவத்தில் பணிப் பொறுப்பு ஆணை பெற்றவருடன் செய்து கொள்ளப்படவேண்டும்.

**கட்டுமானப் பொருட்களைத் துறை வழங்குதல்**

47. கட்டுமானப் பொருட்களை சம்பந்தப்பட்ட அரசு துறையே தற்போது ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கிவரும் முறை தொடர்ந்திருக்கலாமா என்பது குறித்து குழு கவனமாக ஆய்வு செய்துள்ளது. சிமிட்டி, உருக்கி, பி.வி.சி. குழாய்கள், ஜி.ஐ. குழாய்கள் முதலியன போன்ற கட்டுமானப் பொருட்களை துறையே வாங்கி, ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்க வேண்டுமென ஒரு பக்கத்தில் வலியுறுத்தப் படுகிறது. அப்போதுதான் கட்டுமானப் பொருட்களின் தரத்திற்கு உறுதியளிக்க முடியும் என்று கூறப்படுகிறது. இக்கட்டுமானப் பொருட்களை ஒப்பந்தக்காரர்களே வாங்கி, அதற்குரிய தொகையை அவர்களது பட்டியில் சேர்த்து சமர்ப்பிக்க அவர்கள் அனுமதிக்கப்படுவாராயின், தங்களது கூடுதல் ஆதாயத்திற்காக தரக்குறைவான கட்டுமானப் பொருட்களை வாங்குவதற்கு இது சாதகமாக அமையக்கூடும். இது ஒரு பக்கமிருக்க, மற்றொரு வகையில் பார்த்தால் அரசுத் துறைகளே, இக்கட்டுமானப் பொருட்கள் அனைத்தையும் கொள்முதல் செய்து, சேமித்து வைத்து, கால முறைப்படி ஒப்பந்தக் காரர்களுக்கு கொடுத்து வந்தால், கணிசமான அளவு அரசுத் தொகை நீண்ட காலத்திற்கு இதில் முடங்கிப் போய் விடும். எனவே, மேற்சொன்ன இருபக்கத்துக் கூறுகளையும் கருத்தில் கொண்டு, முடங்கியிருக்கும் அரசுத் தொகை மிகக்குறைந்த அளவே இருக்குமாறு கட்டுப்படுத்தி, நேர்விற்கேற்ப, கோட்டப் பொறியாளர் அல்லது மேற்பார்வைப் பொறியாளர் மூன்று மாதங்களுக்கொருமுறை கட்டுமானப் பொருள் தேவை அளவுகளை

நுணுக்கமாகக் கண்காணிக்க வேண்டுமென்ற நிபந்தனைக்கு உட்பட்டு, துறையே சிமிட்டி, உருக்கு, பி.வி.சி. குழாய்கள், ஜி.ஐ. குழாய்கள் முதலிய கட்டுமானப் பொருட்களை வாங்கி, ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கும் தற்போதைய நடைமுறை தொடரப்படலாம் என குழு பரிந்துரைக்கிறது.

## பொருட்கள் வெட்டி எடுக்குமிடங்கள் (கற்சுரங்கங்கள்)

48. சில கட்டுமானப் பணிகளுக்குத் தேவைப்படும் பொருட்கள் கட்டுமான வேலை நடைபெறும் இடத்திலிருந்து சிறிது தொலைவில் அமைந்துள்ள கற்சுரங்கங்களிலிருந்து வெட்டி எடுத்துக் கொண்டு வரப்படுகின்றன. எனவே, சுற்சுரங்கங்களிலிருந்து பணி நடைபெறும் இடத்திற்கு கட்டுமானப் பொருட்களை கொண்டு வருவதற்காகும் செலவுத் தொகைகள், இதுபோன்ற பணிகளுக்குரிய ஒப்பந்தப்புள்ளி விவர அட்டவணையில் சேர்க்கப்படுகின்றன. கட்டுமானப் பணியின்போது, பயன்படுத்தப்படும் பொருட்களைக் கொண்டுவரும் உண்மையான தொலைவைக் காட்டிலும் அதிகத் தொலைவு ஒருசில ஒப்பந்தப்புள்ளி விவர அட்டவணைகளில் காட்டப்பட்டு வருகின்றன என்று குழு அறிகிறது. இதனால், ஒப்பந்தக்காரர்கள் முறையற்ற ஆதாயத்தைப் பெறுகின்றனர். கரிசுங்குமானது பணி நடைபெறும் இடத்திற்கு அண்மையில் அமைந்துள்ளதை, எவ்வூர் வருவாய் அதிகாரிகள் சான்றளித்ததை, ஒப்பந்தப்புள்ளி வரங்கும் அதிகாரி உறுதி செய்து, ஒப்பந்தப்புள்ளி விவர அட்டவணையில் சேர்க்க வேண்டுமென்று குழு பரிந்துரைக்கிறது.

## அறுதியிட்ட இழப்புக்களை வசூலித்தல் (Recovery of Liquidated Damages)

49. அரசுப் பணி ஒப்பந்தங்கள் அனைத்திலும் பணிசெய்து முடிப்பதில் ஏற்படும் காலதாமதத்திற்கு ஒரு வார்த்திற்கு ! சகவீதம் என்ற வீதத்தில், உயர்ந்த பட்சம் 10 சதவீதத்திற்கு உட்பட்டு, ஒப்பீட்டுத் தொகையை வசூலிப்பதற்கு வகை செய்யப்பட வேண்டுமென குழு பரிந்துரைக்கிறது. ஒப்பந்தப் பணியை காலந்தாழ்த்தி முடித்தல் அல்லது குறைபாடுள்ள பணிகளை நிறைவேற்றி முடித்தல் அல்லது தொழிலாளர்களுக்கு ஊதியங்கள் கொடுக்காமல் இருத்தல் அல்லது தொழிலாளர்களுக்கு வரையறுத்த வசதிகளுக்கு (facilities) ஏற்பாடு செய்யாமல் இருத்தல் ஆகிய தவறுகளை இழைக்கின்ற ஒப்பந்தக்காரர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் பொருட்டு, நிருவாகப் பொறியாளருக்கு / மேற்பார்வைப் பொறியாளருக்கு இந்த ஒப்பந்தத்தில் அதிகாரம் வழங்கப்படவேண்டும். விடுபட்டுப் போன பணிகளை, ஒப்பந்தக்காரர் செலவிலேயே நிறைவேற்றி முடிக்கச் செய்வதற்கான அதிகாரங்களை, மேற்பார்வைப் பொறியாளருக்கு / தலைமைப் பொறியாளருக்கு இந்த ஒப்பந்த உடன்படிக்கையில் வழங்க வேண்டும்.

இதுபோன்ற இனங்களில் ஆன மிகைச் செலவு தொடர்பாக துறை எடுத்த முடிவானது, நடுவர் தீர்ப்புக்கு உட்படத்தக்கதன்று என்று ஒப்பந்த உட்படிக்கையில் தெளிவாக வரையறுக்கப்பட வேண்டும்.

**ஒப்பந்தப்புள்ளி ஏற்றப் பகுதி (Escalation Clause)**

50. ஒப்பந்த உடன்படிக்கையில், ஒப்பந்தப்புள்ளி ஏற்றம்-இறக்க பகுதிக்கு வகை செய்யப்பட வேண்டுமா என்பது குறித்துக் குழு பரிசீலித்தது. இது தொடர்பாகச் சீரான நடைமுறை எதுவும் தற்போது பின்பற்றப்படுவதாகத் தெரியவில்லை. மத்திய அரசு ஒப்பந்தங்களில், ஒப்பந்தப்புள்ளி ஏற்றப் பகுதி அண்மையில் கொண்டுவரப் பட்டுள்ளதாகவும், இம்முறை சிறப்பாக செயல்பட்டு வருவதாகவும் குழு அறிகிறது. இந்த ஏற்பாட்டின் மூலம் வழக்குகள் நீண்ட காலத்திற்கு நடைபெறுவதைத் தடுக்கவும் இப்பிரச்சினைத் தொடர்பாக அரசுக்கு மிகைச் செலவு ஏற்படுவதைத் தடுக்கவும் முடிகிறது. பணி முடிப்பதற்கான வரையறை கால அளவு 24 மாதங்களும் அதற்கு மேற்பட்டும் இருக்குமாயின், அப்போது அப்பணி தொடர்பான ஒப்பந்த உடன்படிக்கைகளில் ஒப்பந்தப்புள்ளி ஏற்றப் பகுதியை சேர்க்கலாம் என்று குழு பரிந்துரைக்கிறது. ஒப்பந்தப்புள்ளி ஏற்றச் செலவுத் தொகையை எவ்வாறு கணக்கிடுவது என்பது தொடர்பான விதிமுறை (escalation clause) தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும். மேலும் இவ்விதிமுறை, மொத்த விற்பனை விலைப் புள்ளி மற்றும் சட்டப்படிக்கான தொழிலாளர் குறைந்தபட்ச ஊதியங்களில் ஏற்படக்கூடிய மாற்றங்கள் போன்ற கூறுகளுக்கும் தொர்புடையதாக இருக்க வேண்டும்.

**மதிப்பீட்டிலிருந்து வேறுபட்டு திட்டப்பணிகளை மேற்கொள்ளுதல் (Deviations from estimates)**

51. பணிகளை நிறைவேற்றுகையில், உள்ளூர் நிலைமைகள், மாறிவரும் தேவைகளுக்கேற்ப சில நேரங்களில் திட்டப்பணிகளில் மாற்றம் செய்யப்பட்டு மேற்கொள்ளப்படுகின்றன. மாற்றம் செய்வதற்கு தற்போதுள்ள இந்த நடைமுறைகள் தொடரலாம்; ஆனால், ரூ.25 இலட்சம் மதிப்பிற்கு மிகையான அனைத்துப் பணிகளிலும் இவ்வாறு மாற்றம் செய்யப்படுவதால் பொருட்களின் கொள்முதல் விலையில் ஏற்படும் மாற்றங்கள், மேலே 13ஆம் பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பொதுப்பணித் துறை தலைமையிடத் தனிப்பிரிவினால் ஆய்வு செய்யப்பட்டு ஏற்பளிக்கப்படவேண்டும் என்று குழு பரிந்துரைக்கிறது. இதனை, மேற்குறிப்பிட்ட பணிகள் அனைத்திலும் கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டும். இத்தகைய கூடுதல் பணிகளுக்காக அதிகமாகவும் (inflated),

விதிக்கட்டுப்பாடுகளின்றியும் (arbitrary) விலைவீதங்கள் ஒரு சார்பாக நிர்ணயிக்கப் படுவதை நீக்க மேற்கூறிய இந்த ஏற்பாடு மிகவும் அவசியமாகும்.

## இட ஆணைப் புத்தகம் (Site Order Book)

52. இட ஆணைப் புத்தகத்தை (Site Order Book) வைத்துவருதல், ஒப்பந்தக்காரர்களுக்கு இறுதியில் தொகை வழங்கும் சமயத்தில், சரிபார்ப்பதற்காக அப்புத்தகம் கோட்ட அலுவலகத்தில் கிடைக்கச் செய்யப்பெறுதல் ஆகியவை குறித்துத் துறை அளித்த கட்டளைகள் தற்போது பின்பற்றப்படுவதில்லை என்பதையும், இத்தவறு இறுதியில் தொகை வழங்குவதைச் சரிபார்க்கையில் கணிசமான அளவு கவனக் குறைவிற்கு வழிவகுத்துள்ளது என்பதையும் குழு அறிகிறது. நடைபெற்ற காரியங்களின் காலவரிசைப்படியான விவரங்களையும் மற்றும் மேற்பார்வை அதிகாரிகள் செய்த ஆய்வுகளை, அவர்கள் அவ்வப்போது பிறப்பித்த ஆணைகள் ஆகியவைப் பற்றிய விவரங்களையும் அளிக்கும் ஒரே ஆவணம் இட ஆணைப் புத்தகம் மட்டுமேயாகும். இட ஆணைப் புத்தகம் தொடர்பான நிலை ஆணைகள் அனைத்தையும், ஒருங்கிணைத்து, துறை அதிகாரிகள் அதனைக் கண்டிப்பாகப் பின்பற்றுவதற்காக அவற்றை மீண்டும் வெளியிடலாம் என்று குழு பரிந்துரைக்கிறது. முக்கியமான இப்பதிவேட்டின் நம்பகத்தன்மையைக் காப்பதற்காக, இப்புத்தகங்களில் பக்க எண்களை அச்சிட்டு, வரையறுக்கப்பட்ட நெடும் பத்திகளுடன் இப்புத்தகங்களைப் போதுமான எண்ணிக்கையில் அச்சிடலாம். அந்தந்த கோட்டப் பொறியாளர், இட ஆணைப் புத்தகத்தை ஆய்வு செய்யாமல், ஒப்பந்தக் காரரின் இறுதித் தொகைப் பட்டிக்குத் தொகை வழங்கக் கூடாது என்பதைக் கண்டிப்பான விதியாக வரையறுக்க வேண்டும்.

## அளவு சரிபார்ப்புப் புத்தகம் (Check Measurement Book) - கட்டிடத்தின் உறுதித்தன்மை குறித்த சான்றிதழ்

53. செய்யப்படும் பணிகள் அனைத்தும் வரையறுக்கப்பட்ட அளவு சரிபார்ப்புப் புத்தகத்தில் பதிவு செய்யப்படுகின்றன. அளவுகள் துல்லியமாக உள்ளனவா என்பதைச் சரிபார்த்து உதவிப் பொறியாளர் சான்றளிப்பது வழக்கம். துறையின் மேல்மட்ட அளவில் முறைகேடுகள் அல்லது ஊழல் நடப்பதன் காரணமாக, ஏதேனும் ஒரு பணியை நிறைவேற்றுகையில் பெருங்குறைபாடுகள் ஏற்படுகின்ற இனங்களில் கூட, அப்பணி குறித்த அளவுகளின் சரியான தன்மை அல்லது அப்பணியில் பயன்படுத்தப்பட்ட பொருட்கள் குறித்த இறுதிப் பொறுப்பு, அளவு சரிபார்ப்பு புத்தகத்திற்குப் பொறுப்பு வகிப்பும் இளநிலை அதிகாரிகள் மீதே நிர்ணயிக்கப்படுகிறது. முக்கியமான கட்டுமானப் பணிகள் செம்மையாக நிறைவேற்றப்படுகின்றனவா என்பதை முதுநிலை அதிகாரிகள்

அவை நடைபெறும்போதே விரிவாக மேற்பார்வையிடவேண்டும் என்று எதிர்பார்க்கப்படுவதால், முக்கியமான கட்டுமானப் பணிகள் முடிந்த நிலையில், அவற்றின் உறுதித் தன்மைக்கு, துறையில் உள்ள முதுநிலை அதிகாரிகள் தொழில் வகையில் பொறுப்பேற்க வேண்டும் என்று குழு கருதுகிறது. ஆகவே பணிமதிப்பு, ரூ.5 இலட்சம் வரையில் உள்ள பணிகளுக்கும்க் கோட்டப் பொறியாளரும், ரூ.5 இலட்சத்திற்கு மேல் ரூ.25 இலட்சம் வரையில் உள்ள பணிகளுக்குக் கண்காணிப்புப் பொறியாளரும், ரூ.25 இலட்சத்திற்கு மேற்பட்ட பணிகளுக்குத் தலைமைப் பொறியாளரும் கட்டிடத்தின் உறுதித் தன்மை குறித்து சான்றிதழ் வழங்காமல், பணிகளுக்கான இறுதித் தொகைப் பட்டிக்கு பணம் வழங்கக்கூடாது என்று குழு பரிந்துரைக்கிறது. வடிவமைப்பின் உறுதித் தன்மை குறித்த பொறுப்பு முற்றிலும் கண்காணிப்புப் பொறியாளரையே / தலைமைப் பொறியாளரையே, சாரும் என்கிற தற்போதுள்ள கட்டளைகள் வலியுறுத்தப்பட வேண்டும்.

54. ஒப்பந்தக்காரரின் பட்டிக்கு இறுதியில் தொகை வழங்குவதற்காக, முதுநிலை அதிகாரியிடமிருந்து அத்தகைய சான்றிதழைப் பெறவேண்டும் என்கிற நிபந்தனை பணி ஒப்பந்தத்திலேயே (contract agreement) திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட வேண்டும் என்றும், இவ்வாறு செய்வதால், சட்டப்படியும், நிறம்படியும் அதனைச் செயலாக்க இயலும் என்றும் குழு பரிந்துரைக்கிறது.

## ஒப்பந்தக்காரர்கள் பற்றிய கமுக்கப் பதிவேடு (Confidential Register of Contractors)

55. ஓர் ஆண்டில் ஒப்பந்தக்காரர்கள் நிறைவேற்றிய பணியின் சாதனை குறித்து 'ஆண்டுப் பதிவு' செய்வதற்காக, ஒப்பந்தக்காரர்கள் பற்றிய கமுக்கப் பதிவேட்டை வைத்துவருவதற்காக, பொதுப் பணித் துறையின் 29-12-1992 ஆம் நாளிட்ட 1789 ஆம் எண் அரசாணையில் கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. ஆனால், நடைமுறையில் இப்பதிவேடு முறையாக வைத்துவரப்படவில்லை என்று குழு அறிகிறது. இப்பதிவேடு குறித்த அனைத்துக் கட்டளைகளும் மீண்டும் வலியுறுத்தப்பட்டு, கள அதிகாரிகள் கண்டிப்பாக பின்பற்றுவதற்காக, மீண்டும் வெளியிடப்பட வேண்டும். இப்பதிவேடு நாளது வரையில் அதிகாரப்பூர்வமாக வைத்துவரப்படவில்லை என்றால், தவறிழைக்கும் ஒப்பந்தக்காரர்களைக் கருப்பு பட்டியலில் சேர்க்க, விதிக்கோவையின் கீழ், நடவடிக்கை எடுக்க இயலாது.

## பராமரிப்புக் காலம் (Shrinkage Period)

56. குறைபாடுள்ள கட்டிடப் பணிக்கும் தரம் குறைந்த கட்டுமானப் பொருட்களைப் பயன்படுத்தியதற்கும் ஒப்பந்தக்காரரே முழுப் பொறுப்பு என்பதை

ஒப்பந்த ஆவணம் தெளிவுபடுத்தவேண்டும். கட்டிடப் பணிகளுக்கும், திரவப் பொருட்களைத் தேக்கி வைத்துக் கொள்ளும் கட்டிடங்களில் ஏற்படுகின்ற கசிவிற்கும் ஐந்தாண்டுகாலம் வரை ஒப்பந்தக்காரர் பொறுப்பேற்க வேண்டும் என்ற தற்போதுள்ள கட்டளைகள் நடைமுறைக்கு ஏற்றனவாக இல்லை. அவை, ஒப்பந்தக் காரர்கள் அதிக விலை கோருவதற்கே வழிவகுக்கின்றன. பராமரிப்புக் கால அளவை கட்டிடங்களுக்கு அக்கட்டிடப் பணி முடிக்கப்பட்ட நாளிலிருந்து 6 மாதம் சாலைகளுக்கு 12 மாதம், என்று வரையறுப்பது போதுமானதாக இருக்குமெனத் தோன்றுகிறது. பராமரிப்புக் கால அளவு முடிந்த பின்னரே, பிணைய வைப்பீட்டுத் தொகை அல்லது 5 சதவீத அளவுக்கு நிறுத்தி வைக்கப்பட்ட தொகை வழங்கப்படும் என்று ஒப்பந்தத்தில் வகை செய்யப்பட்டிருக்க வேண்டும்.

## இறுதித் தொகைப் பட்டியல் (Final Bill)

57. பணி முழுவதும் முடிக்கப்பட்டு, முடிக்கப்பட்ட பணி முழுவதற்குமாக தொகை, அனுமதிக்கப்பட்டிருந்த போதிலும், கள அதிகாரிகள் சிலரிடையே, இறுதித் தொகை வழங்குவதை வேண்டுமென்றே காலதாமதம் செய்கின்ற போக்கு நிலவிவருவதை குழு அறிந்துள்ளது. சில பணிகள் முடிக்கப்பட்டு, அவை தொடர்பான திட்டங்கள் சம்பந்தப்பட்ட துறையைப் பொறுத்தமட்டில் செயல்படத் துவங்கியிருந்தாலும், கட்டுமானப் பிரிவின் பதிவேடுகள் அதுவரையில் இறுதித் தொகைப் பட்டியலை, தொகை செலுத்தப்படாதவை என்றே காண்பித்து வரும். இறுதித் தொகைப் பட்டிகளுக்குத் தொகை வழங்காமல் இருப்பது, ஒப்பந்தக்காரருக்குச் சேர வேண்டிய நிறுத்தி வைக்கப்பட்ட தொகையை அல்லது பிணைய வைப்பீட்டுத் தொகையைத் திருப்பிக் கொடுப்பதை நிறுத்தி வைப்பதாகும். இறுதிப் பட்டிகளுக்குத் தொகை வழங்காமல் நீண்டகாலம் நிறுத்தி வைக்கின்ற இந்நடைமுறை, பணியில் காணப்படும் குறைபாடுகளுக்காக, அக்குறைபாடுகள் பின்னர் கண்டுபிடிக்கப் பட்டால், பொறுப்பைத் தட்டிக்கழிக்க விரும்பும் அதிகாரிகளின் நலனுக்கு ஏற்றதாக இருக்கிறது. அதற்காக இறுதிப்பட்டி நிலுவையாக வைத்திருக்கப்படுகிறது. அவர்கள், குறைபாடுகள் இருப்பதை ஒப்பந்தக்காரரிடம் சுட்டிக் காட்டினர் என்றும், இறுதிப் பட்டிக்குத் தொகை வழங்குவதற்கு முன்னர் அவற்றை ஒப்பந்தக்காரர் சரி செய்வார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது என்றும் காரணம் கூறி தப்பித்துக் கொள்ள இந்த நடைமுறை உதவுகிறது. வாலாயமான இந்நடைமுறை காரணமாக, ஒப்பந்தக்காரர்களுக்கு ஏற்படும் நிதிஇழப்பு, அதனை ஈடுசெய்ய, அவர்கள் கொடுக்கின்ற ஒப்பந்தப் புள்ளிகளில் அதிக தொகை கோருவதற்கு அவர்களைத் தூண்டுகிறது. முடிவில், அதிக தொகை காரணமாக, அரசு நிதியிலிருந்து கூடுதலாக செலவாகின்றது. இம்முறையில் நிலவி வருகின்ற இம்முறைகேட்டை உடனடியாக நீக்க வேண்டியது அவசியம். பணி முடிந்த பின்னர்,

ஆறு மாதங்களுக்கு மேல் தொகை வழங்கப் படாமலுள்ள அனைத்து, இறுதிப்பட்டியல் குறித்த அறிக்கையை மாதந்தோறும் அனுப்புமாறு, பொறியியல் பிரிவிலுள்ள அனைத்துப் பணி அமைப்புகளுக்கும் மத்திய அரசு, அண்மைக் காலத்தில் தனிக் கட்டளைகளைப் பிறப்பித்துள்ளதை குழு அறிகிறது. இத்தகைய அறிக்கைகள் அனைத்தையும் துறைத் தலைவர் ஆய்வு செய்ய வேண்டும். பின்னர் அவர், உடனடியாகச் செயலாக்குவதற்கான, பொருத்தமான திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஆணை பிறப்பிக்க வேண்டும். சம்பந்தப்பட்ட கண்காணிப்புப் பொறியாளர் / தலைமைப் பொறியாளர் அவ்வாறு தொகை வழங்கப்படாமல் இருக்கின்ற இறுதித் தொகைப் பட்டிகள் அனைத்தையும் அவ்வப்போது கண்டிப்பாக ஆய்வு செய்கின்ற இதுபோன்ற முறையை மாநில அரசும் உடனடியாக மேற்கொள்ளலாம் என்று குழு பரிந்துரைக்கிறது.

**நடுவர் தீர்ப்பு (Arbitration)**

58. பணி ஒப்பந்தங்களில் நடுவர்மன்ற நடவடிக்கை, ஒப்பந்தக்காரர்களுக்கும் அரசுத் துறைகளுக்குமிடையேயான தகராறுகளைத் தீர்த்து வைப்பதற்கான, விரும்பத்தக்க ஓரளவு நீதித்துறை சார்ந்த முறை என்று கருதுகையில், நடுவர் தீர்ப்புக்கு வகைசெய்யும் விதிகளில் சில திருத்தங்களைச் செய்யவேண்டியது அவசியம் என்றும் குழு கருதுகிறது. முதற்கண், 'நடுவர்' என அறிவிக்கப்படுகின்ற அதிகாரி, நேர்மையான முதுநிலைப் பொறியாளராக இருக்க வேண்டும். இரண்டாவதாக, நடுவர் தீர்ப்பை அதற்குரிய காரணங்களோடு எழுத்து மூலம் கொடுக்கப்பட்டால் மட்டுமே அந்த தீர்ப்பு ஏற்றுக்கொள்ளத்தக்கதாகும். பூடகமான வார்த்தைகளில் ஒரு வரியில் வழங்கப்படுகின்ற தீர்ப்புகள் ஏற்கத்தக்கவை அல்ல. மூன்றாவதாக, ஒப்பந்தக்காரர்கள் ஒப்பந்தப்பணிகளை முடித்த நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தகராறுகள், தொகைக் கோரிக்கைகள், சம்பந்தப்பட்டுள்ள தொகை ஆகியவற்றைக் குறிப்பிட்டு, பொறியாளருக்கு விவரங்களை எழுத வேண்டும் என்றும், அவ்வாறு செய்யத் தவறினால், ஒப்பந்தக்காரர் நடுவர் தீர்ப்பு பெற நடவடிக்கைகளை மேற்கொள்ள மாட்டார் என்று கருதப்படும். இந்த மூன்று நிபந்தனைகளும் நடுவர் தீர்ப்புக்கு வகை செய்யும் விதியின் முகவுரையில் தெளிவுபடுத்த வேண்டும்.

**கோட்டக் கணக்கர் (Divisional Accountant)**

59. பொறியியல் பிரிவிலுள்ள கோட்டக் கணக்கர்கள் ஒப்பந்தக்காரர்களின் தொகைப் பட்டிகளைத் தணிக்கை செய்வதில் முக்கிய பங்கு வகிக்கின்றனர். மாநிலக் கணக்குத் துறைத் தலைவர் அலுவலகத்திலிருந்து (Accountant General Office)

பணியாளர்களைப் பெற்று, பொறியியல் பிரிவுகளில் கோட்டக் கணக்கர்களாக பணிபுரிய வைக்கின்ற முந்தைய நடைமுறை அண்மைக் காலத்தில் கைவிடப்பட்டுள்ளது. கணக்கு / நிருவாகப் பிரிவுகளில் பணிபுரியும் துறைப் பணியாளர்களே, கோட்டக் கணக்கர்களாகச் செயல்படுவதற்காக அவர்களுக்குப் பதவி உயர்வு அளிக்கப்படுகிறது. மாற்றப்பட்ட இந்த முறையில் தணிக்கையின் தரம் பாதிக்கப்பட்டு விட்டதாக குழு அறிகிறது. கோட்டக் கணக்கர்களாக நியமிக்கப் பட்ட துறைப் பணியாளர்களின் தொழில் முறைத் தகுதிகளையும் புத்தறிவுப் பயிற்சிகளையும் மேம்படுத்த வேண்டியது அவசியமென்று குழு கருதுகிறது. ஆகவே துறைப்பணியாளர்களுள் 'SAS' தேர்வில் தேர்ச்சி பெற்றவர்கள் மட்டுமே, இனிமேல், கோட்டக் கணக்கர்களாக நியமனம் செய்யப்பட வேண்டும் என்றும் குழு பரிந்துரைக்கிறது. 'SAS' தேர்வில் தேர்ச்சி பெறாமல், கோட்டக் கணக்கர் பதவித் தரத்தில் தற்போதுள்ள பணியாளர்கள் மூன்று ஆண்டுகளில் அத்தேர்வில் தேர்ச்சி பெறவேண்டும் என்று அறிவுறுத்தப்படவேண்டும். அவ்வாறு, அவர்கள் தேர்ச்சி பெறத் தவறினால், அவர்கள் கோட்டக் கணக்கர் பதவித் தரத்திலிருந்து எடுக்கப்பட வேண்டும்.

**உயர்நிலைத் தொழில்நுட்பப் பிரிவு (High Level Technical Cell)**

60. ஒப்பந்தப் புள்ளிகளைக் கேட்டு அறிவிப்பு கொடுக்கும் நிலையிலிருந்து, ஒப்பந்தப்பணி முடிவடையும் வரையில், கட்டுமானப் பணிகள் அனைத்தையும் திறம்படச் சோதனை செய்து, கண்காணிக்க மேலே குறிப்பிடப்பட்ட விரிவான நடவடிக்கைகளுடன், உயர்மட்ட அளவில் ஊழல் மற்றும் முறைகேடுகள் நடைபெறுவது குறித்து திறம்பட்ட வகையில் சோதனை செய்வதற்காக, தனிப்பட்ட தொழில்நுட்பத் தணிக்கை முறை ஒன்றை உருவாக்க வேண்டியது அவசியம் என்று குழு கருதுகிறது. தற்போது கூட, நடைபெற்றுவரும் கட்டுமானப் பணிகளைத் திடீர்ச் சோதனை செய்வதற்காக, கண்காணிப்புப் பொறியாளர் ஒருவர், ஒழுக்கக் கண்காணிப்பு-ஊழல் தடுப்பு இயக்கத்துடன் இணைக்கப்பட்டுள்ளார். மேலும் அவர் ஒழுக்க கண்காணிப்பு-ஊழல் தடுப்பு இயக்கம் புலனாய்வு செய்யும் வழக்குகளில் தொழில்நுட்ப ஆலோசனையும் அளிக்கிறார். ஒழுக்க கண்காணிப்பு-ஊழல் தடுப்பு இயக்கத்தின் செயல்நோக்கத்திற்காக, இந்த ஏற்பாடு தொடருகையில், முக்கியக் கட்டுமானப் பணிகள் தொடர்பான தொழில் நுட்ப விவகாரங்களில் ஒட்டுமொத்த விழிப்புப்பணிச் சோதனை செய்ய, விழிப்புப் பணி ஆணையத்தின் கீழ் நேரடியாகச் செயல்பட மிக விரிவான தொழில் நுட்பப் பிரிவு ஒன்றை அமைக்க வேண்டுமென்று குழு பரிந்துரைக்கிறது. இப்பிரிவிற்கு, தலைமைப் பொறியாளர் பதவித் தரத்திலுள்ள அதிகாரி ஒருவர் தலைமை வகிக்கலாம். அவருக்கான சார்நிலைப் பணியாளர்கள் கணக்குப் பிரிவிலிருந்தும், பொறியியல் பிரிவிலிருந்தும் நியமிக்கப் படுவர். விழிப்பு பணி ஆணையத்திற்கு வரும்

புகார்கள் / தகவல்களை ஒட்டியும், வழக்கமாக நடைபெறும் கணக்குத் தணிக்கையின் போது வெளியாகும் முறைகேடுகளை ஒட்டியும், சம்பந்தப்பட்ட கட்டுமானப் பணிகளை, தொழில்நுட்பத் தணிக்கை செய்வது இப் பிரிவின் பொறுப்பாகும். சில பொறியாளர்கள், கணக்கர்களுடன் தற்போதுள்ள மாவட்ட ஆய்வுப் பிரிவுகளை வலுப்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் பற்றி குழு தனியாகக் கருதி ஆலோசனை செய்து வருகிறது. இவ்வாறு செய்வதால் ஊராட்சி அளவிலும் / மாவட்ட அளவிலும் பல்வேறு கட்டுமானப் பணிகளில் முன்னேற்றம் குறித்து அவர்கள் திறம்படக் கண்காணிக்க இயலும். விழிப்புப் பணி ஆணையத்தின் கீழுள்ள தொழில் நுட்பப் பிரிவு நாளடைவில், மாவட்ட ஆய்வுப் பிரிவுகளைப் பொறுத்த வரையில், ஒட்டுமொத்த மேற்பார்வை, ஆய்வுப் பொறுப்புகளை ஏற்கலாம். முக்கியக் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வரும்போதே, தொழில் நுட்பத் தணிக்கை செய்வதற்காக, விழிப்புப் பணி ஆணையத்தின் கட்டுப்பாடு மற்றும் வழிகாட்டுதலின் கீழ் போதுமான அதிகாரங்களுடன் பொறியியல் துறைகளின் கட்டுப்பாட்டில் இல்லாது தனித்தியங்கும் இவ்வகையான உயர்நிலைத் தொழில் நுட்பப் பிரிவு ஒன்று இருப்பது, பொறியியல் பிரிவுகளில் முறைகேடுகள் நடைபெறுவதைத் திறம்பட்ட முறையில் தடுப்பதற்கான ஓர் அமைப்பாகத் திகழும்.

* * *

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

அத்தியாயம் - 3

# கொள்முதல் நடைமுறை

**முன்னுரை**

பல்வேறு நோக்கங்களுக்காகப் பொருட்களை வாங்கும் வகையில் அரசுத் துறைகளுக்கும் அரசு நிறுவனங்களுக்கும் கணிசமான அளவு செலவு ஏற்படுகிறது. அவ்வாறு பொருட்களை வாங்குவதில் தற்போது ஒரே சீரான நடைமுறை பின்பற்றப்படவில்லை என்று தெரிகிறது. பல்வேறு பொருட்களை பெருமளவில் வாங்குவதற்கு ஒவ்வொரு துறையும் / நிறுவனமும் பல ஆண்டுகளாக அதன் சொந்த விதிமுறைகளையும் நடைமுறைகளையும் பின்பற்றி வருகின்றது. அந்த விதிமுறைகள் மற்றும் நடைமுறைகளில் சில, கொள்முதல் செய்யும் துறைக்கென்றே / நிறுவனத்திற்கென்றே உரியவையும் தனிச்சிறப்பு வாய்ந்தவையுமாகும். எனினும் பொருள் கொள்முதல் வாங்குதல் தொடர்பான நடவடிக்கைகளுக்குப் பொது நிதியிலிருந்து செலவு செய்யப்படுவதால், அத்தகைய நடவடிக்கைகளில் நேர்மை இருப்பதை உறுதி செய்ய, இந்த நடைமுறைகள் சில அடிப்படைக் கொள்கைகளுக்கிணங்க இருக்க வேண்டும். இக்குழு, இந்த அத்தியாயத்தில் இக்கொள்கைகளைக் குறிப்பிட முனைகிறது.

2. மைய அடிப்படையில் அனைத்துப் பொருட்களையும் கொள்முதல் செய்யவும் அவற்றை களப் பிரிவுகளுக்கு அவ்வப்போது ஏற்படும் தேவைகளுக்கேற்ப தேவைப்படுகின்ற பொருள்களை வழங்கவும், மத்திய அரசின் கீழ் வழங்கல் - ஒருவகை செய்தல் இயக்ககம் (Directorate General of Supplies and Disposals) பின்பற்றும் அதே முறையில் பொருட்கள் மைய அமைப்பு (Central Purchase Organisation) ஒன்றை ஏற்படுத்தலாம் என்று அரசுத் துறைகளின் / நிறுவனங்களின் முதுநிலை அதிகாரிகளுடன் நடத்திய விவாதத்தின்போது ஒரு கருத்து தெரிவிக்கப்பட்டது. குழு இக்கருத்தை கவனமாகப் பரிசிலனை செய்தது. பல்வேறு பிரிவுகளுக்குத் தேவைப்படும் பல்வகைப் பொருட்கள் மிகப் பெருமளவில் இருப்பதால், மையக் கொள்முதல் திட்டம், நடைமுறையில் சில இடர்பாடுகளை உருவாக்கலாம். வாங்கப்பட்ட பொருட்களின் தரத்தை ஆய்வு செய்து அனுமதிக்கும் அதிகாரம் மையப் பிரிவிடம் இருந்தால், பயன்படுத்தும் துறை அதிகாரிகளால் ஆய்வு செய்யப்படுகின்ற முறைபோன்று, இந்த முறை அவ்வளவு பயனுள்ளதொரு முறையாக இராது. இறுதியில் பொருட்களைப் பயன்படுத்தும் துறையே நேரடியாக சம்பந்தப்படுவதுடன், அவற்றை உண்மையில் பயன்படுத்துகையில், அப்பொருட்கள் தரம் குறைவாக இருந்தால் பாதிக்கப்படுகின்றன.

தரத்தை காப்பதற்காக, ஆய்வு செய்யும் பொறுப்பு இயன்ற வரையில் பயன்படுத்தும் பிரிவிற்கு உள்ள பொறுப்பாக ஆக்கப்பட வேண்டும் என்று குழு கருதுகிறது. பெருமளவில் மையக் கொள்முதல் ஏற்பாட்டு முறையில், இந்த கொள்கையைச் செயலாக்க முடியாது. மேலும், மையக் கொள்முதல் முறையில் பல்வேறு படிநிலைகள் இருப்பது தவிர்க்க முடியாததாகும் என்பதோடு, இதனால் கொள்முதலை முடிப்பதில் மிகுந்த காலதாமதம் ஏற்படும். இக்கால தாமதம், குறிப்பாக ஆய்வுப் பிரிவில் முறைகேடுகளுக்கு வழிவகுக்கும். மையக் கொள்முதல் முறையிலுள்ள ஒரே அனுகூலம், பொருட்கள் பெருமளவில் வாங்கப்படுவதால் அங்காடி விலையைக் காட்டிலும் குறைந்த விலைக்கு, பொருட்களை வழங்க வருவோரை ஒப்புக்கொள்ளச் செய்ய வாய்ப்பு இருப்பதாகும். ஒவ்வொரு துறையிலும் / நிறுவனத்திலும் மத்திய கொள்முதல் பிரிவு ஒன்றைத் தொடங்கி அதன் மூலம் விலை நிர்ணயிக்கப்பட்டால் இதே அனுகூலத்தைப் பெற முடியும் என்று குழு கருதுகிறது. இக்குழு பொருத்தமான பொருள் வழங்குவோரைக் கண்டறிந்து வழங்கப்படவுள்ள பொருட்களுக்கு ஒப்புக் கொள்ளப்பட்ட விதங்களை முடிவு செய்ய இயலும். இந்த விதங்களுக்கேற்ப கள அலுவலகங்கள் தங்களுக்குத் தேவையான பொருட்களை அவர்களே வாங்கிக் கொள்ளலாம். மாநிலம் முழுவதற்கான மத்திய கொள்முதல் அமைப்பு ஒன்றைத் தொடங்கி பராமரிக்க வேண்டிய அவசியமில்லை என்று குழு கருதுகிறது.

**தற்போதைய நிலைமை**

3. தற்போது, பொருட்களைக் கொள்முதல் செய்வதற்கு பல்வேறு துறைகள் / நிறுவனங்களில் பின்வரும் நடைமுறைகள் செயலில் உள்ளன.

1) எப்போதெல்லாம் கொள்முதல் செய்யப்பட வேண்டுமோ அப்போதெல்லாம் பகிரங்க ஒப்பந்தப்புள்ளிகள் கோருதல்.

2) பொருட்களை வழங்குபவர்கள் மிக்க குறைந்த எண்ணிக்கையிலுள்ள பொருட்களைப் பொறுத்த மட்டில், வரையறுக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி முறையைப் (limited tender system) பின்பற்றுதல்; மாநில மின்வாரியம் இம்முறையைப் பின்பற்றுகிறது.

3) பொருட்களை வழங்குவதில் பிரபலமான சிலருடன் ஆண்டு வீத ஒப்பந்தப்புள்ளி ஒப்பந்தங்களை நிர்ணயித்து, ஒப்பந்தப்புள்ளி வீதத்தில், நேரடியாகப் பொருட்களை வாங்குவதற்கு கள அதிகாரிகளுக்கு அதிகாரமளித்தல்.

4) கனரக இயந்திரம் அல்லது நவீன சாதனங்களைக் கொள்முதல் செய்வதற்கு இரு உறை நடைமுறையைப் (two cover system) பின்பற்றுதல்.

5) தமிழ் நாட்டில் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் சிறு தொழில் நிறுவனங்கள் மூலம் கொள்முதல் செய்து முன்பணக் கையடைத் தொகை (carnest money deposit) செலுத்து வதிலிருந்து விலக்களித்தும், 15 சதவீதம் விலை முன்னுரிமை அளித்தும் (price preference), அரசாணைகளின் கீழ் முன்னுரிமை வழங்குதல் (preferential treatment).

**ஒப்பந்தப்புள்ளி நடைமுறை**

4. ஒப்பந்தப்புள்ளி நடைமுறைகள் என்ற அத்தியாயத்தில், பகிரங்க ஒப்பந்தப் புள்ளிகள் மற்றும் வரையறுக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் முறையில் ஏற்பட்டுள்ள ஒழுங்கீனச் செயல்களையும் இது தொடர்பான பற்றுவரவுகளில், தனிப் பற்றுக்கும் ஊழலுக்கும் அதிக வாய்ப்புள்ளதையும் குழு குறிப்பிட்டுள்ளது. நிதிவகையில் முக்கியமான விஷயங்களைக் கையாளுவதில் வெளிப்படை தன்மை நிலவ வேண்டியதன் அவசியத்தையும், நிருவாகத் திறமையுடன் பொது நிதியை சிக்கனமாகவும், விவேகமாகவும் நிருவகிக்க வேண்டியதன் அவசியத்தையும் கருத்திற்கொண்டு கட்டுமானப் பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி நடைமுறைகள் தொடர்பாக, இக்குழு பலவற்றைப் பரிந்துரைத்துள்ளது. ஒப்பந்தப்புள்ளிகள் மூலம் கொள்முதல் செய்யப்படும் அனைத்துப் பொருட்களுக்கும், நிலைக்குத் தகுந்த சில மாறுதல்களுடன் அதே பரிந்துரைகள் பொருந்துமென்று தெரிவிக்க குழு விரும்புகிறது.

5. அறிவிப்பிற்கு போகிய அளவு விளம்பரஞ் செய்தல், ஒப்பந்தப் புள்ளிகள் கோருதல், ஒப்பந்தப்புள்ளி விவர அட்டவணைக்கு விண்ணப்பித்த தகுதியுள்ள ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் அனைவருக்கும் அவற்றை வழங்குதல், மூன்று அதிகாரிகளைக் கொண்ட ஒப்பந்தப்புள்ளி ஆய்வுக் குழு ஒப்பந்தப்புள்ளிகளை ஆய்வு செய்தல், மூன்று அதிகாரிகளைக் கொண்ட ஒப்பந்தப்புள்ளி ஏற்புக் குழு, இறுதியில் ஒப்பந்தப்புள்ளி வழங்குதல் (final award of tender), பகிரங்க ஒப்பந்தப்புள்ளி முறை மூலம் கொள்முதல் செய்யப்படுவதற்குப் பதிலாக விதிவிலக்கான சூழ்நிலைகளில், நியமன ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கொள்முதல் செய்தல் முதலியன தொடர்பான குழுவின் பரிந்துரைகள் கட்டுமானப் பணிகளுக்கு உள்ளது போன்ற அதே முறையில் பொருட்கள் கொள்முதல் செய்யப்படுவதற்கும் பொருந்துகின்றன.

**ஒப்பந்தப்புள்ளிகளை மதிப்பீடு செய்தல்**

6. இயந்திரங்களை வழங்குவதற்கான ஒப்பந்தப் புள்ளிகளை மதிப்பீடு செய்கையில், ஒப்பந்தப்புள்ளி ஆய்வுக் குழு, இயந்திரத்திற்கு கொடுக்கப்பட்ட விலைப்புள்ளி விலையை மட்டுமே கருத்திற் கொள்ளாமல், அந்த குறிப்பிட்ட சாதனத்தை இயக்குவதற்கு மூன்றாண்டுகளுக்கு, பரிந்துரைக்கப்பட்ட உதிரிப் பாகங்களின் விலையையும் கருத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

7. ஒப்பந்தப்புள்ளிகளின் தகுதிகளை மதிப்பீடு செய்வதற்கு, பராமரிப்பு மற்றும் இயக்கச் செலவையும் கருத்திற் கொள்ள வேண்டும்.

8. பொருட்களின் தேவை குறைவாக இருக்கும்போது தயாரிப்பாளர் விலையைக் குறிப்பிட விரும்பாத நேர்வுகளும் இருக்கலாம். அத்தகைய இனங்களில், சம்பந்தப்பட்ட கொள்முதல் அதிகாரி / உள்ளுர் துறை அதிகாரி அப்போதைய அங்காடி விலையைப் பரிசீலித்து, பரிசீலனை முடிவைப் பதிவு செய்த பின்னர், உள்ளுரிலேயே வணிகர்களிடமிருந்து கொள்முதல் செய்துகொள்ள அதிகாரம் அளிக்கலாம்.

**மைய கொள்முதல் பிரிவு (Central Purchase Cell)**

9. பொருட்கள் என்ன விலைக்குக் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன என்பதுதான் மொத்தத்தில் முக்கியமான விஷயமாகும். மொத்த பற்றுவரவில், அது நேர்மையின் அளவைக் காட்டுகிறது. பொருட்களுக்கு வழங்கப்பட்ட விலை, உள்ளபடி அங்காடி விலைப்படி அல்லது அதற்குச் சற்றுக் குறைவாக (அதிகமாக இல்லை) உள்ளது என்பதை உறுதிசெய்ய இது தொடர்பான அதிகாரிகள் அனைத்து முயற்சிகளையும் எடுக்க வேண்டும். இதற்கென, ஒவ்வொரு துறை / நிறுவனத்திற்கு அவ்வப்போது தேவைப்படுகிற பொருட்களின் தன்மையைக் கருத்திற்கொண்டு, பல்வேறு பொருட்களுக்கான அங்காடி விலையைத் தீர்மானிப்பதற்கான பொருத்தமான நடைமுறை ஒவ்வொரு துறையில் / நிறுவனத்தில் கொண்டுவரப்பட வேண்டும். இதற்கென மூத்த அதிகாரி ஒருவர் (இவருக்கு தலைமைக் கொள்முதல் அதிகாரி என்று பதவிப்பெயர் - Chief Purchase Officer - அளிக்கலாம்) தலைமையின் கீழ் ஒவ்வொரு துறையில் / நிறுவனத்தில் மைய கொள்முதல் பிரிவு ஒன்று அமைக்கப்பட வேண்டும். அங்காடி நிலைமையை அறியவும், துறை / நிறுவனம் வழக்கமாக வாங்கும் பல்வேறு பொருட்களின் ஆண்டு விலைப் பட்டியலைத் தயாரிக்கவும் இயலும் வகையில் அவருக்கு இத்துறையிலும் தலைமையிடங்களிலும் பொருத்தமான துணைப் பணியாளர்கள் அளிக்கப்பட வேண்டும். பொருட்களை வாங்குவதில் பிரபலமான நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகளைக் கோருவதன் மூலம், அவர் அத்தகையப்

பொருட்களை வழங்குபவர்களுடன் விலை ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்வதுடன், பொருட்களை வழங்குபவர்களின் பட்டியல் மற்றும் ஒப்புதலளிக்கப்பட்ட விலை வீதங்களை அனைத்து கள பிரிவுகளுக்கும் சுற்றோட்ட முறையில் அனுப்ப வேண்டும். அதன் பின்னர் கள பிரிவுகள், தாங்களே நேரடியாக் கொள்முதல் செய்யலாம். களப்பிரிவுகள் வாங்கின பொருட்களுக்குத் தொகை வழங்குமுன் அவற்றைப் பார்வையிட்டு அவற்றின் தரத்தை ஆய்வு செய்ய களப் பிரிவுகளே பொறுப்பானவராவர்.

**அனுமதிக்கப்பட்டதற்கும் அதிகமாக கொள்முதல் செய்தல் (Purchase in excess of sanction)**

10. களத்தில் தேவைப்படும் பொருட்கள் கொள்முதல் ஆணையில் குறிப்பிடப்பட்ட அளவைவிட அதிகமாகத் தேவைப்படக்கூடிய சந்தர்ப்பங்களும் எழலாம். கள அதிகாரிகள், தங்களது வழக்கமான அதிகாரங்களைப் பயன்படுத்தி, கூடுதல் அளவைக் கொள்முதல் செய்வதில் மறுப்பேதுமில்லை என்று பொதுவாகக் கருதப்பட்டாலும், முதல் கொள்முதல் ஆணையில் முடிவுசெய்யப்பட்ட விலை, மூல மதிப்பீட்டு விலையைவிட அதிகமாக இருந்தால், பல்வேறு கேள்விகள் எழலாம். ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட விலை, முதற்கண் குறிப்பிடப்பட்ட மதிப்பீட்டு விலையை விட 15 சதவீதம் அதிகமாக இருந்தால், அதே பொருளை அதிகரித்த அளவுகளில் வாங்குவது துறைத்தலைவரின் அல்லது நிறுவனத்தின் நிருவாகக் குழுவின் அனுமதியின்றி வாங்கக்கூடாது என்று குழு பரிந்துரைக்கிறது.

**பகிரங்க ஒப்பந்தப்புள்ளி முறைக்கான விதிவிலக்குகள்**

11. இவ்வறிக்கையின் 2-ஆம் அத்தியாயத்தில் விவரித்துள்ளவாறு, பகிரங்க ஒப்பந்தப்புள்ளி முறை, பின்வரும் கொள்முதல்கள் நீங்கலாக, அனைத்துக் கொள்முதல்களுக்கும் கண்டிப்பாகப் பின்பற்றப்பட வேண்டும்.

(1) இயற்கைச் சீற்றங்கள் ஏற்படும் போதும், அரசால் அறிவிக்கப்பட்ட நெருக்கடி நிலைகளின் போதும் அவசரமாகச் செய்யப்படும் கொள்முதல்.

(2) அரசால் வறையறுக்கப்பட்ட அத்தகைய வரையறைக்குள் குறைந்த மதிப்பில் கொள்முதல் செய்தல் மற்றும் நேரடிக் கொள்முதல்.

(3) ஏதேனும் ஒரு பொருள் சம்பந்தமாக ஒரு குறிப்பிட்ட நபரோ, நிறுவனமோ, பிரத்யேக உரிமைகள் உடையதாயிருந்தாலும், அல்லது அதன் தயாரிப்புத் தொடர்பான தொழில் உத்தியில் பிரத்யேக உரிமை பெற்றிருந்தாலும் அந்த பொருளை வழங்குபவரிடமிருந்து ஒருவழிக் கொள்முதல் செய்தல். ஆனால்,

கொள்முதல் செய்யும் துறை அல்லது நிறுவனத்தின் தொழில் நுட்பப் பிரதிநிதி ஒருவர், இதுபோன்ற கொள்முதலில் ஈடுபட்டுள்ள மாநில அல்லது மத்திய அரசு நிறுவனத்தின் தொழில் நுட்பப் பிரதிநிதி ஒருவர், இத்தகைய துறையில் திறமை வாய்ந்த புகழ் பெற்ற கல்வி நிறுவனம் அல்லது ஆராய்ச்சி நிறுவனம் அல்லது வணிக நிறுவனமல்லாத நிறுவனத்தின் பிரதிநிதி ஒருவர் ஆகிய மூன்று வல்லுநர்களைக் கொண்ட குழு ஒன்று இதனை ஒரு வழிக் கொள்முதல் (Single Source Procurement) என அறிவிக்க வேண்டும்.

(4) நூற்பாலைகள் வாங்கும் பருத்தி, வேளாண் தொழில் கழகம் அல்லது எண்ணெய் வித்துக்கள் கழகம் வாங்கும் எண்ணெய் வித்துக்களும், எண்ணெயும், சந்தையிலிருந்து வாங்கப்படும் கால்நடைகள், கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் கரும்பு கொள்முதல் செய்தல், நுகர்பொருள் கழகத்தின் கொள்முதல் மையங்களின் நெல் கொள்முதல் செய்தல், அரசு அவ்வப்போது அறிவிக்கும் இதுபோன்ற இனங்களைக் கொள்முதல் செய்தல்.

## அவசரகாலக் கொள்முதல்

12. மேலே 11ஆம் பத்தியில் இனம் (1) ல் குறிப்பிட்டவாறு நெருக்கடி நிலையின்போது கொள்முதல் செய்வதைப் பொறுத்தமட்டில், கொள்முதல் அதிகாரியின் அதிகாரங்கள், அவர்களது வழக்கமான கொள்முதல் அதிகாரங்களில் 1/4 பாகமாக வரையறுக்கப்படலாம். அவசரத் தன்மை வாய்ந்த அத்தகைய அனைத்துக் கொள்முதல் ஆணைகளின் நகல்கள், மாநில கணக்குத் துறைத் தலைவருக்கும், துறையின் / நிறுவனத்தின் துறைத் தணிக்கைப் பிரிவிற்கும் ஒரே சமயத்தில் அனுப்பப்பட வேண்டும். மொத்த மதிப்பு 5 இலட்சம் ரூபாய்க்கு மேற்படும் அத்தகைய அவசரகாலக் கொள்முதல் ஆணைகளின் நகல்கள் விழிப்புப்பணி - ஊழல் தடுப்பு இயக்குநருக்கு அனுப்பப்பட வேண்டும்.

## பொருட்களுக்கான குறியீடு (Specification for Materials)

13. கொள்முதல் செய்யப்படவுள்ள பொருட்களுக்கான குறியீடுகள் குறிப்பிடுகையில், பல இனங்களில் முறைகேடுகள் நடைபெறுவதாகக் குழு அறிந்துள்ளது. சிலருக்கு சாதகமாக இருக்கும் வகையில் துறை அதிகாரிகள் குறியீடுகளைத் தயாரித்ததாக குற்றஞ்சாட்டப்படுகிறார்கள். அரசுக்குத் தேவைப்படும் பொருட்கள் / இயந்திரத்திற்கான விலைப்புள்ளி விலைக்கான அனைத்து அடிப்படைக் கூறும் (Specification), ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களின் குறிப்பிடப்பட்ட குறியீடாக இருப்பதால்,

இக்குறியீடுகளுக்கு ஒப்புதல் வழங்கும் அத்தகைய துறைகளின் தொழில்நுட்பத் தலைவர் (technical heads), அல்லது அதிகாரி இக் குறியீடுகள் சரியானவை என்றும், துறைகளின் தேவைக்கேற்ப உள்ளன என்றும், குறிப்பிட்ட சில நிறுவனங்களுக்கு மட்டும் நியாயமற்ற முறையில் சாதகமாக இராது என்றும் உறுதி செய்வதற்கு முழுப் பொறுப்பு வகிக்க வேண்டுமென்று பல்வேறு துறைகளுக்கு / நிறுவனங்களுக்கு விரிவான உத்தரவுகள் பிறப்பிக்கப்பட வேண்டுமென்று குழு பரிந்துரைக்கிறது

**வழங்குவோரின் மதிப்பீடு (Vendor Rating)**

14. சில சமயங்களில், பொருட்களை வழங்க முன்வரும் நபர்களும், நிறுவனங்களும் சரியாக மதிப்பிடாமல் போவதால், சில போலி நபர்களும், நிறுவனங்களும் ஒப்பந்தப் புள்ளியின் மூலம் பொருள் வழங்க ஆணை பெற்று, முடிவில் தரக்குறைவான பொருள்களை வழங்கியும், தாமதமாக வழங்கியும் அரசுக்குப் பெரும் இழப்பு உண்டாக்கி விடுகின்றனர். பொருள் வழங்குவோரை மதிப்பீடு செய்யும் முறை மிகவும் கண்டிப்பாக இருக்க வேண்டுமென்றும், தயாரிப்புத்திறன், கடந்த மூன்றாண்டுகளில் நிறுவனங்கள் / பொருட்களை வழங்குபவர்கள் வழங்கிய பொருட்களின் அளவு முதலியவற்றைக் கருத்தில் கொள்ள வேண்டுமென்றும், உரிய அளவு பொருட்களை வரையறுக்கப்பட்ட கால அளவிற்குள் வழங்கி, துறைகளின் தேவைகளை நிறைவு செய்யக்கூடிய அத்தகைய நிறுவனங்கள் மட்டுமே தகுதிவாய்ந்தவை என்றும் குழு பரிந்துரைக்கிறது. தலைமைக் கொள்முதல் அதிகாரி (குறியீடுகள், தேவைகள் முதலியவற்றிற்கு முழுமையாக பொறுப்பு வகிக்கும் தொழில்நுட்பம் தெரிந்தவர்), அதே பதவித்தரமுள்ள மற்றொரு தொழில்நுட்ப அதிகாரி, நிதி அதிகாரி ஒருவர் ஆகியோர் கொண்ட குழு ஒன்று பொருளை வழங்குவோரை மதிப்பீடு செய்ய வேண்டும்.

**செயல்திறன் உத்திரவாதம் (Performance Guarantee)**

15. சில பொருட்கள், வழங்கப்பட்ட நாளிலிருந்து குறிப்பிட்ட காலம் வரை அவற்றின் செயல்பாட்டிற்கு உத்தரவாதமளிக்கப்படுகிறது. பொருட் பட்டியல் வழங்கும் அதிகாரிகளின் அக்கறையின்மை அல்லது மோசமான திட்டமிடல் காரணமாக இவ்வகையைச் சேர்ந்த சில பொருட்கள், உத்தரவாத காலத்திற்கு மேம்பட்டு நீண்டகாலமாக வழங்கப்படாமல் பண்டகசாலையிலேயே கிடக்க நேரிட்டால், பின்னர் இவற்றைப் பயன்படுத்தும்போது, அதன் செயல்பாட்டில் ஏற்படும் தவறுக்கான உத்தரவாதப் பகுதியை செயல்படுத்த துறைக்கு வழி இல்லாமல் போய்விடும். இதனால், ஊழலுக்கு வழிகோலும் வகையில், தரம் குறைவான பொருட்கள் நீண்ட காலத்திற்கு இருப்பில் வைத்திருக்கவும் வாய்ப்புள்ளது. அத்தகைய பொருட்களை இருப்பில் வைப்பது

குறைந்த அளவாக இருப்பு வைக்கவேண்டும் என்ப' ஏ உறுதிசெய்வது, உயர்நிலைகளிலுள்ள மேற்பார்வை அதிகாரிகளின் தனிப்பொறுப்பாகும். மேலும் துறையும் ஒப்பந்தக்காரரும் பரஸ்பர ஒப்பந்தம் செய்துகொள்வதன் மூலம், உத்தரவாத கால அளவை நீட்டிப்பதற்கு ஒப்பந்தத்திலேயே வகைசெய்யப்பட வேண்டும்.

## ஒப்பந்தப்புள்ளி உடன்பாடு (Contract Agreement)

16. தரம் குறைந்த பொருட்களை நிராகரித்தல் அல்லது அவற்றிற்குரிய வீதங்களை வசூலித்தல் அல்லது சில நிபந்தனைகளின் கீழ் அத்தகைய நிறுவனங்களை கருப்புப் பட்டியலில் சேர்த்தல் அல்லது வரையறுக்கப்பட்ட கால அளவிற்குள் பொருட்களை வழங்கச் செய்தல் முதலியன போன்ற தண்டனை நடவடிக்கை எடுப்பதற்கான பகுதிகளைச் செயற்படுத்துவதற்கு, பொருட்களை வாங்குபவருக்கு இயலும் வகையில், பெரிய ஒப்பந்தப்புள்ளிகள் அனைத்திலும், முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்களை பொருட்களை வாங்குபவரும் வழங்குபவரும் பெற்று கையொப்பமிட வேண்டுமென்று குழு பரிந்துரைக்கிறது. அத்தகைய உடன்பாடுகளில், ஒப்பந்தத்தின் பொதுவான நிபந்தனைகள், தேவைப்படும் பொருட்களின் குறியீடுகள் உள்ளிட்ட ஒப்பந்தத்தின் தனி நிபந்தனைகள், பொருளின் அளவு (quantity), கட்டணவீதம் (rate), தொகை (amount) முதலியவை உள்ளிட்ட அளவுகளின் விவர அட்டவணை ஆகியவற்றைக் குறிப்பிட வேண்டும். பொருட்களை வழங்க முன்வருபவர்கள், அவர்களுடைய அச்சிட்ட பெயர், முகவரி விவரத் தாள்களில் குறித்த விவரப்புள்ளிகளை ஏற்றுக்கொள்வதில் அரசுத் துறைகளும், நிறுவனங்களும் மிக விழிப்பாக இருக்க வேண்டும். ஏனெனில், அந்தப் பெயர் முகவரி விவரத் தாளின் மறுபக்கத்தில் (reverse) பொருட்களை வழங்குபவர்களுக்கு சாதகமான, அச்சிட்ட சில நிபந்தனைகள் காணப்படலாம். அதனைத் துறை / நிறுவனம் கவனிக்காமல் விட்டுவிடக்கூடும். அதன் பின் விளைவுகள் துறைக்கும், நிறுவனத்திற்கும் பாதகமாக நேரலாம்.

## ஒப்பந்தப்புள்ளி வழங்குபவர்களுடன் பேச்சுவார்த்தை (Negotiations with Tenderers)

17. ஒரு பொது நிறுவனத்தின் தலைவர் குழுவிடம் பின்வருவனவற்றைச் சுட்டிக்காட்டினார். ஒப்பந்தப்புள்ளிகளைப் பரிசீலிக்கும்போது, குறைந்த விலைப்புள்ளி எதிர்பார்த்த அளவைவிட மிக அதிகமாக இருந்ததை அவர் அறிந்தவுடன், அனைத்து ஒப்பந்தப்புள்ளிதாரர்களுடனும் அவர் பயனுள்ள வகையில் பேரம் நடத்தி (negotiation), நிறுவனத்திற்கு ஆதாயம் தரத்தக்க விலையைப் பெற்றதாகவும், இதனால், ஓர் உற்பத்திப்பொருளின் மொத்த கொள்முதலான 6358 இலட்சம் ரூபாயில் 762 இலட்சம் ரூபாயும், மற்றோர் உற்பத்திப் பொருளின் மொத்த கொள்முதலான 1921 இலட்சம்

ரூபாயில் 837 இலட்சம் ரூபாயும் மீதமானதாகவும் கூட்டிக்காட்டினார். ஒப்பந்தப்புள்ளி தார்களின் ஒப்பந்தப்புள்ளி விலையை, ஒப்பந்தப்புள்ளியை ஆய்வு செய்யும் முதல் நிலையில் அறிந்த பின்னர், அவர்களனைவருடனும் துறைகள் / நிறுவனங்கள் பயனுள்ள வகையில் பேரம் (negotiation) நடத்தவேண்டுமென்று அவர் கருத்து தெரிவித்தார். குழு, இக் கருத்தினை கவனமாகப் பரிசீலித்தது. இத்தகைய பேச்சுவார்த்தை வழக்கமான நடைமுறையாக இருக்குமாயின், இது, ஒப்பந்தக்காரர்கள் ஒன்றாக சேர்ந்துகொண்டு முதல் நிலையிலேயே மிக அதிக வீதங்களைத் தெரிவிக்கத் தூண்டும். பேச்சுவார்த்தை மூலம் இந்த வீதம் குறைக்கப்பட்டாலும், கடைசியில் முடிவு செய்யப்பட்ட வீதம் அங்காடி விலையை விட அதிகமாகவே அமையக் கூடும். இந்த நிலை தவிர்க்கப்பட வேண்டும். ஆகையால் ஒப்பந்த நடைமுறையில் தெரிவிக்கப்படும் குறைந்த அளவு வீதம், நியாயமற்ற முறையில் அதிகமானதாக இருக்குமேயாயின், அந்த குறைவான ஒப்பந்தக்காரரின் வீதத்தை நியாயமான அளவிற்குக் குறைக்க அவருடன் மட்டுமே பேச்சுவார்த்தை நடத்தலாம் என்று குழு கருதுகிறது. அந்த முயற்சி தோல்வியுறுமேயானால், அந்த கொள்முதலைப் புதிய ஒப்பந்தப்புள்ளிக்கு விட்டுவிடவேண்டும். ஆனால், மீண்டும் புதிதாக ஒப்பந்தப்புள்ளி நடைமுறைகளைப் பின்பற்றுவதில் ஏற்படக் கூடிய கால தாமதம், இது சம்பந்தப்பட்ட வளர்ச்சி / உற்பத்தித் திட்டங்களின் முன்னேற்றத்தைப் பெரிதும் பாதிக்கும் என்ற நிலை இருந்தால், அந்த நேர்வுகளில் மட்டுமே புதிய ஒப்பந்தப்புள்ளிகளைக் கோருவதானது, முதலில் கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிக்குச் செவி சாய்த்துள்ள ஒப்பந்தக்காரர்களுக்கு மட்டும் என்று வரையறுத்துக்கொள்ளலாம். மேலும் முதலில் கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிக்கு அவரவர்கள் அவர்களுடைய ஒப்பந்தப்புள்ளியில் தெரிவித்திருந்த விலைப்புள்ளிகளுக்கு மேல் கூட்டணங்களைத் தெரிவிக்கக்கூடாது என்ற நிபந்தனையும் விதிக்கப் படவேண்டும். பேச்சுவார்த்தை நடத்துவதை, ஒப்பந்தப்புள்ளி நடைமுறையின் ஒரு வழக்கமான அம்சமாக (normal feature of the tender process) ஆக்க வேண்டுமென்ற கருத்தை குழு ஏற்கவில்லை. இது மிக அரிதாக நிகழக்கூடியதாக, மேலே குறிப்பிட்ட தவிர்க்க முடியாத சூழ்நிலைகளில் மட்டும் (exceptional circumstances) நிகழக்கூடியதாக இருக்கலாம்.

18. சில கொள்முதல் ஒப்பந்தங்களில் கண்டறியப்பட்டுள்ள ஓட்டைகள் அல்லது குறைபாடுகளின் காரணமாக சரக்குகளை அனுப்பும்போது காப்புறுதி (insurance) செய்யாததால் இழப்பு எற்படுவதும் அவ்வாறு சரக்குகளை அனுப்பும்போது ஏற்படுகிற பொருள் சேதமும் அரசுக்குப் பெரும் இடர்ப்பாட்டை ஏற்படுத்துகிறது. பொருள் வழங்குபவர் ஆயத்தீர்வை / சுங்கத் தீர்வை / விற்பனை வரி செலுத்தாமல் போகிற நிலையும் ஏற்படுகிறது. வருமான வரி / ஆயத்தீர்வை / விற்பனை வரி துறை அதிகாரிகள் கேட்புகளைத் தெரிவிக்கும் போது, அவற்றை வழங்குபவர்களின் பட்டிகளிலிருந்து

வசூலிக்க, சம்பந்தப்பட்ட துறை / நிறுவனத்திற்கு அதிகாரம் அளிக்கும் ஒரு நிபந்தனை விதி கொள்முதல் ஒப்பந்தங்களில் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும். கூடுதல் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, கொள்முதல் அதிகாரி, வழங்கல் ஆணைகளை, நிறுவனங்களுக்கு / உற்பத்தியாளர்களுக்கு அனுப்புகையில் அதன் நகல் ஒன்றை கூடவே சம்பந்தப்பட்ட ஆயத்தீர்வை / சுங்கத் தீர்வை /. விற்பனை வரி / வருமான வரி துறை அதிகாரிகளுக்கு அனுப்ப வேண்டும்.

## கட்டண உயர்வு பகுதி (Escalation Clause)

19. அங்காடி விலையில் ஏற்படக் கூடிய ஏற்ற இறக்கத்திற்கு வகை செய்ய, ஒரு கட்டண உயர்வு பகுதி ஒன்று பொருள்கள் கொள்முதல் ஒப்பந்தத்தில் சேர்க்கப்பட்டிருக்க வேண்டுமா என்ற கேள்வியை குழு கவனமாகப் பரிசீலித்தது. கட்டுமானப் பணிகள் போல் அல்லாமல், வழங்கல் ஆணைகள், குறைவான கால அளவிற்குள் நிறைவேற்றப்படக் கூடியவையாகும். மிகப் பல துணையங்களைக் கொண்ட ஒரு குறிப்பிட்ட உற்பத்திப் பொருள் அல்லது இயந்திரத்தைப் பொறுத்தமட்டில், பல்வேறு பாகங்களின் விலைகளில் ஏற்படக்கூடிய மாற்றங்களுக்கு ஒரு கொள்கை வகுப்பது என்பது நடைமுறையில் சிக்கலானதாக இருக்கக்கூடும். பொருள்கள் கொள்முதலுக்கான ஒப்பந்தத்தில் கட்டண உயர்வு பகுதியைச் சேர்க்க வேண்டிய அவசியம் இல்லையென குழு கருதுகிறது.

## ஏற்பாட்டுப்பணி முன்பணம் (Mobilisation Advance)

20. உற்பத்தியாளர்கள் பொருள் உற்பத்திக்கு முன் அதற்காக அதிக அளவில் செலவு செய்ய வேண்டியிருக்கும் நிலைகளில், மிகப் பெரிய இயந்திரம் அல்லது தனி வகை சாதனம் வாங்குதல் குறித்த சில இனங்கள் தவிர மற்றபடி செயற்பாட்டு பணி முன்பணம் வழங்கும் நடைமுறை நிறுத்தப்பட வேண்டும் என்று குழு பரிந்துரைக்கிறது. துறைத்தலைவர் / நிறுவனத்தலைவர் அனுமதியுடன் மட்டுமே, செயற்பாட்டுப் பணி முன்பணம் அளிக்கப்பட வேண்டுமென்று ஒரு விதி இயற்றப்பட வேண்டும். எடுத்துக் காட்டாக, குடிநீர் வழங்கு வாரியம், ஆழ் துளைக் கிணறுகள் அமைக்க 20 ரிக்குகளை வாங்க திட்டமிட்டிருக்கிறது என்று வைத்துக் கொள்வோம். இந்த ரிக்குகளை உற்பத்தி செய்வதற்காக என்றே ஒப்பந்தக்காரர் கூடுதலாக முதன்மை இயந்திரம் வாங்கி அவருடைய தொழிற்சாலையை சிறப்பாக விரிவுபடுத்த வேண்டியிருக்கும்போது, ஏற்பாட்டுப்பணி முன்பணம் வழங்குவது குறித்துப் பரிசீலிக்கலாம். இதே போல, 4 அடிக்கு மேல் விட்டமுள்ள திருகுசுருள் வடிவாக பற்றவைக்கப்பட்ட குழாய்களைத் தயாரிக்கும் வணிகத்தில் உள்ளவர்கள் கூட அவர்களுடைய தொழிற்சாலைகளில் கூடுதல்

வசதிகள் செய்ய வேண்டியிருக்கலாம். மேலும், அத்தகைய பெரிய விட்டமுள்ள குழாய்களை பற்ற வைத்து தயாரிக்க தானியங்கி கணினி கட்டுப்பாட்டு இயந்திரங்கள் (Computer controlled machinery) வாங்க வேண்டியிருக்கலாம். இந்த இனத்திலும் ஏற்பாட்டுப் பணி முன்பணம் வழங்குவது குறித்து பரிசிலிக்கலாம். இருப்பினும், இத்தகைய விதிவிலக்கான இனங்களில் கூட ஏற்பாட்டுப்பணி முன்பணம், அணையின் 10 சதவீதத் தொகைக்குள் வரையறுக்கப்பட வேண்டும். இந்த நிபந்தனை, ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிப்பில் சேர்க்கப்பட வேண்டும். இந்த முன்பணத்திற்கு அரசு வழங்கும் கடன்களுக்குப் பொருந்தும் வட்டி வீதம் விதிக்கப்படும். இந்த முன்பணத்தை வட்டியுடன் வசூலிப்பதானது, அவ்வப்போது வரும் பட்டியல்களில் வசூலிக்கப்பட வேண்டும். இதனை இறுதிப்பட்டி வரை தள்ளிப்போடக் கூடாது. இந்த செயற்பாட்டு பணி முன்பணம் நிபந்தனை அற்ற, ரத்து செய்ய முடியாத ஏங்கி உத்தரவாதம் (unconditional and irrevocable letter of credit) வரப் பெறுவதன் பேரில் மட்டுமே வழங்கப்பட வேண்டும்.

**பொருள் வழங்கு ஒப்பந்தக்காரர்களுக்குத் தொகை கொடுத்தல்**

21. தயாரிப்பு இடத்தில் ஆய்வு அலுவலரின் சான்றிதழ் வரப்பெறுவதன் பேரில் அந்த பட்டி தொகையில் 95 சதவீதம் கொடுக்கப்படும். தற்போதைய முறை திருத்தப்பட்டு, அதில் 75 சதவீதம் பட்டியல் தயாரிப்பு இடத்தில் ஆய்வு அதிகாரி சான்றிதழ் பேரில் செலுத்தத் தக்கதாகவும் 20 சதவீதம் அந்த பொருட்கள் நல்ல நிலையில் வரவேண்டிய இடத்திற்கு வரப்பெற்ற பின்பு மட்டும் செலுத்தத் தக்கதாகவும், எஞ்சிய 5 சதவீதம் பராமரிப்பு கால அளவு முடிந்தபிறகு செலுத்தத்தக்கதாகவும் வரையறுக்கப்பட வேண்டும். எப்படி குழாய் பிரந்துரைக்கிறது சாதனை உத்தரவாதம் வலியுறுத்தப்படாத (performance guarantee) இனங்களில், வழக்கமாக வழங்கல் ஆணை அளிக்கப்படும் இனங்களுக்கு பொருள்கள் நல்ல நிலையில் உரிய இடத்திற்கு வரப்பெறுவதன்பேரில், 25 சதவீத தொகை செலுத்தத்தக்கதாகும்.

**கூட்டுறவுச் சங்கங்கள், சிறுதொழில் பிரிவுகள்**

22. அரசு துறைகள், நிறுவனங்களுக்குப் பொருள்கள் வழங்குதல், பணி நல்குதல் ஆகியவற்றைப் பொறுத்த மட்டில், அரசு அதன் ஆணைகளின் படி, கூட்டுறவுச் சங்கங்களுக்கும், சிறுதொழில் பிரிவுகளுக்கும் முன்னுரிமை அளித்துள்ளது என்பதைக் குழு நன்கு அறியும். அரசுத் துறைகள் / நிறுவனங்களிடமிருந்து பொருள்கள் / பணிகளுக்கான வழங்கல் ஆணை, ஆணைப்பெற வழக்கமான ஒப்பந்த நடைமுறையில் இந்த கூட்டுறவுச் சங்கங்கள், சிறுதொழில் பிரிவுகள் பேரட்டியிட முற்படும்போது, தனியார் துறையில் அதிக அடிப்படை வசதிகளைப் பெற்றுள்ள மிகப்பெரிய தொழில்

பிரிவுகளுடன் போட்டியிடும் அளவிற்கு வலுவான நிதி ஆதாரங்களைப் பெற்றிருக்காமல் இருக்கலாம். ஆகையால், கூட்டுறவு சங்கங்கள், சிறுதொழில் பிரிவுகள் அளிக்கும் வீதம் மற்றவர்களுடைய விட அதிகமாக இருக்கலாம். அவ்விதம் இருந்தும் தற்போது அமலில் இருக்கும் அரசாணையால் அவைகள் சலுகை பெறுகின்றன. ஆயினும் கூட்டுறவு சங்கங்கள், சிறுதொழில் பிரிவுகளுக்குச் சாதகமாக எவ்வித அளவுகோலும் இல்லாமல் எல்லாவித விதிவிலக்கும் அளிப்பது முறையானதாக இருக்காது என்று குழு கருதுகிறது. இத்தகைய முன்னுரிமை வழங்குவதானது பொதுப்பணிகள், கொள்முதலுக்காக உள்ள பொது நிதியை மிக மிக்கனமாக கையாளவும் கோரிக்கவும் உள்ள பகிரங்க ஒப்பந்த ஏற்பாட்டுமுறை குறித்த அடிப்படை கோட்பாட்டிற்கு எதிரானதாகும். ஆகையால் கூட்டுறவு சங்கங்கள் சிறுதொழில் பிரிவுகள் வழங்கும் பொருட்கள், பணிகள் ஆகியவற்றைப் பொருத்தமட்டில் பின்வரும் திருத்த நடை முறை பின்பற்றப்பட லாம் என்று குழு பரிந்துரைக்கிறது. இவை, பொருள்களை உற்பத்தி செய்யும் பணியில் ஈடுபட்டுள்ள அல்லது, சிலவகையான பணிகளை (services) ஏற்பாடு செய்து வரும் சில அரசுத் துறைகள் / நிறுவனங்கள், ஏனைய சட்டப்படியான அமைப்புகளுக்கும் நீட்டிக்கப்பட லாம்.

(1) வரக்கூடிய அனுவல் பணியில், அரசுத் துறைகள் / நிறுவனங்கள் / சட்டப்படி அமைந்த நிறுவனங்கள் / பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் / சிறு தொழில் பிரிவுகள் ஆகியவை அளிக்கும் ஒப்பந்தப்புள்ளிகள், வரையறுக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி நடை முறைகளுக்கேற்ப (prescribed tender procedure) உரியவாறு பரிசீலிக்கப்பட வேண்டும்.

(2) வழக்கமான நடை முறையில் ஒப்பந்தப்புள்ளிகளைப் பெற மேற்சொன்ன அமைப்புகளால் இயலவில்லையெனின் அவை ஒப்பந்த நடைமுறையில் வரக்கூடிய குறைந்த விலையோடு இணையாக (match the lowest price) இருக்க சம்மதம் தெரிவித்தால் அப்போது ஒப்பந்தப்புள்ளி வழங்கும் அதிகாரி, ஒப்பந்தங்களை அவர்களுக்கு வழங்கலாம்.

(3) அரசுத் துறைகள் / நிறுவனங்கள், ஏனைய சட்டப்படி அமைந்த நிறுவனங்கள், ஆகியவற்றைப் பொறுத்தமட்டில் ஒப்பந்தப்புள்ளி வழங்குவதானது அவை நேரடியாக உற்பத்தி செய்யக்கூடிய பொருள்கள் அல்லது அவை நேரடியாக நல்கக்கூடிய பணிகள் அளவிற்கு மட்டும் வரையறுக்கப்பட வேண்டும். பதிவு பெற்ற கூட்டுறவுச் சங்கங்கள், சிறுதொழில் பிரிவுகள் ஆகியவற்றைப் பொறுத்த மட்டில், ஒப்பந்தப்பள்ளி வழங்குவதானது, அவை நேரடியாக உற்பத்தி செய்யும் பொருள்கள் அளவிற்கு மட்டும் வரையறுக்கப்பட வேண்டும்.

(4) மேற்சொன்ன நடைமுறையில் ஒப்பந்தப்புள்ளி வழங்கி அதன்மூலம் பொருள்கள் வாங்குவதாயது, அந்த ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு தொடர்பான மொத்த தேவையில் 50 சதவீதத்திற்கு மேல் இருக்கக்கூடாது.

(5) மேற்சொன்ன சலுகை வசதி, குறைந்தது மூன்றாண்டுகள் செயல்பாட்டில் இருந்து வரும் கூட்டுறவுச் சங்கங்கள், சிறுதொழில் பிரிவுகளுக்கு மட்டுமே கிடைக்கச் செய்ய வேண்டும்.

(6) மேலே விவரித்துள்ளவாறு அரசுத் துறைகள் / நிறுவனங்கள் / சட்டப்படி அமைந்த நிறுவனங்கள் / கூட்டுறவு சங்கங்கள் / சிறுதொழில் பிரிவுகள் ஆகியவற்றிற்கு அளிக்கப்படும் இந்த விதி, இந்த ஏற்பாடுகள் செயலுக்குக் கொண்டு வரப்பட்ட நாளிலிருந்து ஐந்தாண்டு கால அளவிற்கு மட்டுமே கிடைக்கச் செய்ய வேண்டும்.

23. பகிரங்க ஒப்பந்த அளிப்பு முறையில் மற்றவர்களோடு கூட்டுறவு சங்கங்களும், சிறுதொழில் பிரிவுகளும் போட்டியிட ஏதுவாக இருக்கும் வகையில், அவற்றிற்கு உதவித் தொகை, மானியம் அல்லது கடன் என்ற வகையில் நிதி உதவி அளிப்பது குறித்து அரசு, வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடுகளுக்கேற்ப, பரிசீலித்து கொள்கை அளவில், தனியாக முடிவு செய்யலாம். இந்த தொழில் பிரிவுகளுக்கு அளிக்கப்படும் முன்னுரிமைகளை பகிரங்க ஒப்பந்த செயற்பாட்டு முறையின் ஒரு பகுதியாகவே கொள்ளக்கூடாது என்று குழு வலியுறுத்த விழைகிறது.

**தொழில்நுட்ப பிரிவு (Technical Cell)**

24. ஒப்பந்த நடைமுறைகள் குறித்த அத்தியாயத்தில் பரிந்துரைத்துள்ளவாறு, கொள்முதல் ஒப்பந்தங்களும் விழிப்புப் பணி ஆணையத்தின் கீழ் அமைக்கப்படும் தொழில்நுட்ப பிரிவின் அதிகார எல்லைக்குள் இருக்கவேண்டும்.

25. ஒப்பந்த நடைமுறைகள், கொள்முதல் நடைமுறைகள் பற்றி இக்குழு ஆராய்ந்து கொண்டிருக்கும்போது, கட்டுமானப் பணிகளுக்கான ஒப்பந்தங்களை வழங்குவதிலும், பொருள்களுக்கான வழங்கல் ஆணைகள் வழங்குவதிலும் வெளிப்படைத் தன்மை இருப்பதற்கு வகை செய்ய அரசு ஒரு சட்டம் இயற்றக் கருதியுள்ளது என்று அரசு குழுவிடம் தெரிவித்தது. இது குறித்து தயாரிக்கப்பட்டிருந்த வரைவு சட்டமுன்வடிவு குறித்து குழுவின் கருத்தை அரசு கோரியது. இக்குழு, அந்த வரைவு சட்டமுன்வடிவைக் கவனமாக ஆய்வு செய்தது. இந்த அறிக்கையில் ஒப்பந்த நடைமுறை-கொள்முதல் நடைமுறை குறித்த அத்தியாயங்களில் இப்போது குறிப்பிடப்பட்டுள்ளவாறான

இக்குழுவின் கருத்துக்களின் அடிப்படையில் விரிவான திருத்தங்களைக் குழு அரசுக்கு 7-4-1997 அன்று பரிந்துரைத்தது. அரசு உத்தேசித்துள்ளவாறு, உத்தேச நுகர் முறைகளில் முக்கியமான அம்சங்களில் சில குறிப்பிட்ட சட்டத்தில் சேர்க்கப்படுமாயின், அவை, இத்தகைய பற்று-வரவுகள் அனைத்தின் வெளிப்படையான நியாயமான தன்மையையும் வலுப்படுத்தும் என்று இக்குழு கருதுகிறது. சட்டத்தில் சொல்லியுள்ள நுகர் முறைக் கோட்பாடுகள் ஏதேனும் மீறப்படுமேயாயின், நீதித்துறையும் தலையிட்டு நியாயத்துக்கு வழிசெய்ய முடியும். தூய்மையான, திறமையான நிருவாகத்தை அளிக்க வேண்டுமென விரும்புகிற அனைவராலும் இது வரவேற்கத்தக்கதாகும். அதனால்



அத்தியாயம் - 4

# பரிந்துரைகளின் சுருக்கம்

## அத்தியாயம் 2 - ஒப்பந்தப்புள்ளி நடைமுறை

1. ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்யும் தற்போதைய செயற்பாட்டு முறை, அனைத்து பொதுவான பொறியியல் பணிகளைப் பொறுத்த மட்டில், அனைத்து அரசுத் துறைகள், பொதுத் துறை நிறுவனங்களின் தேவைகளுக்கு ஏதுவும் வகையில் விரிவான பதிவாக தொடர்ந்து இருக்கலாம். இந்த பதிவுப் பணியை பொதுப்பணித் துறை மேற்கொள்ளலாம்.

2. சில துறைகள் / நிறுவனங்களுக்கு தனித்தன்மையானதாக இருக்கக்கூடிய சிறப்புப் பணிகளைப் பொறுத்த மட்டில், வரையறுக்கப்பட்ட, குறிப்பிட்ட காரணங்களுக்காக அந்தந்தத் துறையே தங்களுக்கு ஏற்ற சிறப்பு ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்யலாம்.

3. பணிகளின் மதிப்பிற்கேற்ப, நிறைவேற்ற தகுதியானவர் என்று கருதப்படக்கூடியவர்கள் / ஒப்பந்தக்காரர்களை, இந்து வகையாக வகைப்படுத்தும் தற்போதைய நடை முறை தொடர்ந்து இருக்கலாம்.

4. மாநிலத்தின் மாதொரு பகுதியிலும், அவரவர்களின் வகைகளுக்கேற்ப, பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளிகளை கோர, அனைத்து பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர்களும் (வகை V ஒப்பந்தக்காரர் உள்பட) அனுமதிக்கப்படவேண்டும்.

5. ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்வதற்கான நடை முறை, அத்தியாயம் - 2, பத்தி 8-ல் விவரித்துள்ள முறையில் எளிமையானதாக்கப்படும்.

6. ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்வது இரண்டு நிலைகளில் செய்யப்பட வேண்டும். ஒன்று, வகைகள் IV, V ஆகியவை பொறுத்தமட்டில், செயற்பொறியாளர் நிலையில், மற்றொன்று வகைகள் I, II, III ஆகியவை கண்காணிப்புப் பொறியாளர் நிலையில். ஒவ்வொரு நிலையிலுமான பதிவை, மூன்று அதிகாரிகள் அடங்கிய குழு முடிவு செய்யவேண்டும்.

7. கண்காணிப்புப் பொறியாளர் செய்யும் பதிவு, தலைமைப் பொறியாளருக்குத் தெரிவிக்கப்பட வேண்டும். அவர், பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர்கள் அனைவரின் மாநிலப் பட்டியல் ஒன்றைத் தயாரித்து, துறைகள் / நிறுவனங்கள் அனைத்திற்கும் அனுப்பிவைப்பார்.

8. மாநிலப் பட்டியலை, தலைமைப் பொறியாளர் ஒவ்வோர் ஆண்டும் ஏப்ரல் மாதத்தில் ஆய்வு செய்ய வேண்டும். யாதொரு துறை / நிறுவனத்தில் தொடர்ந்து மூன்றாண்டுகள், யாதொரு ஒப்பந்த நடை முறையில் பங்கு கொள்ளாமல் இருக்கும் ஒப்பந்தக்காரர்களின் பெயர்கள், அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டு, அந்தப் பட்டியலிலிருந்து நீக்கப்பட வேண்டும்.

9. கட்டண வீத அட்டவணையைத் (Schedule of Rates) தயாரிப்பதற்கு, பொதுப் பணித் துறை தலைமை அலுவலகத்தில் கண்காணிப்புப் பொறியாளர் அல்லது முதுநிலை செயற்பொறியாளர் ஒருவரின் தலைமையில் தனிப்பிரிவு ஒன்றை ஏற்படுத்த வேண்டும். புள்ளியியல் துறை, மண்ணியல்-சுரங்கவியல் துறை, தொழிலாளர் நலத்துறை ஆகிய ஒவ்வொரு துறையிலிருந்தும் ஓர் அதிகாரியை இந்தத் தனிப்பிரிவில் பேர்த்துக் கொள்ள வேண்டும். இப்முறையில் நேர்மையை நிலைநாட்டுதற்கு வெளி அங்காடியில் இருந்து வரும் கட்டண வீதங்களுக்கேற்ப இருக்கும் விதையில், கட்டண வீத அட்டவணையை நாளதுவரையிலானதாகப் பராமரிப்பது மிகவும் அவசியமாகும்.

10. பொதுப்பணித்துறை தலைமை அலுவலகத்தில் விழிப்புப் பணிக்குப் பொறுப்பு வகிக்கும் கண்காணிப்புப் பொறியாளரின் நிருவாக ஆய்வுவரம்பிற்குள் இந்த தனிப்பிரிவு செயல்பட வேண்டும்.

11. பொதுப் பொறியியல் பணிகள் அனைத்திற்கும் கட்டண வீத அட்டவணையைத் தயாரித்து, பராமரிப்பதற்குப் பொதுப்பணித்துறை பொறுப்பு வகிக்கையில், அரசுத் துறைகள், பொதுத் துறைகள் தங்களது விசேடப் பொறியியல் தேவைகளுக்கு அவசியமான நவீன சாதனங்கள் அல்லது தொழில் நுட்பத்தைப் பயன்படுத்திக் கொள்ள சிறப்புக்கட்டண வீத அட்டவணையை (Special Schedule of Rates) சொந்தமாகத் தயாரிக்கலாம். அவ்வாறு சிறப்புக்கட்டண வீத அட்டவணையைத் தயாரித்து, அதனை நாளது வரையில் பராமரித்துவரும் பணியைச் சம்பந்தப்பட்ட துறையின் / நிறுவனத்தின் தலைமை விழிப்புப் பணி அதிகாரியின் நிருவாக ஆய்வு வரம்பின் கீழ் வரும் தனிப்பிரிவு ஒன்று கவனித்துக் கொள்ள வேண்டும்.

12. எதிர்பாராத இனங்களுக்கு மதிப்பீட்டில் கூடுதலாக 5 சதவீதம் வழங்கப்படும். தற்போதைய நடை முறை நிறுத்தப்பட வேண்டும். "சிறு அளவிலான மேற்பார்வை மற்றும் சில்லறைச் செலவுக்காக" 5 சதவீதம் ஒதுக்கும் தற்போதைய மற்றொரு நடை முறையை சில்லறைச் செலவுக்கு மட்டும் என்று 25 சதவீதமாகக் குறைக்கலாம்.

13. ஒப்பந்தப் புள்ளிகள் கோரும் அறிவிப்பில் அப்பணிகளுக்கு தொழில்நுட்ப அனுமதி அளிக்கப்பட்டுள்ள விவரம் குறிப்பு கொடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

14. விதிவிலக்காக குறிப்பிட்ட பணிகள் தவிர அனைத்துப் பணிகளும், பதிரங்க ஒப்பந்தப்புள்ளி நடை முறையைப் பின்பற்றி வழங்கப்பட வேண்டும். அவை பின்வருவனவற்றை உறுதிப்படுத்துவதாக இருக்க வேண்டும்.

(1) நடை முறை வெளிப்படை யானதாக இருத்தல்,

(2) இயன்ற அளவு பலர் ஒப்பந்தப்புள்ளி அளிக்கக்கூடிய வகையில், ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிப்பை போதிய அளவு விளம்பரம் செய்தல்,

(3) பொது நலனைக் கருத்தில் கொண்டு, பெரிதும் அனுகூலமாகக் கூடிய கட்டண விகிதத்திலான ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக்கொள்ளுதல்.

(4) தெரிந்த நபர்களுக்கு அதிகாரபூர்வ வகையில் விருப்புரிமை அதிகாரத்தை தன்னிச்சையாக மேற்கொள்ள வாய்ப்பளிக்கும் சூழ்நிலைகளைத் தவிர்த்தல்.

15. ஒப்பந்தப்புள்ளிகளைக் கோரும் அறிவிப்பு குறித்து தமிழ் மற்றும் ஆங்கில முன்னணி பத்திரிக்கைகளிலும், மாவட்ட அலுவலகங்களிலுமுள்ள அறிவிப்புப் பலகைகளிலும் பெரிய அளவில் விளம்பரம் செய்யவேண்டும். ரூ.10 இலட்சத்திற்கும் கூடுதலான மதிப்புடைய பணிகளைப் பொறுத்த வரையில், ஒப்பந்தப்புள்ளிகளைக் கோரும் அறிவிப்பை அரசின் வெளியீடான 'தமிழரசு' பத்திரிக்கையில் விளம்பரம் செய்ய வேண்டும். 13.11.91

16. ஒவ்வொரு மாவட்டத்திலும் அலுவல் முறையில் வெளியிடப்படும் முறையான செய்தி அறிக்கை ஒன்றின் மூலம் ஒப்பந்தப்புள்ளிகளைக் கோரும் அனைத்து அறிவிப்புகளை முறையாகவும், பரிகவும் பயனுள்ள வகையிலும் வெளியிட வேண்டும். வரையறுக்கப்பட்ட பரிகப் பெரிய அளவிலான பணிகள் தொடர்பான ஒப்பந்தப்புள்ளிகளைக் கோரும் அறிவிப்புகள் குறித்த விபரங்களை மாநிலத் தலைமை இடத்தில் இத்தகைய அலுவல்முறையிலான வெளியீடுகளில் வெளியிடப்பட வேண்டும்.

இத்தகைய விளம்பரங்களை வெளியிடும் பொறுப்பினை, இதற்கென்று தனியாக நியமிக்கப்பட்ட அதிகாரிகள் மீது நிர்ணயிக்கலாம். மாவட்ட அளவிலும், மாநில அளவிலும், விளம்பர வெளியீடுகளில் சேர்ப்பதற்கு ஒப்பந்தப்புள்ளிகளைக் கோரும் அனைத்து அதிகாரிகளும், (Tender Inviting Authorities) இதற்கென்று தனியாக நியமிக்கப்பட்ட அதிகாரிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகளைக் கோரும் அறிவிப்பின் நகல்களைக் கொடுப்பதற்கு கடமைப்பட்டவராவார்கள்.

17. பதிவு செய்துகொள்ளப்பட்ட ஒவ்வொரு ஒப்பந்ததாரரும், ஒப்பந்தப் புள்ளிகளைக் கோரும் அறிவிப்புக்குப் பதிலளிப்பதற்கும் ஒப்பந்தப்புள்ளி குறித்த அட்டவணைத்தாள்களைக் கேட்பதற்கும் உரிமை உடையவராவார். ஒப்பந்தப்புள்ளி அட்டவணைகளில் நகல்கள் வட்ட அலுவலகங்களில் / வளர்ச்சி வட்டார அலுவலகங்களில் / மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் விற்பனைக்குக் கிடைக்கக் கூடியதாகவும் இருக்கவேண்டும். இதன்மூலம் ஒப்பந்தப்புள்ளி அனுப்ப விரும்பும் ஒப்பந்ததாரர்கள் அவற்றை எளிதாகப் பெறலாம்.

18. ஒப்பந்தப்புள்ளிகளைக் கோரும் அறிவிப்பு வெளியிடப்படும் நாளுக்கும், ஒப்பந்தப்புள்ளிகளைத் திறக்கும் நாளுக்கும் இடையே போதிய கால அவகாசம் அளிக்கப்படவேண்டும். இக்கால அளவு, ரூ.15 இலட்சம் வரையிலான மதிப்புடைய பணிகளுக்கு அல்லது சிறப்புத் தன்மை வாய்ந்த பணிகளுக்கு குறைந்தது 4 வார கால அளவாகவும் இருக்க வேண்டும்.

19. ஒப்பந்தப்புள்ளிகளைத் திறந்து அவற்றை மதிப்பீடு செய்யும் பணியை தனி நபர் ஒருவரிடம் ஒப்படைப்பதற்கு பதிலாக, மூன்று அதிகாரிகளைக் கொண்ட குழு ஒன்றிடம் ஒப்படைக்க வேண்டும். இக்குழுவை, ஒப்பந்தப்புள்ளி ஆய்வுக்குழு (Tender Scrutiny Committee) என்று அழைக்கலாம்.

20. ஏதேனும் ஒரு காரணத்திற்காக ஒப்பந்தப்புள்ளியைத் திறந்து மதிப்பீடு செய்யும் நாளைத் தள்ளி வைக்கும்போதெல்லாம் அவ்வாறு ஒப்பந்தப்புள்ளிகள் திறந்து மதிப்பீடு செய்வது தள்ளிவைப்பது குறித்து முதற்கண் செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிப்பைப் போன்றே சம அளவில் விளம்பரம் செய்ய வேண்டும்.

21. கட்டண வீத அட்டவணைக்கு உட்பட்ட அனைத்து வகையான பணிகளிலும் ரூ.20 இலட்சம் வரையில் மதிப்புடைய பணிகளுக்கு சதவீத அடிப்படையிலான கட்டண வீத ஒப்பந்தப்புள்ளி முறை பின்பற்றப்படலாம்.

22. ஒப்பந்தப்புள்ளி ஆய்வுக்குழு, நடப்பு கட்டண வீத அட்டவணைக்கு இணங்கவும், அட்டவணைக்கு அப்பாற்பட்ட இனங்களைப் பொறுத்தவரையில் நிலவும் அங்காடி கட்டண வீதத்திற்கு இணங்கவும் அவைத்து ஒப்பந்தப்புள்ளிகளையும் பரிசீலனை செய்ய வேண்டும்.

23. ஒப்பந்தப்புள்ளிதாரருக்குப் பணியை வழங்க முடிவு செய்யும் அதிகாரம், தற்போது தனிப்பட்ட அதிகாரிக்கு வழங்கப்பட்டுள்ளதற்குப் பதிலாக, மூன்று உறுப்பினர்களைக் கொண்ட குழுவிடம் ஒப்படைக்க வேண்டும். இதை ஒப்பந்தம் ஏற்புக் குழு (Tender Award Committee) என்று அழைக்கலாம்.

24. மதிப்பீடு செய்யப்பட்ட பணிகளின் மதிப்பு ரூ.25 இலட்சத்திற்கு மேற்பட்டிருக்கும் இனங்களில் ஒப்பந்தப்புள்ளி வழங்கும் குழு, தலைமைப் பொறியாளர் ஒருவரையும், அதே பதவித்தரத்திலுள்ள மற்றொரு துறையைச் சேர்ந்த பொறியாளர் ஒருவரையும், நிதித்துறை அரசு இணைச் செயலர் ஒருவரையும் கொண்டிருக்கவேண்டும். இவ்வகையைச் சேர்ந்த குறிப்பிட்ட ஒரு பணி, மிகவும் சிக்கலான பொறியியல் வடிவமைப்புகள் சம்பந்தப்பட்டதாக இருந்தால், இதே பணியைக் கவனிக்கும் பொதுத்துறை அல்லது தனியார் துறை நிறுவனத்தைச் சேர்ந்த மூத்த தொழில்நுட்ப வல்லுநர் ஒருவரை இக்குழுவில் ஓர் உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ளலாம்.

25. சாதாரணமாக ஒரு பணியை, குறைந்த கட்டண வீதங்களைக் குறிப்பிட்டிருக்கும் ஒப்பந்தப்புள்ளிதாரருக்கே அளிக்க வேண்டும். ஆனால், ஒப்பந்தப்புள்ளியை கோரும் அதிகாரி, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களில் சில சிறப்புத் தொழில்நுட்பத் தேவைகளை நிறைவேற்ற வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தால், அத்தகைய தொழில்நுட்பத் தேவைகள் தொடர்பான கூறுகளை அடிப்படையாகக் கொண்டு முடிவு செய்யப்பட்ட மிகக் குறைந்த ஒப்பந்தப் புள்ளிதாரருக்கு அப்பணியை வழங்க வேண்டும். ஆனால் இத்தகைய சிறப்புக்கூறுகள், தொகை அடிப்படையில் அளவிடக்கூடியதாகவும் விவரிக்கத்தக்கவையாகவும் இருக்கவேண்டும்.

26. ஒப்பந்தத்தை வழங்க முடிவு செய்வதற்குமுன் குறிப்பிடப்பட்டிருக்கும் கட்டணவீதங்கள் கட்டுப்படியானவையா என்பதையும் ஒப்பந்தத்தை ஏற்கும் குழு மதிப்பிட வேண்டும்.

27. ஒப்பந்தப்புள்ளி ஆய்வுக் குழு, அதன் மதிப்பீடும், பரிந்துரைகளும் நியாயமானவையே எனத் தெரிவிக்க, போதிய விவரங்களுடன் காரணங்களைப் பதிவு

செய்ய வேண்டும். அதுபோலவே, ஒப்பந்தத்தை வழங்கும் குழு, இறுதியாகப் பணியை வழங்கியதற்கான காரணங்களை விவரமாகப் பதிவு செய்யவேண்டும்.

28. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந்ததாரர்கள், ஒரே அளவில் குறைந்த விலையைக் குறிப்பிட்டிருந்தால், ஒரே அளவில் விலையைக் குறிப்பிட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிதாரர்களுக்கு அந்த ஒப்பந்தப்புள்ளியை, ஒப்பந்தம் வழங்கும் குழு பிரித்துக் கொடுக்க வேண்டும். அவ்வாறு ஒப்பந்தப் புள்ளியைப் பிரித்துக் கொடுக்க இயலாத போது, முடிவாக ஒப்பந்தம் வழங்கப்பட்டதற்கான காரணங்களை குழு பதிவு செய்ய வேண்டும்.

29. தண்ணீரைச் சுத்திகரிக்கும் தளவாடத்தை நிறுவுதல், வளைவு அணைகளைக் கட்டுதல், விளையாட்டு அரங்கங்கள் கட்டுதல் போன்ற சிறப்புப் பணிகளைப் பொறுத்தவரையில் தற்போது பின்பற்றப்பட்டுவரும் இரட்டை உறைமுறை, அதாவது முதல் உறையில் ஒப்பந்ததாரரின் தொழில் தகுதி, சம்பந்தப்பட்ட தொழில் நுட்பத்தில் அவருக்கு இருக்கும் அறிவாற்றல் போன்ற விவரங்களை அளிப்பது, இரண்டாம் உறையில் செலவு (financial) அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி பற்றிய விவரங்களை அளிப்பது என்னும் இரட்டை உறைமுறை தொடர்ந்து இருக்கலாம். இந்த முறையில், ஒப்பந்தப்புள்ளிகளை, ஆய்வு செய்யும் குழு முதற்கண் அவர்களுடைய தொழில் நுட்பத்திற்கு இணங்க, அவர்களின் தகுதியை வரிசைப்படுத்திப் பட்டியலிட வேண்டும். இரண்டாம் உறையிலுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை, ஒப்பந்தப்புள்ளி ஆய்வுக்குழு செலவைத் தனியாக மதிப்பீடு செய்யவேண்டும். பின், பணிச் செலவுக்கு இணங்க, முன்னுரிமை அடிப்படையில் அவற்றை வரிசைப்படுத்திப் பட்டியலிட வேண்டும். ஒப்பந்தம் வழங்கும் குழு இரு பட்டியல்களையும் சேர்த்து கவனமுடன் பரிசீலனை செய்து, பொது நலனைக் கருத்திற்கொண்டு ஒருபுறம் ஒப்பந்தப்புள்ளிச் செலவையும் மறுபுறம் தொழில்நுட்பத் தகுதியையும் சீர்தூக்கிப் பார்த்து எந்த ஒப்பந்ததாரர் அளித்த விலைப்புள்ளி வீதம் மிகவும் அனுகூலமாக இருப்பதாக தெரிய வருகிறதோ, அந்த அனுகூலமுடைய விலைப்புள்ளியைக் குறிப்பிட்டுள்ள ஒப்பந்ததாரரை தேர்ந்தெடுக்க வேண்டும்.

30. ஒப்பந்தப்புள்ளி ஆய்வுக்குழு மற்றும் ஒப்பந்தம் ஏற்புக் குழு ஆகியவற்றின் நடைமுறைகள் சீரிய நோக்கத்தையும், பொது நலனில் அக்கறையையும் இலக்காகக் கொண்டு மேற்கொள்ளப்பட வேண்டும். இக்குழுக்களின் முடிவுகள், பெரும்பான்மை உறுப்பினர்களின் கருத்தை அடிப்படையாகக் கொண்டு இருக்க வேண்டும். இக்குழுவைச் சேர்ந்த எந்த உறுப்பினருக்கும் அவருடைய மறுப்புக் குறிப்பினைப் பதிவு செய்வதற்கு

உரிமை உண்டு. அவ்வாறான மறுப்புக் குறிப்பு, நடவடிக்கைக் குறிப்புப் பதிவின் ஒரு பகுதியாகவே கொள்ளப்படும்.

31. கீழ்நிலையிலிருந்து மேல்நிலை வரையில் ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் சுற்றிச் சுற்றி வருவதைக் குறைப்பதற்கும், ஒப்பந்தம் வழங்குவது பற்றி முடிவு எடுப்பதில் காலதாமதம் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கும் துறைத் தலைவர்கள், நிறுவனங்களின் தலைவர்கள், அவர்களுடைய அலுவலகங்களில் பின்பற்றப்படும் செயல்பாட்டு நடைமுறையைப் பரிசீலனை செய்து, அவற்றைத் தகுந்தவாறு மாற்றியமைக்க வேண்டும்.

32. ஒப்பந்தம் வழங்கும் குழு ஒப்பந்தத்தை வழங்க முடிவு செய்தபிறகு, ஒப்பந்தம் வழங்கப்பட்டதற்கான காரணங்களுடன் அம்முடிவினை ஒப்பந்தப்புள்ளி அளித்த அனைவருக்கும் தெரிவிக்க வேண்டும்.

33. மேலே குறிப்பிட்ட முறையில், அனைத்து வகையான ஒப்பந்தப்புள்ளிகளும் ஆய்வு செய்யப்பட்டு, அவை சம்பந்தப்பட்ட ஒப்பந்தம் வழங்கும் குழுக்களால் அனைத்து வகையான ஒப்பந்தங்களும் முடிவு செய்யலாம். இந்த முறையில் எந்த ஒரு ஒப்பந்தத்தையும் வழங்குவதற்கு அரசு அளவில் முடிவு எடுப்பதற்கு அதை அரசுக்கு அனுப்பிவைக்க வேண்டிய அவசியம் இல்லை.

34. பின்வருபவை நீங்கலாக, அனைத்துப் பொறியியல் பணிகளைப் பொறுத்த வரையில், மேலே விவரித்துக் கூறப்பட்டுள்ளவாறு, பகிரங்க ஒப்பந்தப்புள்ளி நடைமுறையைக் கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டும்.

(1) இயற்கைச் சீற்றங்களின் போதும், அவசர நிலைகளிலும் அவசரமாக மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அரசால் அறிவிக்கப்படும் பணிகள். ஒரு பணியை அவசரப் பணியாக அறிவிக்கும் அதிகாரங்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும், தலைமைப் பொறியாளருக்கும் வழங்கப்படலாம்.

(2) அரசால் வரையறுக்கப்பட்ட சில நிதி வரையறைக்குக் கீழுள்ள குறைந்த மதிப்புள்ள பணிகள்.

(3) குறிப்பிட்ட ஒரு ஒப்பந்ததாரரிடம் மட்டுமே இருக்கின்ற நவீன தொழில்நுட்பம் சம்பந்தப்பட்டப் பணிகள், அப்பணிகள் செம்மையாகச் செய்யப்பட வேண்டுமானால், அவரிடமே வழங்கப்பட வேண்டியப் பணிகள். எந்தவொரு குறிப்பிட்ட பணி இவ்வகையின்கீழ் வருகிறதா என்பது குறித்து,

2ஆம் அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, மூன்று வல்லுநர்களைக் கொண்ட குழு முடிவு செய்ய வேண்டும்.

35. மேலே (1)-ஆம் இனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வகையைச் சேர்ந்த அவசரப்பணிகளைப் பொறுத்தவரையில், அப்பணியைச் செம்மையாக விரைவில் செயல்படுத்துவதற்கு, ஒப்பந்ததாரரின் பின்னணி, அனுபவம், தகுதி, நம்பகத்தன்மை ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு, பதிவு செய்யப்பட்ட பட்டியலிலுள்ள நியமன ஒப்பந்ததாரர்களிடம் அப்பணி ஒப்படைக்கப்படலாம். எனினும் கோட்டப் பொறியாளர் / கண்காணிப்புப் பொறியாளர் / தலைமைப் பொறியாளர் நிலையில் சாதாரணமாக வந்த அளவிற்கு நிதி வரையறை உள்ளதோ, அந்த அளவில் நான்கில் ஒரு பங்கு அளவிற்கு மட்டுமே அவசரப் பணிகளுக்கு நிதிவரையறையை அனுமதிக்கலாம்.

36. சூ10 இலட்சத்திற்குக் கூடுதலான மதிப்புடைய பணி ஆணைகளின் நகல்கள், ஒரே சமயத்தில் ஒழுக்கம் கண்காணிப்பு - விழுல் தடுப்பு இயக்குநருக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். அவர், அந்த இயக்ககத்திலுள்ள சட்டப்படி ஏற்கப்பட்ட நடைமுறைகளுக்கு இணங்க, ஒழுக்கம்-கண்காணிப்புப் நோக்கில் பணி நிறைவேற்றப்படுவதைக் கண்காணிக்க வேண்டும்.

37. சிமிட்டி, உருக்கு, பிவிசி குழாய்கள், இரு குழாய்கள் முதலியவற்றைத் தணையளவில் கொள்முதல் செய்து, அவற்றை ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கிவரும் தற்போதைய நடைமுறையைத் தொடரலாம். கோட்டப் பொறியாளர் அல்லது கண்காணிப்புப் பொறியாளர் தேவைப்பட்ட பொருட்களின் அளவை, காலாண்டுக்கு ஒருமுறை நுணுக்கமாகக் கண்காணிக்க வேண்டும். அப்போதுதான் பொருட்களை வாங்கி வழங்குவதன் காரணமாக அரசுப் பணம் தேவையில்லாமல் பெருமளவில் முடக்கப்படாது குறைந்த அளவிலேயே இருக்குமாறு பார்த்துக் கொள்ள முடியும்.

38. பணியிடத்திலிருந்து சிறிது தொலைவில் அமைந்திருக்கும் கல் வெட்டியெடுக்கும் இடத்திலிருந்து எடுத்து வரப்படும் பொருட்களைப் பயன்படுத்துவது சம்பந்தப்பட்ட பணிகளைப் பொறுத்தவரையில், உள்ளூர் வருவாய் அதிகாரிகளால் சான்றளிக்கப்பட்டவாறு, பணியிடத்திற்கு அருகில் இருக்கும் கல்வெட்டி எடுக்கும் இடத்தை ஒப்பந்தப்புள்ளி அட்டவணையில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

39. பணியை முடிப்பதற்கு வரையறுக்கப்பட்ட கால அளவு 24 மாதங்களும் அதற்கும் மேற்பட்டும் இருக்கும் நேர்வில் விலை ஏற்றத்திற்கு வகை செய்யும் பகுதி ஒன்றை ஒப்பந்த உடன்பாட்டில் சேர்க்கலாம்.

40. பணிகளை மேற்கொள்ளும்போது, உள்ளூர் நிலைமைகளுக்கும், மாறுபட்ட தேவைகளுக்கும் இணங்க சில நேரங்களில் மாற்றங்கள் செய்யப்பட்டு மேற்கொள்ளப்படுகின்றன. மாற்றங்களைச் செய்வதற்கு தற்போது இருக்கும் நடை முறை தொடர்ந்து இருக்கலாம்; ஆனால், ரூ.25 இலட்சத்திற்கு மேற்பட்ட மதிப்புடைய அனைத்துப் பணிகளிலும் திட்டப்பணி மாற்றங்கள் குறித்த இனங்களின் செலவில் உள்ள வேறுபாடு குறித்து பொதுப்பணித்துறை தலைமை அலுவலகத்திலுள்ள தனிப் பிரிவு மூலம் ஆய்வு செய்யப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட வேண்டும்.

41. இட ஆணைப் புத்தகம் (Site Order Book) தொடர்பான நிலை ஆணைகள் அனைத்தும், தொகுக்கப்பட்டு களப்பணி அலுவலர்கள் அவற்றைக் கண்டிப்பாகப் பின்பற்றும் வகையில், அவற்றை மீண்டும் வெளியிட வேண்டும். முக்கியமான இப்பதிவேட்டில் நம்பகத்தன்மையைப் பராமரிக்க, வரையறுக்கப்பட்ட நெடும்பத்திகளுடன் எண்கள் அச்சிடப்பட்ட பக்கங்களைக் கொண்டு, போதிய எண்ணிக்கையில் இப்புத்தகங்கள் அச்சிடப்பட வேண்டும்.

42. ரூ.5 இலட்சம் மதிப்புடைய பணிகளைப் பொறுத்த வரையில், கோட்டப் பொறியாளரும், ரூ.5 இலட்சத்திற்கு மேல் ரூ.25 இலட்சம் வரையில் மதிப்புள்ள பணிகளைப் பொறுத்தவரையில் கண்காணிப்புப் பொறியாளரும், ரூ.25 இலட்சத்திற்கு மேல் மதிப்புடைய பணிகளைப் பொறுத்த வரையில், தலைமைப் பொறியாளரும் அளித்த "கட்டுமானம் நல்ல நிலையில் உள்ளது" என்று கூறும் சான்றிதழ் இல்லாது பணிகளுக்கான இறுதித் தொகைப் பட்டுவாடாவை வங்கக் கூடாது.

43. ஒப்பந்தக்காரர்களின் இரகசியப் பதிவேடு (Confidential Register of Contractors) தொடர்பான அனைத்து உத்தரவுகளையும் தற்போது ஒன்று தொகுத்து அவற்றைக் கள அதிகாரிகள் கண்டிப்பாகப் பின்பற்றுவதற்காக மீண்டும் அவற்றை வெளியிட வேண்டும்.

44. ஒப்பந்தக்காரர்களுடன் மத்தியஸ்தம் (Arbitration) கொள்ளப்படுவதற்காக ஒப்பந்தங்களின் பகுதி, பின்வருவனவற்றை உள்ளடக்கும் வகையில் விளக்கமாக இருக்க வேண்டும்.

(1) நடுவராக (Arbitrator) அறிவிக்கப்பட்ட அதிகாரி, நேர்மையான முதுநிலை பொறியாளராக இருக்க வேண்டும்.

(2) தீர்ப்புக்கான காரணங்கள் எழுத்து மூலமாக விவரிக்கப்பட்டு இருந்தால்தான் தீர்ப்பு ஏற்கத் தக்கதாகும் என்ற அப்பகுதியில் தெளிவு படுத்தப்பட வேண்டும். முறைமுகமான ஒரு வரி தீர்ப்புகள் ஏற்கப்படத்தக்கதல்ல.

(3) ஒப்பந்தக்காரர், பணியை முடித்தபிறகு மூன்று மாதங்களுக்குள், தகவாறுகள், கோரிக்கைகள், சம்பந்தப்பட்ட தொகை ஆகியவற்றைக் குறிப்பிட்டு, பொறியாளர்களுக்கு எழுத வேண்டும் என்றும், அவ்வாறு செய்யத் தவறினால், ஒப்பந்தக்காரர் நடுவர் மன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய மாட்டார் என்று கருதப்படும் என்றும், இப்பகுதியில் தெளிவு படுத்த வேண்டும்.

45. வருங்காலத்தில், SAS தேர்வில் தேர்ச்சி பெற்ற அதிகாரிகள் மட்டுமே கோட்டக் கணக்கர்களாக நியமிக்கப்படுவதற்குக் கருதிப் பார்க்கப்படுவர். SAS தேர்வில் தேர்ச்சி பெறாமல் கோட்டக் கணக்கர் பதவியில் தற்போதுள்ள பணியாளர்கள் மூன்று ஆண்டு கால அளவிற்குள் இத்தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும். அவ்வாறு அவர்கள் செய்யத் தவறினால், கோட்டக் கணக்கர் பதவியிலிருந்து விடுக்கப்படுவர்.

46. முக்கிய கட்டுமானப் பணிகள் தொடர்பான அனைத்து தொழில்நுட்ப விஷயங்கள் குறித்து ஒட்டுமொத்தமாக கண்காணிக்க விழிப்புப் பணி ஆணையத்தின் கீழ் நேரடியாகப் பணிபுரிய உயர்நிலைத் தொழில்நுட்பக் குழு ஒன்று அமைக்கப்படலாம். இக்குழுவிற்குத் தலைமைப் பொறியாளர் பதவித் தரத்திலுள்ள அதிகாரி ஒருவர் தலைவராக இருக்கலாம். இவருடைய சார்நிலைப் பணியாளர்கள், கணக்கு மற்றும் பொறியியல் பிரிவுகளிலிருந்து நியமிக்கப்படுவர். பெரும் கட்டுமானப் பணிகளைப் பொறுத்தமட்டில், விழிப்புப் பணி ஆணையத்திற்கு வரப் பெறும் பாதகமான தகவல் அல்லது இயல்பான நடைமுறையில் துறை தணிக்கையில் வெளிவரும் பாதகமான பொருள்களைப் பற்றி தொழில் நுட்ப தணிக்கை செய்வது இக்குழுவின் பொறுப்பாகும்.

## அத்தியாயம் 3 - கொள்முதல் நடைமுறை (Purchase Procedure)

47. கட்டுமானப் பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி நடைமுறை தொடர்பான குழுவின் பரிந்துரைகள், ஒப்பந்தப்புள்ளிகள் மூலமாக செய்யப்படும் அனைத்து கொள்முதல்களுக்கும் வேண்டிய மாறுதல்களுடன் பொருந்தும்.

48. இயந்திரங்களை வழங்குவதற்கான ஒப்பந்தப்புள்ளிகளை மதிப்பிடுகையில், ஒப்பந்தப்புள்ளி ஆய்வுக்குழு, இயந்திரத்திற்காகக் குறிப்பிடப்பட்ட விலையை மட்டுமல்லாது, இச்சாதனத்தை இயக்குவதற்காக மூன்றாண்டுகளுக்காக பரிந்துரைக்கப்பட்ட உதிரிபாகங்களின் விலையையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

49. ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பிட்டு மதிப்பிடும்போது பராமரிப்பு இயக்கச் செலவையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

50. ஒவ்வொரு துறையிலும் / நிறுவனத்திலும், முதுநிலை அதிகாரி ஒருவரைத் தலைவராகக் கொண்ட மைய கொள்முதல் பிரிவு (Central Purchase Cell) ஒன்றை ஏற்படுத்தவேண்டும். இம் முதுநிலை அதிகாரி தலைமைக் கொள்முதல் அதிகாரி (Central Purchase Officer) என அழைக்கப்படலாம். அங்காடி நிலைமையை அறிந்து கொள்ளும் பொருட்டும், துறை / நிறுவனம் வழக்கமாக வாங்கும் பல்வேறு பொருள்களின் விலைப்பட்டியலை ஆண்டுதோறும் தயாரிப்பதற்கும், களநிலையிலும், தலைமையிடத்திலும் அவருக்குத் தக்க துணைப் பணியாளர்களை பணியிலமர்த்த வேண்டும். பொருள் வழங்கும் பிரபலமான நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப் புள்ளிகளைக் கேட்பதன் மூலம், அவர் ஒரு விலை விதத்தை நிர்ணயித்து, அத்தகைய பொருள் வழங்குவோருடன் ஒப்பந்தம் செய்து கொண்டு பொருள் வழங்குவோரின் பட்டியலையும் ஒப்புதலளிக்கப்பட்ட விலை விதத்தையும் அனைத்துக் களப் பிரிவுகளுக்கும் சுற்றனுப்பலாம். அதன் பின்னர், களப் பிரிவுகள் தாங்களே அதன்படி நேரடியாகக் கொள்முதல் செய்து கொள்ளலாம். வழங்கும் பொருள்களை பார்வையிடுவதும், தொகை கொடுப்பதற்கு முன் அவற்றின் தரத்தைச் சோதனை செய்வதும் களப்பிரிவு அலுவலரின் பொறுப்பாகும்.

51. ஒப்பந்த விலையானது, முதலில் மதிப்பிடப்பட்ட விதத்தைக் காட்டிலும் 15 சதவீதம் அதிகமாக இருக்கும் அளவுக்கு இனங்களிலும், துறைத்தலைவரின் / நிறுவனத் தலைவரின் ஒப்புதல் பெற்றாலன்றி மற்றபடி அதே பொருளை அதிக அளவில் வாங்கக் கூடாது.

52. இந்த அறிக்கையின் அத்தியாயம் 2-இல் விவரிக்கப்பட்டவாறு, பகிரங்க ஒப்பந்த முறை, பின்வருபவை நீங்கலாக அனைத்து கொள்முதல்கள் தொடர்பாகக் கண்டிப்பாகப் பின்பற்றப்பட வேண்டும்.

(1) இயற்கைச் சீற்றங்களின் போதும், நெருக்கடி நிலைகளின் போதும் (அரசு அவ்வாறு அறிவிக்கும்போது) அவசரமாகச் செய்யப்பட்ட கொள்முதல்கள்.

(2) குறைந்த விலை மதிப்புடைய கொள்முதல் மற்றும் அரசு வரையறுத்த எல்லைகளுக்குள் செய்யப்பட்ட நேரடிக் கொள்முதல்.

(3) ஒரு பொருளைப் பொறுத்தமட்டில் முழு உரிமைகளை உடைய அல்லது அதன் தயாரிப்பு தொடர்பான தொழில் நுட்ப உத்தியில் முழுமையாக

ஈடுபட்டுள்ள குறிப்பிட்ட ஒரு பொருள் வழங்குபவரிடமிருந்து ஒருவழிக் கொள்முதல் செய்தல் (Single Source Procurement). ஆனால், கொள்முதல் உரிமை உள்ள தொழில் நுட்பப் பிரதிநிதி ஒருவர், இதே போன்று கொள்முதலைக் கவனிக்கும் மாநில அல்லது மத்திய அரசு நிறுவனத்தின் தொழில் நுட்பப் பிரதிநிதி ஒருவர், இத்தகைய துறையில் திறமை உள்ள புகழ் பெற்ற கல்வி அல்லது ஆராய்ச்சி நிறுவனத்தின் அல்லது வணிக நிறுவனம் அல்லாத நிறுவனத்தின் பிரதிநிதி ஒருவர் ஆகிய மூன்று வல்லுநர்கள் அடங்கிய குழு ஒன்று, இந்நோக்கத்திற்காக இதனை ஒருவழிக் கொள்முதல் என்று அறிவிக்க வேண்டும்.

(4) நூற்பாலைகள் பயன்படுத்தி, வேளாண் தொழில் கழகம் அல்லது எண்ணெய் வித்துக் கழகம் வாங்கும் எண்ணெய் வித்துக்கள், எண்ணெய், சந்தையிலிருந்து வாங்கப்படும் கால்நடை நுகர் பொருள் வழங்கல் கழகத்தின் கொள்முதல் மைய இயக்குநர் வாங்கும் கரும்பு போன்ற கொள்முதல்கள் மற்றும் அரசு அவ்வப்போது அறிக்கையிடும் இது போன்ற இனங்களை அந்தந்த இடத்திலேயே கொள்முதல் செய்யும் இனங்கள்

53. நெருக்கடி நிலையின் போது செய்யப்படும் கொள்முதலைப் பொறுத்தவரை, கொள்முதல் செய்யும் அதிகாரிகளின் அதிகாரங்கள் சாதாரண கொள்முதல் அதிகாரங்களில் நான்கில் ஒரு பங்காக வரையறுக்கப்படலாம்.

54. அவசரத்தன்மை வாய்ந்த அத்தகைய அனைத்து கொள்முதல் ஆணைகளின் நகல்கள் ஒரே சமயத்தில் மாநில கணக்குத் துறைத் தலைவருக்கும் துறையின் / நிறுவனத்தின் தணிக்கைப் பிரிவுக்கும் அனுப்பப்பட வேண்டும். மூத இலட்சம் மதிப்புக்கு மேற்பட்ட கொள்முதல் ஆணைகளின் நகல்கள் ஒழுக்கம் கண்காணிப்பு - ஊழல் தடுப்பு இயக்குநருக்கு அனுப்பப்பட வேண்டும்.

55. ஒப்பந்தப்புள்ளிதாரர்களுடன் மிக அரிதாகத்தான் பேரம் (negotiations) நடத்த வேண்டும். அத்தியாயம் 3-இல் பத்தி 17ல் விவரிக்கப்பட்ட விதிவிலக்கான சூழ்நிலைகளில் மட்டுமே பேரம் நடத்தப்படலாம்.

56. தலைமைக் கொள்முதல் அதிகாரி, இவருக்குச் சமமான பதவித் தரத்திலுள்ள மற்றுமொரு தொழில்நுட்ப அதிகாரி, நிதி அதிகாரி ஆகியோர் அடங்கிய குழு பொருள் வழங்குவோர் தரத்தை மதிப்பீடு செய்ய வேண்டும்.

57. சில பொருள்களுக்கு அவை வழங்கப்பட்ட நாளிலிருந்து குறிப்பிட்ட காலம் வரை, அவற்றின் செயல்பாட்டுக்கு உத்தரவாதமளிக்கப்படுகிறது (guarantee of performance). பொருள் பட்டியல் அதிகாரிகளின் அக்கறையின்மை அல்லது மோசமான நிர்வாகம் காரணத்தால், இவ்வகையான சில பொருட்கள், உத்தரவாத காலத்திற்கு மேற்பட்டு நீண்டகாலமாக வழங்கப்படாமல் பண்டகசாலையிலேயே இருக்க நேரிடுகிறது. பின்னர் இப்பொருளைப் பயன்படுத்தும்போது, இதன் செயல்பாட்டில் ஏற்படும் தவறுக்காக உத்தரவாதப் பகுதியை (guarantee clause) செயல்படுத்த துறைக்கு வழி இல்லாமல் போய்விடும். இதனால் நீண்டகாலமாக தரக்குறைவான பொருள்களை வாழ்நாள் முழுவதும் இருப்பில் வைக்க வாய்ப்பு ஏற்படுகிறது. இத்தகைய பொருள்களை இருப்பில் வைப்பது குறைந்தளவாக இருக்க வேண்டும் என்பதை உறுதி செய்வது உயர் நிலைகளிலுள்ள மேற்பார்வை அதிகாரிகளின் தனிப் பொறுப்பாகும். மேலும் துறையும், ஒப்பந்தக்காரரும், பரஸ்பர ஒப்பந்தம் (mutual agreement) செய்து கொள்வதன் மூலம் உத்தரவாத காலத்தை நீட்டிப்பதற்கு ஒப்பந்தத்திலேயே வகை செய்யப்படவேண்டும்.

58. தயாரிப்புக்கு முன்னர் தயாரிப்பாளருக்கு பெரும் செலவு ஏற்படும் கனரக இயந்திரங்கள் அல்லது சிறப்பு சாதனங்கள் கொள்முதல் தவிர, எனைய இனங்களில் முன்பணம் (Mobilisation advance) வழங்கும் நடைமுறை நிறுத்தப்பட வேண்டும். இத்தகைய விதிவிலக்கான இனங்களில் கூட, முன்பணம் தேவைக் குறிப்பில் 10 சதவீதமாகக் கட்டுப்படுத்தப்பட வேண்டும். இந்நிபந்தனை, ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிப்பிலேயே சேர்க்கப்பட வேண்டும். அரசு அளிக்கும் கடன்களுக்குப் பொருந்தும் தற்போதைய விதிகளில், இம்முன் பணத்திற்கு வட்டி விதிக்க வேண்டும். வட்டியுடன் முன்பணத்தை நடப்பு பட்டிகளிலேயே வசூலிக்கவேண்டுமே தவிர, இறுதிப்பட்டி வரை ஒத்திப்போடக்கூடாது. நிபந்தனையற்ற, மாற்ற முடியாத வங்கி உத்தரவாதத்தைப் பெற்ற பின்னரே முன்பணம் வழங்கப்பட வேண்டும்.

59. பார்வையிடும் அதிகாரியின் சான்றிதழ் வரப்பெற்றதன் பேரில், தயாரிப்பு இடத்திலேயே பட்டித் தொகையில் 95 சதவீதம் அளிக்கும் தற்போதைய நடைமுறை, மாற்றப்பட்டு, இத்தகைய சான்றிதழின் பேரில் 75 சதவீதம் மட்டுமே வழங்கத்தக்கதாகும் என்றும் களத்தில் மற்றுமொரு சோதனையின் மூலம் உறுதி செய்யப்பட்டவாறு களத்தில் பொருள் நல்ல நிலையில் வரப் பெற்ற பின்னரே 20 சதவீதம் அளிக்கத்தக்கது என்றும், எஞ்சிய 5 சதவீதம் பராமரிப்பு காலம் முடிவடைந்தவுடன் அளிக்கத்தக்கது என்றும் வரையறுக்கப்படவேண்டும். செயல்பாட்டு உத்தரவாதம் வலியுறுத்தப்படாத இனங்கள்

பொருத்தவரை, களத்தில் பொருட்கள் நல்ல நிலைமையில் வரப்பெற்ற பின்னர் 25 சதவீதம் அளிக்கத்தக்கதாகும்.

60. கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் சிறுதொழில் பிரிவுகள் அளிக்கும் பொருட்கள், பணிகள் ஆகியவை தொடர்பாகவும் பொருள் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள அல்லது சில வகைப் பணிகளை அளிக்கும் சில அரசுத் துறைகள் / நிறுவனங்கள், ஏனைய சட்டப்படியான அமைப்புகள் ஆகியவை தொடர்பாகவும் மாற்றியமைக்கப்பட்ட பின்வரும் நடைமுறை பின்பற்றப்படலாம்.

(1) அரசுத் துறைகள் / நிறுவனங்கள் / சட்டப்படியான அமைப்புகள் / பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் / சிறுதொழில் பிரிவுகள் கோரும் ஒப்பந்தப்புள்ளிகள், வரையறுக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி நடைமுறையின்படி (Prescribed tender process) உரியவாறு கருதிப் பார்க்கப்பட வேண்டும்.

(2) மேற்சொன்ன இயல்பான நடைமுறையில் ஒப்பந்தப்புள்ளியைப் பெற இயலாத நேர்வில், ஒப்பந்தப்புள்ளி அளிக்கும் அதிகாரி, அவர்களுக்கு ஒப்பந்தப் புள்ளியை அளிக்கலாம், ஆனால், ஒப்பந்தப்புள்ளிகளின் ஆய்வில் வெளிவந்த குறைவான விலையை அவை ஒத்திருக்கவேண்டும்.

(3) அரசுத்துறைகளுக்கு / நிறுவனங்களுக்கு ஏனைய சட்டப்படியான அமைப்புகளுக்கும் அளிக்கப்படும் ஒப்பந்தப்புள்ளிகள், அவை நேரடியாக தயாரித்த பொருள்களுக்கு அல்லது அவை நேரடியாக செய்யும் பணிகளுக்கு மட்டுமே கட்டுப்படுத்தப்பட வேண்டும். பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள், மற்றும் சிறுதொழில் பிரிவுகளுக்கு அளிக்கப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் அவை நேரடியாக தயாரித்த பொருள்களுக்கு மட்டுமே கட்டுப்படுத்தப்பட வேண்டும்.

(4) மேற்சொன்ன நடைமுறையில் ஒப்பந்தப்புள்ளி அளிப்பதன் மூலம் பொருள்கள் வாங்கப்படுவது, சம்பந்தப்பட்ட ஒப்பந்த அறிவிப்பு கோரப்பட்டது தொடர்பான மொத்தத் தேவையில் 50 சதவீதத்திற்கு மேற்படக்கூடாது.

(5) மேற்சொன்ன சலுகை வசதிகள் குறைந்தது மூன்றாண்டுகளாகச் செயல்படும் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், சிறுதொழில் பிரிவுகளுக்கும் மட்டுமே கிடைக்கும்.

(6) மேலே விரிவாகக் கூறியவாறு, அரசுத் துறைகளுக்கு / நிறுவனங்களுக்கு / சட்டப்படியான அமைப்புகளுக்கு / கூட்டுறவுச் சங்கங்களுக்கு / சிறு தொழில் பிரிவுகளுக்கு நீட்டிக்கப்படும் வசதி, இந்த ஏற்பாடுகள் செயலுக்கு வரும் காலத்திலிருந்து 5 ஆண்டு காலத்திற்கு மட்டுமே கிடைக்கும்.

சென்னை.
18 ஜூன், 1997.

(ஜி. இராமானுஜம்)
தலைவர்

(எம்.எஸ். ரமேஷ்)
உறுப்பினர்

(சி.வி. நரசிம்மன்)
உறுப்பினர்

(எம். அனந்தகிருஷ்ணன்)
உறுப்பினர்

(ஏ.ஆர். தாமோதரன்)
உறுப்பினர்

(ஆர். வரதராஜுலு)
உறுப்பினர்-செயலாளர்.

★ ★ ★

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

# இணைப்புகள்

இணைப்பு - 1

தமிழ்நாடு அரசு

**சுருக்கம்**

குழு - ஊழல் ஒழிப்பு ஊழலை தடுப்பதற்கான சீர்திருத்தங்கள் - பரிந்துரைக்க உயர்நிலைக்குழு அமைத்தல் - ஆணையிடப்படுகிறது.

---

பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (எஸ்) துறை

அரசாணை (நிலை) எண். 289 நாள் : 2-8-1996

ஆணை :

அரசின் நடைமுறைகளில், நிர்வாக அமைப்பில் சில மாறுதல்களை ஏற்படுத்தி ஊழலை ஒழிப்பது குறித்த பிரச்னையை ஒருங்கிணைந்த முறையில் ஆய்வு செய்து தேவையான சீர்திருத்தங்களை அரசுக்குப் பரிந்துரைக்க ஓர் உயர்நிலைக் குழு உருவாக்குவது குறித்து தீவிரமாக பரிசீலிக்கப்பட்டது. மேலும் ஊழல் செய்பவர்கள்மீது நடவடிக்கை எடுப்பது எவ்வளவு முக்கியமோ அதேபோல் ஊழல் நடைபெறாமல் இருக்க எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளும் மிகவும் முக்கியமாகும். அரசின் நிர்வாக அமைப்பில் இதுகுறித்து மாற்றங்களைக் கொண்டுவருவதும் அவசியமாகும். இக்கருத்துக்களை அரசு கவனமாக பரிசீலித்து, கீழ்க்கண்ட ஆணையினைப் பிறப்பிக்கிறது :-

'ஊழலை ஒழிப்பதற்கும் மற்றும் ஊழல் நடைபெறாமல் இருக்க தகுந்த நடவடிக்கை எடுக்கவும், அதற்கு நடைமுறைகளில் உள்ள குறைகளை நிவர்த்திக்கவும், புது நடைமுறைகளைப் புகுத்தவும், நிர்வாக அமைப்பில் மாற்றங்களைக் கொண்டு வருவதற்கும் தேவையான சீர்திருத்தங்களைப் பரிந்துரைக்க கீழ்க்கண்ட ஒரு உயர்நிலைக்குழு நியமிக்கப்படுகிறது:

**உயர்நிலைக்குழுவின் அமைப்பு**

I. தலைவர்

நீதிபதி திரு.ஜி. இராமானுஜம்,
ஓய்வுபெற்ற சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி

II. உறுப்பினர்கள்

1. செல்வி எம்.எஸ். ரமேஷ், இ.ஆ.ப. (ஓய்வு)
2. திரு. சி. தங்காராசு, இ.ஆ.ப. (ஓய்வு)
3. திரு. எஸ்.வி. நரசிம்மன், இகாப. (ஓய்வு)
4. முனைவர் எம். அனந்தகிருஷ்ணன்,
முன்னாள் துணைவேந்தர்
அண்ணா பல்கலைக்கழகம்

5. திரு.ஏ.ஆர். தாமோதரன்,
முன்னாள் சட்டமன்ற மேலவை உறுப்பினர்.

6. திரு.கே.எஸ். லட்சுமிகாந்தன் பாரதி, இ.ஆ.ப., (ஓய்வு)

III. செயலர்

அரசு செயலாளர்
பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை,
சென்னை - 600 009.

**உயர்நிலைக்குழு செயல்பாடுகள் :**

(1) நிர்வாகச் சீர்திருத்தம், நிர்வாக அமைப்பில் மாற்றம் அரசு தலைமைச் செயலகத்திலிருந்து குக்கிராமம் வரை வெளிப்படையான அரசு நிர்வாகம் செய்தல் மற்றும் பொதுமக்களுக்கு அரசு தகவல்களைப் பெறும் உரிமை வழங்குதல் குறித்தும்.

(2) அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்கள் / கழகங்கள் பொருட்களை வாங்குதல் குறித்த விதிமுறை மற்றும் விலைப்புள்ளி கோருதல் பற்றிய நடைமுறைகள் குறித்தும்.

(3) ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை மேலும் அதிகத் திறனுடன் செயல்பட வழிமுறை விதிகளில் மாற்றம் செய்வது குறித்தும்.

(4) ஒழுங்கு நடவடிக்கை முறைகளை துரிதமுறையில் முடிவு செய்தல் குறித்தும், ஆய்வு செய்து சீர்திருத்தங்களைப் பரிந்துரை செய்வது குறித்தும்.

IV. காலம்

இந்த உயர்நிலைக்குழு மேற்காணும் சுருத்துக்கள் குறித்த பரிந்துரை அறிக்கையினை செயல்படும் நாளிலிருந்து ஆறு மாதங்களுக்குள் அரசுக்கு சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க.அ. நம்பியார்
அரசு தலைமை செயலாளர்.

**பெறுநர் :**

நீதிபதி திரு.ஜி. இராமானுஜம்,
உயர்நிலைக்குழு தலைவர்,
எண்15, 4-வது பிரதான சாலை, கஸ்தூரிபாய் நகர், அடையாறு, சென்னை - 600 020.

செல்வி. எம்.எஸ். ரமேஷ், இ.ஆ.ப. (ஓய்வு)
உயர்நிலைக்குழு உறுப்பினர்,
எண்19, 2-வது பிரதான சாலை, சி.ஐ.டி. காலனி, சென்னை - 600 004.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

திரு.கி. தங்கராசு, இ.ஆ.ப., (ஓய்வு)

உயர்நிலைக்குழு உறுப்பினர்,

எண்.19, 4-வது பிரதான சாலை, இந்திரா நகர், அடையாறு, சென்னை - 600 020.

திரு.ஸ்.வி. நரசிம்மன், இகா.ப., (ஓய்வு)

உயர்நிலைக்குழு உறுப்பினர்,

எண்.32, 3-வது தெரு, கிழக்கு அபிராமபுரம், சென்னை - 600 004.

முனைவர் எம். அனந்தகிருஷ்ணன்,

உயர்நிலைக்குழு உறுப்பினர்,

எண்.8, 5-வது குறுக்குத் தெரு, கஸ்தூரிபாய் நகர், அடையாறு, சென்னை - 20.

திரு. ஏ.ஆர். தாமோதரன், (முன்னாள் எம்.எல்.சி.)

உயர்நிலைக்குழு உறுப்பினர்

எண்.10, கடற்கரை சாலை, கடலூர் - 607 001.

திரு. கே.எஸ். லட்சுமிகாந்தன் பாரதி, இ.ஆ.ப., (ஓய்வு)

உயர்நிலைக்குழு உறுப்பினர்,

பிளாட் எண்.583, கே.கே.நகர், மதுரை - 625 020.

அரசு செயலாளர்,

பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, சென்னை - 600 009.

அனைத்துத் துறைச் செயலாளர்கள், சென்னை - 600 009.

அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் / மாவட்ட நீதிபதிகள் / தலைமைக் குற்றவியல் மாஜிஸ்டிரேட்டுகள்

உள்ள அனைத்து மாவட்ட வருவாய் அதிகாரிகள்.

செயலாளர்,

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், சென்னை - 600 009.

விழிப்புப்பணி ஆணையின் தனிச்செயலாளர், சென்னை - 600 009.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //.

கோ. சண்முகசுந்தரம்

அரசு இணை செயலாளர்.

◆ ◆ ◆

தமிழ்நாடு அரசு

# உயர்நிலைக் குழு - நிர்வாகச் சீர்திருத்தங்கள் மற்றும் ஊழல் தடுப்பு

பனகல் பில்டிங், இரண்டாவது தளம், சைதாப்பேட்டை, சென்னை - 600 015.

## வினாப்பட்டிகள்

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இரா. வரதராஜூலு
உறுப்பினர்-செயலர்.

சென்னை - 15.
10-1-1997

அன்புடையீர்,

கடந்த சில ஆண்டுகளில் அரசு நிர்வாகத்தில் ஊழல்கள் பெருகியுள்ளதையும், அதனால் அரசுத் துறைகளுடன் பல்வேறு நிலைகளிலும் தொடர்பு கொள்ள வேண்டிய பொதுமக்கள் அன்றாட வாழ்க்கையில் இன்னல்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளதையும் கருதி அரசு, ஆணை எண்.289, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறை நாள் 2-8-96ல், நீதிபதி திரு.ஜி.இராமானுஜம் அவர்கள் தலைமையில் 6 உறுப்பினர்கள் கொண்ட குழுவை அமைத்து, கீழ்க்கண்ட பொருள்களின் மீது பரிந்துரைகளை அளிக்குமாறு கேட்டுக்கொண்டிருக்கிறது.

1) கிராம அளவில் இருந்து தலைமைச் செயலகம் வரை பொதுமக்கள் தொடர்பு கொள்ளும் திருவாக நடைமுறைகளில் தேவையான மாறுதல்களை ஏற்படுத்துவதன் மூலம் அரசுத்துறைகள் மற்றும் நிறுவனங்களில் ஊழலுக்கு வழி வகுக்கும் வாய்ப்புகளை அகற்றி அரசின் நிருவாகம் வெளிப்படையாக இருக்குமாறு செய்து, பொதுமக்களுக்கு அரசின் செயல்பாட்டைப் பற்றிய தகவல்களைப் பெறும் உரிமையை வழங்குவது.

2) அரசுத்துறை மற்றும் நிறுவனங்களில் தற்போது பொருட்களை வாங்குவதில் ஏற்படுகின்ற இலஞ்சம் மற்றும் ஓரவஞ்சனை (Favouritism) ஆகியவற்றைத் தவிர்க்க தற்போதைய நடைமுறைகளை மறுபரிசீலனை செய்து மாற்றியுள்ளது.

3) இலஞ்சம் மற்றும் ஊழல் தடுப்பு இயக்கத்தின் தீவிரச் செயற்பாட்டிற்கு ஏற்ப துறையை வலுப்படுத்துவது.

4) இலஞ்ச ஊழல் குற்றம் சாட்டப்பட்ட அரசு அதிகாரிகள் மீது எடுக்கப்படுகின்ற ஒழுங்கு நடவடிக்கைகளை விரைவுபடுத்துவது.

இந்தக்குழு 18-9-96 அன்று செய்தித் தாள்கள் மூலமாக பொது மக்களிடம் இருந்து கருத்துக்களை பெற ஒரு செய்திக் குறிப்பு வெளியிடப்பட்டிருந்தது. அதன் விளைவாக இதுவரை பலதரப்பட்ட மக்களிடம் இருந்து சுமார் 2000 கடிதங்கள் வரப் பெற்றிருக்கின்றன.

இந்தக்குழு, முதல் சுற்றில், அரசு செயலர்கள், துறைத் தலைவர்கள், வட்டார மற்றும் மாவட்ட அதிகாரிகள் ஆகியோரிடம் கலந்து பேசி அவர்களுடைய கருத்துக்களைப் பெற்றிருக்கிறது.

பொதுமக்களுடைய கடிதங்கள் வாயிலாகவும், அரசு அதிகாரிகளிடம் கலந்துரையாடியதிலும் பல்வேறு கருத்துரைகள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன.

(உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் அரசு நிறுவனங்கள் உட்பட) பொதுமக்கள் (தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் உட்பட) நேரடித் தொடர்புடைய நடைமுறைகள் குறித்தவை சில கருத்துரைகள் ஆகும். மற்றவை நிருவாக நடைமுறைகள் உள்ளமைப்பு (internal) குறித்தவை ஆகும். அக்கருத்துக்களைக் கொண்டு இக்குழு இரண்டு வகையான வினாப்பட்டிகளைத் தயார் செய்திருக்கிறது. வினாப்பட்டி ஒன்று, பெரும்பாலும் பொதுமக்கள் அரசுடன் கொள்ளும் தொடர்பு குறித்ததாகும். வினாப்பட்டி இரண்டு, நிருவாக உள்ளமைப்பு பற்றியவையாகும்.

வினாப்பட்டிகள் இரண்டும் இத்துடன் அனுப்பி வைக்கப்படுகின்றன. வினாக்கள் மீது தாங்கள் கருத்துக்களை எழுதி அனுப்பினால் மிக உதவியாக இருக்கும். இவ்வினாக்களில் அடங்காத சில அம்சங்களின் மீது தங்களுடைய கருத்துக்களையோ, ஆலோசனைகளையோ கூறவேண்டும் என்றாலும் அவற்றையும் நீங்கள் குறிப்பிட்டு உங்கள் பதிலுடன் அனுப்பலாம்.

உங்களுடைய பதில்களில் எவையேனும் கமுக்கமாக வைக்கப்பட வேண்டும் என விரும்பினால் அதைக் குறிப்பிட்டு எழுதி அனுப்புங்கள். அதன்படி அவை கமுக்கமாகக் கருதப்படும். பதில் எழுதும் போது தங்கள் பெயர், முகவரி மற்றும் தொழில் ஆகிய விவரங்களைக் குறிப்பிட வேண்டுகிறோம்.

இந்தக்குழு தங்களுடைய பணியை வெகு விரைவில் முடித்து அறிக்கையை அரசுக்கு அளிக்க விரும்பினால் தங்கள் பதில்களை 28-2-1997 தேதிக்குள் எங்களுக்குக் கிடைக்கும்படி அனுப்புமாறு வேண்டுகிறோம்.

தங்கள் பதில் அனுப்ப வேண்டிய முகவரி :-

உறுப்பினர்-செயலர்,
நிருவாகச் சீர்திருத்தம் மற்றும் ஊழல் தடுப்பு உயர்நிலைக்குழு,
பனகல் பில்டிங், டி-பிரிவு, இரண்டாம் தளம்,
1, ஜீன்னிஸ் ரோடு,
சைதாப்பேட்டை,
சென்னை - 15.

வணக்கம்.

தங்கள் அன்புள்ள,

இரா. வரதராஜுலு
உறுப்பினர்-செயலர்.

இணைப்பு . வினாப்பட்டிகள் 1, 2

★ ★ ★

தமிழ்நாடு அரசு

# உயர்நிலைக் குழு - நிர்வாகச் சீர்திருத்தங்கள் மற்றும் ஊழல் தடுப்பு

## வினாப்பட்டி - 1

(பொது மக்களிடமிருந்து வந்த கடிதங்கள் வாயிலாகவும் மற்றும்
அரசுச் செயலாளர்கள், துறைத் தலைவர்களுடனான
தொடக்க நிலை விவாதத்தின் போதும்
தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள்
ஆகியவற்றின் அடிப்படையில்
இது தயாரிக்கப்பட்டுள்ளது.)

## வினாப்பட்டி - 1

(இது பெரும்பாலும் அரசு, உள்ளாட்சி மன்றங்கள், பொது நிறுவனங்களுடன் தொடர்புகொள்ளும் பொதுமக்களை நேரடியாகப் பாதிக்கும் விவகாரங்களைப் பற்றியது)

* * *

**அலுவலக நடைமுறை :-**

1) அரசு எடுத்த ஒரு முடிவினால் பாதிக்கப்பட்ட நபர்கள் சம்பந்தப்பட்ட அரசு பதிவுருக்களைக் கூர்ந்தாய்வு செய்வதற்கு வழி செய்வதன் மூலம், நிருவாகத்தில் ஒளிவு மறைவற்ற தன்மையை உருவாக்க முடியும். சம்பந்தப்பட்ட நபர்களுக்கு அவ்வாறு அரசுப் பதிவுருக்கள் கிடைக்கச் செய்வது தொடர்பாக உங்களுடைய விரிவான கருத்துக்கள் யாவை? ஒருவர் விவரம் தெரியாதவராக இருப்பின், அவருடைய நலன் கருதி இது தொடர்பான மக்கள் நல-சமூகப்பணி அமைப்புக்கள் நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டும். இது பற்றிய உங்களுடைய கருத்துக்கள் யாவை?

2) அரசுத்துறைகள் ஒரு விவகாரம் குறித்து முடிவுகள் எடுக்கும்போது, பொது நலன், நேர்மை, நாணயம் குறித்து மக்களுக்கு உறுதிசெய்யும் வகையில், அதன் அலுவல்கள் வெளிப்படையாக அமைய வேண்டும். அவ்வாறு அமைய ஒவ்வொரு துறையும், எந்தக் கட்டத்தில் அதனை வெளிப்படையாகத் தெரிவிக்க வேண்டும். மற்றும் வெளிப்படையாகத் தெரிவிக்க முடியும் என்பதைக் கண்டறிந்து குறிப்பிட வேண்டும். இந்நோக்கத்திற்காக வெளிப்படையான தன்மை என்பதில் முடிவுகளையும், அதற்கான காரணங்களையும் பகிரங்கமாகத் தெரிவிப்பதுடன், தொடர்புடைய பதிவுருக்களை மக்கள் நல-சமூகப்பணி அமைப்புகள் பார்வையிட வாய்ப்பு அளித்தலும் அடங்கும். இது தொடர்பாக உங்களுடைய கருத்துக்கள் யாவை?

3) ஒரு குடிமகன் என்ற முறையில் மேற்காணும் 2-ஆம் எண் வினாவில் குறிப்பிட்டுள்ளவாறு, அரசுத் துறைகளில் எவ்வகையான பணிகள் வெளிப்படையாக நடைபெற வேண்டும் என்று நீங்கள் கருதுகிறீர்கள்?

4) அரசின் உரிய அதிகாரம் பெற்ற எந்த ஒரு அதிகாரியிடத்திலும் பொதுமக்கள் வைக்கும் ஒரு கோரிக்கையை நிராகரித்தோ அல்லது மறுத்தோ பிறப்பிக்கப்படும்

ஆணைகள் அனைத்தும் ஒருவரிச் சுருக்க ஆணையாக இல்லாமல், அவ்வாறு நிராகரிக்க அல்லது மறுக்கப்படுவதற்கான, காரணங்கள் தவறாமல் குறிப்பிடப்பட வேண்டும். உங்களுக்கு இக்கருத்து ஏற்புடையதுதானா?

5) நியமன ஆணை, உரிமம் வழங்கல், அனுமதி வழங்கல் ஆணைகள் போன்றவை, சம்பந்தப்பட்ட நபருக்கு பதிவு அஞ்சல் மூலம் நேரடியாக அனுப்பப்பட வேண்டும். அலுவலகப்பணியாளர்கள் நேரடியாகச் சென்று சம்பந்தப்பட்ட நபர்களுக்குக் கொடுப்பதைத் தவிர்க்க வேண்டும். அஞ்சல் வழியாக அனுப்புவதன் மூலம், தகவல் அனுப்புவதில் காலதாமதமும், ஊழலும் நடைபெறுவதற்கான வாய்ப்பைத் தடுக்க இயலும். நீங்கள் இக்கருத்தினை ஒப்புக் கொள்கிறீர்களா?

6) தற்போது அரசுத்துறைகள் அளித்துவரும் ஆண்டு அறிக்கைகளில், புள்ளி விவரங்களுக்கும், வரவு செலவுத்திட்ட விவரங்களுக்கும் மட்டுமே முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகின்றது. துறையின் செயல்பாடு குறித்து மக்கள் எந்த அளவிற்கு மனநிறைவு அடைந்துள்ளனர் என்பது உள்ளிட்ட, துறையின் சாதனை பற்றிய, தரமதிப்பீட்டினை அளிக்கும் வகையில் புதிய வடிவத்தில் இந்த ஆண்டறிக்கைகள் அளிக்கப்பட வேண்டுமெனக் கருதப்படுகின்றது. இப்புதிய வடிவம் குறித்த உங்கள் கருத்துரைகள் யாவை?

7) இப்புதிய வடிவத்தைத் துறைகள் அவர்களாகவே தயாரிப்பதை விடுத்து, இந்தியப் பொதுக்கருத்து நிறுவனம், பொது நிருவாக நிருவனம், சென்னை சமூகப்பணிப்பள்ளி போன்ற பெயர்பெற்ற சமூகப்பணி நிறுவனங்களின் கூட்டு முயற்சியுடன் வடிவமைக்கப்பட வேண்டும். இது தொடர்பாக உங்களுடைய கருத்து யாது?

8) துறையின் செயல்பாடு குறித்து பொதுமக்களின் கருத்தினைத் தெரிந்துகொள்வதற்காக அவ்வப்போது வாக்கெடுப்பு அல்லது வேறு வகையான நடவடிக்கையினை மேற்கொள்வதற்குரிய நடைமுறை சாத்தியமான வழிமுறைகளை நீங்கள் தெரிவிக்க முடியுமா?

**உரிமங்கள் / அனுமதிகள் / சான்றிதழ்கள்**

9) கட்டிய அமைப்பு வரைபட அனுமதி, கடன், உதவித்தொகை அனுமதி, ஒரு குறிப்பிட்ட வர்த்தகம் அல்லது வாணிகத்தை நடத்த சான்றிதழ் அல்லது அனுமதி வழங்கல் ஆகியவற்றிற்கு விண்ணப்பிப்பதற்கான உரிய அச்சிட்ட படிவங்களுடன்

சேர்ந்தாற்போன்றமைந்த அடையாள எண்ணுடன் கூடிய துளையிட்ட சான்றொப்புகளையும் அச்சிடப்பட வேண்டும். மனுதாரர் விண்ணப்பத்தைக் கொடுத்தவுடன், அச்சான்றொப்பு அந்தப் படிவத்திலிருந்து கிழிக்கப்பட்டு மனுதாரரிடம் கொடுக்கப்பட வேண்டும். இதன் மூலம், சம்பந்தப்பட்ட அலுவலகத்தில், விண்ணப்பத்தின் மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதில் காணும் முன்னேற்றத்தைச் சரியாகக் கண்காணிக்க இயலும். இக் கருத்து சரியென்று நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா?

10) இவ்விண்ணப்பங்களின் அடையாள எண்கள் அனைத்தும் கணினியில் பதிவு செய்யப்படவேண்டும். நடவடிக்கையின் முன்னேற்றமும் அதில் பதிவு செய்யப்படவேண்டும். இதன் மூலம், விண்ணப்பங்களின் வரிசை (Seniority) அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதைக் கணினியிலிருந்தே தெரிந்து கொள்ளலாம். இதனால் வரிசை மீறலைத் தடுக்க இயலும்.

அனைத்து அலுவலகங்களிலும் மேற்கூறப்பட்டுள்ள முறையில் அனைத்து விண்ணப்பங்களையும் கணினி மூலம் பதிவு செய்யும் முறையைப் பின்பற்றலாம் என்பதை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா?

11) பள்ளியில் சேர்தல், பணியில் சேர்தல், வங்கியிலிருந்து நிதி உதவி பெறுதல், ஈட்டுறுதித் தொகை கோரல், சட்டப் படிக்கான வாரிசை நிர்ணயித்தல் போன்ற பல்வேறு நோக்கங்களுக்கான, அரசின் பல்வேறு துறை அதிகாரிகளிடமிருந்து, அதிலும் குறிப்பாக வருவாய்த் துறை அதிகாரிகளிடமிருந்து பல்வேறு சான்றிதழ்களைப் பெறுவதில் மக்கள் தற்போது பெரும் இன்னல்களுக்கு உள்ளாகி வருகின்றனர். இவ்விண்ணப்பதாரர்கள் அனைவரும், வருவாய்த் துறையைச் சேர்ந்த வட்டாட்சியர் அல்லது அவரைப் போன்ற வேறுசில அதிகாரிகளிடம் மட்டும் வந்து குழுமுவதின் காரணமாகக் காலதாமதம் ஏற்படவும், அதனையடுத்து ஊழல்கள் நடைபெறவும் வழி ஏற்படுகிறது. அரசின் பல்வேறு துறைகளிலுள்ள அதிகாரிகள் மற்றும் உள்ளாட்சி மன்றங்களின் ஒரு குறிப்பிட்ட பதவித் தரத்தையும் அல்லது அதற்கு மேற்பட்ட பதவித் தரத்தையும் சேர்ந்த அதிகாரிகள், மற்றும் ஓய்வுபெற்ற அரசு அதிகாரிகள் ஆகியோரை, அவர்கள் நேரடியாக அறிந்துள்ளதன் அடிப்படையில் சொந்தப் பொறுப்பின் பேரில் இத்தகைய சான்றிதழ்கள் வழங்க அனுமதிப்பதன் மூலம் காலதாமதம் மற்றும் ஊழல்களுக்கான வாய்ப்புகளைக் கணிசமாகக் குறைக்கலாம். நீங்கள் இக்கருத்தை ஏற்றுக் கொள்கிறீர்களா?

12) பிறப்புச் சான்றிதழ், இறப்புச் சான்றிதழ், செல்வநிலைச் சான்றிதழ், சட்டப்படிக்கான வாரிசுச் சான்றிதழ், நில உடைமைச் சான்றிதழ், சாதிச் சான்றிதழ் போன்ற சான்றிதழ்களை வழங்குவதற்கான எளிய நடைமுறையினைத் தெரிவிக்கவும்.

13) அண்மையில் ஒரு மாநகராட்சியின் அலுவலகத்தில் சான்றிதழ்கள், கடன்கள் போன்றவை தொடர்பான புகார்கள் மற்றும் கோரிக்கை மனுக்களைப் பெற்றுக் கொள்ள, அலுவலக நுழைவு வாயிலுக்கு அருகில் இதற்கெனத் தனிப்பிரிவு ஒன்றை ஏற்படுத்தியுள்ளனர். இதன் மூலம், இத்தகைய மனுதாரர்கள் அனைவரும் அலுவலகத்திற்குள் சென்று, சம்பந்தப்பட்ட பணியாளருடன் ஐயுறத்தக்க வகையில் தொடர்பு கொள்வது தவிர்க்கப்பட்டுள்ளது. இம்மனுக்களை உடனடியாகப் பதிவு செய்து, சம்பந்தப்பட்ட பணியாளரிடம் ஒப்படைக்கும் பொறுப்பு, இந்த தனிப்பிரிவின் பணியாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மனுதாரர் கோரிய சான்றிதழ்கள் முதலியன குறித்த பதில் அதே பிரிவில் குறிப்பிட்ட கால அளவிற்குள் கிடைக்கும்.

பல்வேறு பணிகளுக்காக பொதுமக்கள் அடிக்கடி வருகைதரும் அனைத்து அரசு அலுவலகங்களிலும் இத்திட்டத்தினை அறிமுகம் செய்வதை நீங்கள் வரவேற்கிறீர்களா?

14) அரசு அலுவலகங்கள் சிலவற்றில் உரிமம், சான்றிதழ், தகவல் போன்றவற்றை வழங்கவும், பதிவு செய்யவும் அரசு விதிமுறைப்படி குறிப்பிட்ட கட்டணத்தை மனுதாரர்கள் செலுத்த வேண்டியுள்ளது. பல அலுவலகங்களில் குறிப்பிட்ட கட்டணத் தொகைக்கும் மேலாக மாமூல் என்ற வகையில், இலஞ்சம் பெறும் முறை உள்ளதாகக் கூறப்படுகிறது. அவ்வகையான அலுவலகங்களிலோ அல்லது ஒரு பிரிவிலோ பணியாற்றும் அலுவலர்களிடம் முறையான கணக்குப்படி இல்லாமல், அவரது இருக்கையிலோ அல்லது அந்த அலுவலகத்தின் பகுதியிலோ அதிகப்படியான பணம் வைத்திருப்பின், சம்பந்தப்பட்ட அலுவலர் மீதும், அந்த அலுவலகத்தின் பொறுப்பை வகிக்கும் அதிகாரி மீதும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கக் கூடிய வகையில் விதிமுறைகள் ஏற்படுத்தப்பட வேண்டுமென பரிந்துரைக்கப்படுகிறது. தாங்கள் இதனை ஏற்றுக் கொள்கிறீர்களா?

**வளர்ச்சி - நலத் திட்டங்கள்**

15) நலப் பணித்திட்டங்களின் பயன்துய்ப்பார்களை, அதிலும் குறிப்பாக கிராமப்பகுதிகளிலுள்ள பயன்துய்ப்பாளர்களை, ஊராட்சிகளே இனங்கண்டறிய

வேண்டும். இந்த விதி முறைகள் குறித்து வாய்மொழி, தொலைக்காட்சி, பத்திரிக்கைகள் வாயிலாக விரிவாக விளம்பரம் செய்யப்பட வேண்டும். அரசு கண்காணிப்பு அதிகாரிகள், சோதனை முறையில், சில இனங்களில் இந்த அடிப்படை விதி முறைகள் சரியாகக் கடைப்பிடிக்கப்படுகின்றனவா எனத் தணிக்கை செய்தால் போதுமானது இக்கருத்து உங்களுக்கு ஏற்புடையதுதானா?

16) பல்வேறு சமூக நலத் திட்டங்களின் கீழ் ஊரக மக்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை அல்லது பொருட்கள், விண்ணப்பங்கள் வரப்பெற்ற வரிசை முறை அடிப்படையில் பகிரங்கமாகக் கொடுக்கப்பட வேண்டும். இருக்கின்ற தொகை அல்லது பொருட்களுடன் ஒப்பிடுகையில், தகுதியுடைய விண்ணப்பங்களின் எண்ணிக்கை மிக அதிகமாக இருப்பின் திருவுளச் சீட்டின் மூலம் (open lot) அவை விநியோகிக்கப்பட வேண்டும். இம்முறையில் விநியோகம் செய்வதற்கான முழுப் பொறுப்பும் மாவட்ட / வட்டார வளர்ச்சி அளவிலான அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டவேண்டும்.

நீங்கள் இக்கருத்தை ஏற்றுக் கொள்கிறீர்களா?

17) அரசின் பல வளர்ச்சி மற்றும் நலத் திட்டங்கள் பொதுப்பாலும் தாழ்த்தப்பட்ட, பழங்குடி மற்றும் பிற்பட்ட வகுப்பினருக்கு உரியதாகும். இத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் ஏற்படும் ஊழல் மற்றும் முறைகேடுகள், மேற்சொன்ன இனத்தவர்களில் ஏழை மற்றும் அப்பாவிகளான தகுதியுள்ள உரியவர்களுக்குச் சென்றடையாமல் மறுப்பதற்கு ஏதுவாகிறது.

இதனை சரி செய்ய தங்களின் ஆலோசனைகள் யாவை?

18) சிறுதொழில் பிரிவுகளைப் பதிவு செய்தல், மூலதன உதவித் தொகைகள் வழங்குதல், வட்டியில்லா கடன், அனுமதி வழங்கல், விற்பனை வரி தள்ளிவைப்பு, மின் கட்டண உதவித் தொகை போன்ற பல்வேறு விவகாரங்கள் குறித்த விண்ணப்பங்கள் முதலியன தற்போது கையாளப்படுகின்ற முறையில், விண்ணப்பத்தை ஏற்பதில் அல்லது மறுப்பதில் விருப்பவுரிமையையைக் (discretion) கெட்ட நோக்கத்துடன் செயல்படுத்த வாய்ப்பு இருக்கிறது. தகுதிக்கான அனைத்து அடிப்படை விதி முறைகளும் படிவத்திலேயே தெரிவிக்கப்பட்டால், இத்தகைய மனுக்கள் குறித்து, நேர்மையுடனும், விரைந்தும் நடவடிக்கை எடுக்க உதவியாக இருக்கும். விண்ணப்பத்தில் தெரிவித்துள்ள விவரங்களே இவ்விவகாரத்தில் விருப்புரிமைக்கு வழி இல்லாமல் செய்துவிடும்.

இக்கருத்து தங்களுக்கு ஏற்புடையதுதானா?

19) பல்வேறு நலத்திட்டங்களை நிறைவேற்றுவதில் தற்போது பின்பற்றப்படும் இலக்கு நிர்ணயிக்கும் அணுகுமுறை பொய்யான தகவல், தவறான பயன்துய்ப்பாளர் தேர்வு, திட்டத்தின் தரம் குறைவு போன்றவற்றிற்கு வழிவகுக்கிறது. இந்நல நடவடிக்கைகள் உண்மையிலேயே தேவைப்படும் பயன்துய்ப்பாளர்களை இனம் கண்டறிவதில், உள்ளூர் ஊராட்சிகள் முனைப்பாகப் பங்கெடுத்துக் கொண்டால் இத்தகைய முறைகேட்டினைக் கட்டுப் படுத்தலாம். இக் கருத்தை நீங்கள் ஒப்புக் கொள்கிறீர்களா?

20) ஊரகப் பகுதிகளைச் சேர்ந்த ஏழை எளியோரின் நலன் மற்றும் முன்னேற்றத்திற்கான அனைத்துத் திட்டங்கள், திட்டப்பணிகள் மற்றும் நடவடிக்கைகள் குறித்து, முழுமையான அறிவிப்புகள் செய்து, அதன் விவரங்கள் கிராமத்து மக்களுக்கு விரிவான முறையில் விளக்கிக் கூறப்படுதல் வேண்டும். இதன் வாயிலாக, இத்திட்டங்களைச் செயற்படுத்துவதில் இலஞ்ச ஊழல்கள் பெருகிடுவதற்கான முகவர்களாகச் செயல்படும் இடையாட்களையும், இதர நபர்களையும் பயனாளிகள் அணுகுவதைத் தவிர்த்திட முடியும்.

ஊரகப் பகுதிகளில், நலப்பணித் திட்டங்கள் குறித்து மேலே குறிப்பிட்டபடி விளம்பரம் செய்ய, நீங்கள் கூறும் நடைமுறை சாத்தியமான கருத்துரைகள் யாவை?

**ஒப்பந்தப்புள்ளி**

21) தற்போதைய விதிகளின் கீழ், குறைந்த அளவிலான (limited tender) ஒப்பந்தப் புள்ளிகளே கோர அதிகாரமளிக்கப்பட்டுள்ள பணி இனங்களில், அதே மாவட்டத்தில் குடியிருப்போருக்கு மட்டும் ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் வழங்கப்பட வேண்டும் என்ற ஒரு ஒழுங்குமுறை உதவிகரமாக இருக்குமா? இத்தகைய வரையறை, வணிகரீதியிலான ஆதாயத்தை மட்டுமே கருதிச் செயல்படும் வெளிமாவட்ட ஒப்பந்தக்காரர்கள் நுழைவதைத் தடுக்கும். உள்ளூர் ஒப்பந்தக்காரர்களிடம் இப்பணி ஒப்படைக்கப்பட்டால், உள்ளூர் மக்கள் மனநிறைவு கொள்ளும் வகையில், நன்முறையில் பணியை நிறைவேற்றுவதுடன், முற்றிலும் வணிக ரீதியிலான ஒப்பந்தப் பணிகளில் நடக்கும் வழக்கமான முறைகேடுகளைத் தவிர்க்க இயலும். இதில் உங்களுடைய கருத்து என்ன?

22) ஒப்பந்தப்புள்ளிகள் தொடர்பாகத் தெரிவிக்கப்படும் புகார் என்னவெனில், சில தேர்ந்தெடுக்கப்பட்ட, வேண்டியவர்களுக்கு மட்டுமே ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் வழங்கப்படுகின்றன என்பதாகும். இது நேரடியாக பெருமளவில் ஊழல்

நடைபெறவும், பணி நிறைவேற்றம் தரக்குறைவாக இருப்பதற்கும் காரணமாகின்றது. ஒப்பந்தப் புள்ளிக் கேள்விகள் வெளிப்படையானவையாக இருக்க வேண்டும். இவ்வொப்பந்தப்புள்ளிகள் குறித்து சாதாரண மக்களும் அறிந்திடும் வகையில் முக்கியமாகத் தமிழ் செய்தித்தாள்களில் போதுமான அளவுக்கு விளம்பரம் செய்ய வேண்டும். ஒப்பந்தப்புள்ளி நடைமுறைகள் போதிய அளவுக்கு வெளிப்படையாகப் பின்பற்றப் படுவதை உறுதி செய்யத் தங்களுடைய கருத்துக்கள் யாவை?

23) இதே வழி முறையில், டெண்டர் படிவங்களை, அவை சம்பந்தப்பட்ட அலுவலகங்களில் மட்டும் அல்லாமல், வங்கிகள் போன்ற மற்ற பொது அலுவலகங்களிலும் குறிப்பிட்ட தொகையைச் செலுத்தி கிடைக்கச் செய்யலாம் என பரிந்துரைக்கப்படுகிறது? இக்கருத்தை நீங்கள் ஏற்றுக்கொள்வீர்களா?

**கட்டுமானப் பணிகள்**

24) ஒரு குறிப்பிட்ட வரம்பிற்கு மேற்பட்டு அதிக மதிப்புடைய ஒரு கட்டுமானப் பணி டெண்டர் விதிமுறைகள்படி முறையாக ஒரு ஒப்பந்தக்காரர் திறமை அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டபின், அப்பணியை, அரசு பொதுப்பணித் துறையின் வழக்கமான கண்காணிப்பு, தலையீடு இல்லாமல், அந்த ஒப்பந்தக்காரரே முழுமையாக (turn key basis) செய்து முடிக்க விட்டுவிட வேண்டும்.

இது குறித்து உங்கள் கருத்து என்ன?

**நேரிட ஆய்வு / சோதனை**

25) விழிப்புப்பணிகள் பயனுள்ளவையாய் இருக்க, பொது மக்களின் அன்றாட வாழக்கையோடு தொடர்புடைய அரசுத் துறைகளில், லஞ்ச ஊழல்களுக்கு வாய்ப்புள்ள பகுதிகளில் திடீர் சோதனை மேற்கொள்ளப்பட வேண்டும். தற்போதைய முறையில், விழிப்புப் பணி பணியாளர் அல்லது ஏனைய துறை அலுவலர்கள் இந்த திடீர் சோதனைகளைத் தாங்களாகவே தனியாக செயல்பட்டு நடத்துகின்றனர். விழிப்புப் பணித் துறை அதிகாரிகள் இவ்வாறு திடீர் சோதனைகள் நடத்தும்போது, நுகர்வோர் அமைப்புகளைச் சேர்ந்த குழுக்கள் அல்லது உள்ளூர் நலச் சங்கங்கள் ஆகியவற்றின் தன்னார்வுத் தொண்டர்களையும்

தன்னுடன் அழைத்துச் சென்றால் இச்சோதனைகளில் பொதுமக்களுக்கு அதிக மனநிறைவும் நம்பிக்கையும் ஏற்படும்.

இத்தகைய ஏற்பாட்டை நீங்கள் ஆதரிக்கிறீர்களா?

**பொது**

26) பயிரிடுவோர் / உழவர் ஒவ்வொருவருக்கும் அவ்வப்போது, வெவ்வேறு சந்தர்ப்பங்களில், வெவ்வேறு துறைகள் வழங்கும் தொகை மற்றும் பொருளைப் பதிவு செய்வதற்கான அடங்கல் அட்டை ஒன்று வழங்கலாம். ஒருவருக்கே மீண்டும் மீண்டும் பொருட்கள் வழங்கப்படுவதையும், இல்லாத நபர்களின் பெயரில் பொருட்கள் வழங்கப்படுகின்ற மோசடியையும் இது தடுக்கும். மேற்சொன்ன நோக்கத்திற்காக, தற்போது வருவாய்த் துறையால் வழங்கப்படும் பட்டா பாஸ் புத்தகத்தை விரிவாக்கி அனைத்து விவரங்களும் உள்ளடங்கியதாகச் செய்யலாம்.

இது குறித்துத் தங்களின் கருத்து யாது?

27) அரசு பணி சம்பந்தப்பட்ட சில விழாக்கள் நடத்தும் போதும், அரசின் முதுநிலை அதிகாரிகள் அலுவலகப் பணிநிமித்தம் மேற்கொள்ளும் சுற்றுப் பயணத்தின் போதும், அவர்களுக்கான தங்குமிட வசதி, போக்குவரத்து, உணவு மற்றும் ஏனைய தொடர்புடைய வசதிகளுக்கு மாவட்டங்களிலுள்ள கீழ்நிலை அலுவலர்கள் ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக்க கொள்ளப்படுகிறார்கள். இது தொடர்பாக ஏற்படும் செலவு, பெரும்பாலும் அரசு விதிகள் அனுமதிக்கும் தொகையை விட அதிகமாகின்றது. கீழ் நிலை அலுவலகங்களில் பொது மக்களுக்கு ஆற்றப்படுகின்ற பல்வேறு சேவைகளுக்காக, அவர்களை வருத்தி, வசூலிக்கும் மாமூல் இலஞ்சப் பணத்திலிருந்து மேற்படி செலவினங்கள் செய்யப்படுவதாகக் கூறப்படுகிறது. இத்தகைய எதிர்பாராத மற்றும் தவிர்க்க முடியாத செலவினங்களுக்காக, மாவட்டப் பணியாளர்கள் கையூட்டுப் பெறுகின்ற மாமூல் பழக்கத்தை ஒழிக்க ஏதுவாக சட்டப்படிக்கானதொரு நிதி ஆதாரத்தை உருவாக்க நீங்கள் தெரிவிக்கும் நிட்டவட்டமான யோசனைகள் யாவை?

28) பொது மக்கள் உரிய கட்டணத்தை வட்டாட்சியர் அலுவலகத்தில் செலுத்தி எளிதாக நகல்களைப் பெறுவதற்கு ஏதுவாக, கிராமக் கணக்குகளைக் கணினி மயமாக்க வேண்டும் என்கிற ஆலோசனையை நீங்கள் ஏற்கிறீர்களா?

29) தமிழ்நாடு 1965-ஆம் ஆண்டு பொதுக் கட்டிடங்கள் (உரிமம் வழங்கிடல்) சட்டத்தின்படி, பொது மக்களுக்கென்று சேவை புரியும் மருத்துவமனைகள், தனியார் மருத்துவமனைகள், பள்ளிகள் மற்றும் கல்லூரிகள் ஆகியன அமையப் பெற்றுள்ள அனைத்துக் கட்டிடங்களுக்கும் மூன்றாண்டுகளுக்கொருமுறை உரிமமும் மற்றும் கட்டிடத்தின் உறுதித்தன்மை தொடர்பான சான்றிதழும் மாவட்ட ஆட்சியரிடமிருந்து பெற்றிடல் வேண்டும். இதற்காக வருவாய்த்துறை, பொதுப்பணித்துறையின் அனுமதியைக் கோருகிறது. இத்தகைய நடைமுறை இச்சான்றிதழ்களைப் பெறுவதற்காக இலஞ்சம் தருகின்ற மாமூல் வழக்கத்தை மேன்மேலும் வளர்ப்பதுடன் மேற்படி நிறுவனங்களின் நிர்வாகத்தினருக்கு தேவையற்ற தொல்லைகளைத் தருகிறது. இது தொடர்பாக, வருவாய்த் துறை மற்றும் பொதுப் பணித்துறை அதிகாரிகளைத் தேவையின்றி சம்பந்தப் படுத்தாமல், இத்தகைய சான்றிதழ்கள் வழங்குவதற்கு பதிவு பெற்ற கட்டிடக் கலை நிபுணர்கள் மற்றும் அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்ட பொறியியல் வல்லுநர்கள் ஆகியோருக்கு அதிகாரமளித்து இத்தகைய சூழ்நிலையைத் தவிர்க்கலாமா? இத்தகைய சான்றிதழ்களின் செயல்திறன் கால அளவையும் அதிகரிக்கலாமா? இது குறித்து உங்கள் கருத்து மற்றும் மாற்றுக் கருத்து ஏதேனும் இருப்பின் தெரிவிக்கவும்.

30) தற்போது நிலவும் அமைப்பின்படி பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் ஏனைய கல்வி நிறுவனங்களைப் புதிதாகத் திறப்பதற்கு அரசின் அனுமதியைப் பெறவேண்டியுள்ளது. அரசு என்பது, அடிப்படையில் அதிகார நோக்கில் முனைப்புடைய அமைப்பாகும். கல்வி நிறுவனங்களைத் தொடங்குவதற்கேகூட அரசைத் தொடர்புபடுத்துவது எனபது, கல்வி நிறுவனங்களின் தொடக்க நிலையிலேயே ஊழலை அறிமுகப்படுத்துகின்ற வாய்ப்பை ஏற்படுத்துகின்றது. இது, அனைத்துக் கல்வி நிறுவனங்களிலும் கவனமாக வளர்த்து பேணிக்காக்கப்பட வேண்டிய நற்பண்புகளை நோக்கமாகக் கொண்ட கல்விச் சூழ்நிலைக்குப் பாதகமாக அமைகிறது. இப்படிப்பட்ட நிறுவனங்களைத் துவங்குவதற்கு அரசின் அனுமதியைப் பெறவேண்டிய தற்போதைய நடைமுறையைக் கைவிட வேண்டும். அனுமதி வழங்கும் விஷயத்தை, பல்கலைக்கழகம், அனைத்திந்திய தொழில்நுட்பக் கல்வி மன்றம் (AICTE), அனைத்திந்திய மருத்துவ மன்றம் (AIMC), வழக்குரைஞர்கள் மன்றம் போன்ற சார்பு அமைப்புகளின் பொறுப்பில் விட்டுவிட வேண்டும்.

**இக்கருத்தை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா?**

31) 14-வயது வரை உள்ள அனைத்துக் குழந்தைகளுக்கும், இலவச மற்றும் கட்டாயக் கல்வி வழங்குவது மாநிலங்களின் பொறுப்பு என இந்திய அரசியலமைப்பின் 45-வது பிரிவு வரையறுக்கிறது. எனவே. பள்ளி நிலை வரை அனைத்துக் கல்வி நிறுவனங்களையும் நிறுவி அவற்றை நடத்துவதில் அரசிற்கு நியாயமான பங்கு உள்ளது. கல்வியின் தரம் மனநிறைவளிப்பதாக இருப்பதை உறுதிப்படுத்தும் வகையில் பாடத்திட்டம், மற்றும் பல்வேறு நிலைகளைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கான கல்வித் தகுதியை வரையறுப்பது, மற்றும் பள்ளி இறுதிநிலையில் தேர்வுகள் நடத்துவது ஆகியவற்றில் மட்டும் அரசு, தன்னை ஈடுபடுத்திக் கொள்வது அவசியமாகிறது. அதுவே போதுமானதும் ஆகும். ஆசிரியர்களை நியமனம் செய்வது, ஒழுக்கத்தை நடைமுறைப் படுத்துவது போன்ற நிருவாக விவகாரங்களில் அரசு தன்னை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டியதில்லை. இவற்றை, பள்ளி தலைமையிடத்திலும் அதனுடைய நிருவாகக் குழுவிடத்திலும் விட்டுவிட வேண்டும்.

இக்கருத்தை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா?

32) மேற்சொன்ன கருத்துக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டால், நிருவாக விஷயத்தில் அரசு குறைந்தளவு பங்கு கொள்வதற்கும், கல்வித் தரங்களை உறுதி செய்வதில் பெருமளவு பங்கு கொள்வதற்கும் ஏற்ற வகையில், தமிழ்நாடு தனியார் பள்ளிகள் (முறைப்படுத்தல்) சட்டத்தின் விதிகளைப் பொருத்தமான அளவுக்குத் திருத்த வேண்டிவரும். இந்நோக்கத்திற்காக மேற்சொன்ன சட்டத்தில் என்ன மாற்றங்களைப் பரிந்துரைக்க விரும்புகிறீர்கள்?

33) தனியார் நடத்தும் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளைத் தாராளமாக அனுமதிக்கும் எந்தவொரு திட்டமும், பணம் பெற்றுக் கொண்டு மாணவர்களைச் சேர்த்துக் கொள்ள வாய்ப்பளிக்கிறது. இது இறுதியில் ஊழலுக்கு வழிவகுக்கிறது. தனியார் நிர்வாகத்தின் கீழ் அமையும் கல்வி நிறுவனங்கள் நிறுவப்படுவதற்கு தாராளமாக அனுமதி அளிக்கையில் அவை நடத்தும் தனியார் நிர்வாகத்தின் வரவு செலவு விவரங்களைத் திறம்படத் தணிக்கை செய்வதில் தற்போதுள்ளதைக் காட்டிலும் அரசு அதிக கவனம் செலுத்த வேண்டும். இதனால் நேர்மையற்ற வகையில் பணப்பற்று வரவுகள் நடைபெறுதல் திறம்படச் சரிபார்க்கப்பட்டுத் தடுக்கப்படும்.

நீங்கள் இக்கருத்தை ஏற்றுக் கொள்கிறீர்களா? அல்லது மாற்றுக் கருத்துகளை தெரிவிக்க விரும்புகிறீர்களா?

34) அரசு நடத்தும் மருத்துவமனைகளில், மருத்துவமனை வார்டுகளுக்குள் நுழையவும், தங்கள் சிகிச்சை முதலியவற்றிற்காக தேவையான மருந்துகளைப் பெறுவதற்கும் கூட, ஏழை நோயாளிகளிடமிருந்து பணம் பறிப்பதாகச் சொல்லப்படும் முறைகேடுகளைத் தடுக்க நீங்கள் தெரிவிக்க விரும்பும் நடைமுறைக்குகந்த கருத்துக்கள் யாவை?

35) உணவு, சக்கர நாற்காலிகள் வழங்குதல், மருத்துவமனை வார்டுக்குள் நுழைய அனுமதி முதலிய பணிகள், பொதுநலன் நோக்கமுள்ள தொண்டு நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்படுமாயின் இவை தொடர்பாக மருத்துவமனைகளில் கீழ்நிலைகளில் நடைபெறும் தொல்லை, பெருமளவுக்குக் குறைக்க இயலும் என்று நீங்கள் எண்ணுகிறீர்களா?

36) போக்குவரத்து மீறல்களுக்காக அந்த இடத்திலேயே அபராதம் விதிப்பதற்காக போக்குவரத்துக் காவலர் தற்போது ரசீது கொடுக்கும் முறையைப் "ticketing system" பின்பற்றுகின்றனர். இது சாலைகளில் சிறந்த போக்குவரத்து ஒழுங்கு முறைக்கு வழிவகுத்துள்ளது என்று நீங்கள் கருதுகிறீர்களா? இம்முறையிலுள்ள குறைபாடுகள் எவை? இவற்றைக் களைவதற்கு நீங்கள் தெரிவிக்கும் கருத்துக்கள் யாவை?

37) காவல் நிலையத்தில் புகார்களின் பேரில் முதல் தகவலறிக்கையைப் பதிவு செய்ய காவலர் தவறுகின்றனர் அல்லது தயங்குகின்றனர் என்று அடிக்கடி பொதுமக்கள் புகார் செய்கின்றனர். காவலரிடம் செய்த புகார்களைப் பதிவு செய்வதை உறுதிப் படுத்துவதற்கு நீங்கள் தெரிவிக்கும் கருத்துக்கள் யாவை?

புகார்களை உடனுக்குடன் பதிவு செய்வதை உறுதி செய்வதற்குப் பெருநகர்ப் பகுதிகளில் புகார் கொடுப்பதற்கான கூடுதல் வசதிகளை அமைப்பதற்கு நீங்கள் ஆதரவு அளிக்கிறீர்களா? இந்நோக்கத்திற்காக அனுமதியளிக்கப்பட்ட பயிற்சி பெற்ற ஊர்க்காவல் படையினர் அல்லது ஏனைய தொண்டர் படையினர் இம்மையங்களைக் கவனிக்கலாம். இத்தகைய திட்டத்தை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா? இல்லையெனில், இதற்கு மாறாக நீங்கள் தெரிவிக்கும் கருத்து யாது?

38) சமூகத்தில் பொதுவாக நிலவும் ஒழுங்கு, கட்டுப்பாடு, சட்டத்திற்கு மக்கள் தரும் மதிப்பு இவற்றைப் பொருத்துதான் அரசு நிர்வாகத்தின் ஒழுங்கும், சுத்தமும் அமையும். சட்டத்தின் முதன்மையை நிலைநாட்டுவதற்கும், சமூகத்தில் ஒழுங்கும்

அமைதியும் நிலவுவதற்கும் வலுவான குற்றவியல் நீதிபரிபாலன முறை ஏற்படுத்துவது மிக அத்தியாவசியமாகும். மேலும் ஊழல் செய்பவர்கள் தங்கள் தற்காப்புக்காக, குண்டர்களின் துணையை நாடுவது என்ற அண்மைக்கால நிலைப்பாடு முற்றிலும் ஒழிக்கப்பட வேண்டிய ஒன்று. இதற்காக தேசிய காவல்துறைக் குழுவின் பரிந்துரைகளைச் செயல்படுத்தி காவல்துறையையைச் சீரமைப்பது முக்கிய ஒன்றாகும். இதற்காக உள்துறையில் ஒரு செயற்குழு ஏற்படுத்தி மேற்படி தேசிய குழுவின் பரிந்துரைகளைச் செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

நீங்கள் மேற்குறிப்பிட்ட ஆலோசனையை ஏற்றுக்கொள்கிறீர்களா?

39) மேற்கூறிய கருத்தையொட்டி நல்லதொரு சமுதாயத்தை உருவாக்க பள்ளி மற்றும் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களின் இளம் வயதிலேயே உரிய பண்பு நலன்களை வளர்க்க முன்னேற்ற வழியில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

இது குறித்து தங்களின் பிறப்பான பரிந்துரைகள் யாவை?

40) வண்டிகளைப் பதிவு செய்தல், அனுமதிகள், தகுதிச் சான்றிதழ் வழங்குதல், ஓட்டுநர் உரிமங்கள் வழங்குதல் முதலியவை தொடர்பாக போக்குவரத்துத் துறையில் ஊழல் நடை பெறுவதற்கு தற்போது வாய்ப்பு உள்ளது பற்றி அனைவரும் அறிவர். மேற்சொன்னவை தொடர்பாக முறைகேடுகளைக் குறைக்க நீங்கள் தெரிவிக்கக் கூடிய சாத்தியமான கருத்துக்கள் யாவை?

வண்டிகளைப் பதிவு செய்தல், வரிகளை வசூலித்தல், சான்றிதழ் வழங்குதல் முதலியவற்றில் தென்னிந்திய மோட்டார் வாகனச் சங்கம் (AASI) செஞ்சிலுவைச் சங்கம், புகழ்பெற்ற நல-சமூகப்பணி அமைப்புகள் போன்ற தனிப்பட்ட அமைப்புகள் சிலவற்றை ஈடுபடுத்தலாம் என்று நீங்கள் பரிந்துரைப்பீர்களா?

41) மின் வாரியம், வீட்டுவசதி வாரியம், மாநகராட்சி, பெருநகர் குடிநீர் வழங்கல் - கழிவு நீரகற்று வாரியம் போன்ற பணி நிறுவனங்கள் சில சமயங்களில் 10 அல்லது 15 ஆண்டுகளுக்கு முந்தைய வரி பாக்கி, மற்றும் பணிக் கட்டணங்களுக்கு கேட்பு அறிவிப்பு அனுப்புகின்றன.

தொகை செலுத்தியதற்கான ரசீதுகளை இத்தனை நீண்ட காலத்திற்குப் பின்னர் வைத்திராத நுகர்வோருக்கு இது பெரும் இடர்ப்பாட்டை விளைவிக்கிறது.

இந்த இக்கட்டான நிலை கடைசியில் எழுலுக்கு வழி வகுக்கிறது. மூன்றாண்டுகளுக்கு முந்தைய காலத்திற்கு வரி பாக்கி, பணிக்கட்டணங்களுக்காக கேட்பு அறிவிப்பு அனுப்புவதை தடை செய்யும் பொருட்டு விதி இயற்ற நீங்கள் பரிந்தரைப்பீர்களா?

42) தொகை செலுத்துகைப் பதிவுப் புத்தகம் (Pass Book) வழங்கும் முறையை வீட்டுவசதி வாரியங்கள் பின்பற்றினால், ஒதுக்கீடுதாரர் செலுத்த வேண்டிய உரிய தொகைகள் அவ்வப்போது பதிவு செய்யப்பட்டு, விற்பனைப் பத்திரங்கள் மாற்றுவதை விரைவு படுத்த இயலும்.

இக் கருத்தை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா?

43) வணிக வரித் துறையும் நுகர்பொருள் வழங்கல் துறையும், வாகனங்களையும் அவற்றில் உள்ள பொருள்களையும் சோதனையிடுவதற்காக முக்கியமான இடங்களில் சோதனைச் சாவடிகளை ஏற்படுத்தியுள்ளன. போக்குவரத்துக் காவல் துறையினரும், குறித்த காலத்திற்கொரு முறை மோட்டார் வண்டிகளைச் சோதனையிடுகின்றனர். வெவ்வேறு துறைகளின் நோக்கங்களை நிறைவு செய்யும் வகையில், ஒரே இடத்தில் பொதுவாக ஒட்டுமொத்த மேற்பார்வையின் கீழ் அத்தகைய அனைத்து இடங்களிலும் ஒருங்கிணைந்த பலநோக்கு சோதனைச் சாவடி ஒன்று ஏற்படுத்த இயலுமானால், அலைக்கழிக்கப்படுவதற்கான வாய்ப்புகள் குறைவதுடன் சோதனைச் சாவடியில் நடவடிக்கைகள் மிகவும் வெளிப்படையாக மேற்கொள்ளப்படுவதை உறுதி செய்ய இயலும்.

இக்கருத்தினை ஏற்றுக் கொள்கிறீர்களா?

44) உள்ளாட்சி மன்றம் செய்த கொடுத்துள்ள ஒரு குறிப்பிட்ட பணி தொடர்பாக, புகார் ஏதேனும் இருப்பின், வரி செலுத்துபவர்கள் அப்புகார்களைப் பதிவு செய்ய இயலும் வகையில் ஒவ்வொரு உள்ளாட்சி மன்றத்திலும் உள்ள வரிவசூல் பணியாளர்கள், வரையறுக்கப்பட்ட படிவத்தில் புகார் புத்தகங்களைத் தங்களுடன் வைத்திருக்குமாறும், அவற்றில் வரித்தண்டலரிடம் ஒப்புகை பெறுமாறும் கோரப்படவேண்டும். இது உரிய தொடர் நடவடிக்கைக்கு வழிவகுக்கும். வரித்தண்டலர், அடுத்த முறை அதே பகுதிக்கு வருவதற்கு முன்னராவது புகார்கள் சரிசெய்யப் படலாம்.

இக்கருத்தினை ஏற்றுக் கொள்கிறீர்களா?

45) அரசுத் துறைகளில் உள்ள முதுநிலை அதிகாரிகள், குறித்த காலத்திற்கொரு முறை நடத்தும் பத்திரிக்கையாளர் கூட்டங்களால், பொதுமக்கள் துறை நடவடிக்கைகள் பற்றியும், செயல்படுத்தப்படுகிற திட்டங்கள் பற்றியும் சரியாக அறிந்து கொள்ள உதவியாக இருக்கும். நீண்ட நாட்களாகத் தீர்க்கப்படாமல் உள்ள பிரச்சினைகள் பற்றி பொதுமக்கள் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் அளிக்கும் வகையில் கிராமப் பகுதிகளில் முதுநிலை அதிகாரிகள் பொதுக் கூட்டங்களையும் நடத்தலாம்.

இது தொடர்பாக உங்கள் கருத்து என்ன?

46) சட்டம் ஒழுங்கு, குற்றம் தொடர்பான பல்வேறு நிகழ்வுகள் குறித்து பொதுமக்கள் நாளதுவரையில் தெரிந்த கொள்ளும் வகையில், சென்னை, காவல்துறை ஆணையாளர் கூட்டும் பத்திரிக்கையாளர்கள் கூட்டத்தின் அடிப்படையில், அதேபோன்று முறையாகப் பத்திரிக்கையாளர்கள் கூட்டத்தை நடத்த மாவட்ட ஆட்சியர்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டால், மாவட்ட அளவில் அரசு அலுவலகங்கள் வெளிப்படையான ஒளிவு மறைவற்ற தன்மையில் நடைபெற உறுதிசெய்ய இயலும். மாவட்ட ஆட்சியர் இது தொடர்பாகத் தக்க வழிகாட்டிக் குறிப்புகளுடன் பத்திரிக்கையாளர் வாராந்திரக் கூட்டம் மாவட்ட ஆட்சியர் நடத்த அரசு திட்டம் ஒன்றை வகுக்க வேண்டும்.

இது தொடர்பாக உங்கள் கருத்துக்கள் யாவை?

**பணியாளர்கள்**

47) தற்போதைய அமைப்பின் நடைமுறைச் செயல்பாட்டில், அரசு அளவில் முடிவுகளை அரசியல் சார்பு அதிகாரத் தலைவர் எடுக்கிறார். அரசு செயலாளர்கள் சட்ட ரீதியில், அரசின் சார்பாக முடிவெடுத்துச் செயல்பட அதிகாரம் இல்லை. அரசியல் தலைவர்கள், அதாவது அமைச்சர்கள், கொள்கை முடிவு எடுப்பதில் பொறுப்பேற்க வேண்டும் என்பதும், அந்தக் கொள்கை முடிவுகள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு நிலையான நிருவாகப் பணியமைப்பு பொறுப்பேற்க வேண்டும் என்பதும், ஒரு சிறந்த பயனுள்ள ஜனநாயக நிருவாகத்திற்கு வேண்டப்படுபவையாகும். இச்செயல் நோக்கத்திற்காக அரசு செயலாளர்களுக்கு சில நிருவாகப் பணிகளை ஒதுக்கீடு செய்ய இயலும் வகையில், உரிய முறையில் சட்டவிதிகள் திருத்தப்பட வேண்டும்.

அவ்வாறு திருத்தம் செய்வதை நீங்கள் ஏற்கிறீர்களா?

48) பொருட்கள் உற்பத்தி, அதன் தரம் மற்றும் விலை குறியீடு போன்றவற்றை நிர்வகிக்கும் பொதுத்துறை நிறுவனங்களின் நிர்வாகம், தேவையான சுதந்திரத்துடன் செயல்பட வேண்டியுள்ளது. இவ்வகை நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநருக்கு, தன் பணி நிர்வாகத்தில், அரசால் வழங்கப்பட்ட மொத்த வழிகாட்டு விதிகளுக்குட்பட்டு, சுயேச்சையான அதிகாரம் தேவைப்படுகிறது. இவ்வகையில் பொது நிறுவனங்களில், தொழில் முறையான நிர்வாகிகளை மட்டும் உயர் அதிகாரியாக பொறுப்பேற்க அறிமுகப்படுத்தலாம். இதனால், சுதந்திரமான, தொழில்ரீதியான நிர்வாகத்திறன் கூடும். தொழில் நலத்திற்குக் கேடாகவும், தன்னிச்சையான முடிவுகளைத் தவிர்க்கவும் ஏதுவாகும். இதனால் லஞ்சம் உருவாவதைத் தடுக்க முடியும் எனக்கருதுவதை நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்களா?

**ஒழுங்கு நடவடிக்கை**

49) தவறு செய்கின்றவர்கள் சங்கத்தின் செல்வாக்குள்ள உறுப்பினர்களாக இருக்கும் நிலையில் அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதைக் குலைக்கும் வகையில் சங்கத் தலைவர்கள், அடிக்கடி தலையிடுவதாக முதுநிலை அதிகாரிகள் பலர் சுட்டிக்காட்டியுள்ளனர். போக்குவரத்துக் கழகங்களிலும் ஏனைய பொதுத் துறை நிறுவனங்களிலும் உள்ள பணியாளர்கள் ஒழுக்கத்தையும் நேர்மையையும் கடைபிடிப்பதில் இது ஒரு கடுமையான இடையூறாகக் கருதப்படுகிறது.

இந்நிலையை மாற்றவும், பணிகளில் நேர்மையையும், திறமையையும், வளர்ப்பதற்கு சங்கங்களின் உதவியைப் பெறவும், நீங்கள் எத்தகைய நடைமுறை சாத்தியமான வழிமுறைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று கருதுகிறீர்கள்?

**லோக்பால் (Lok Pal)**

50) அமைச்சர்கள் மீதும், அரசு உயர்நிலை அதிகாரிகள் மீதும் தெரிவிக்கப்படும் ஊழல் புகார்களை விசாரிப்பதற்கு மாநில அளவில் 'லோக்பால்' அமைக்கப்படுவது அவசியமாகும். சில நேரங்களில் கீழ்நிலை அதிகாரிகள் மீது மட்டுமே ஊழல் புகார்கள் இருந்த போதிலும், விழிப்புப்பணி - இலஞ்ச ஒழிப்பு இயக்ககம் விசாரிக்கும் சில வழக்குகள் அரசியல் முக்கியத்துவம் கூட பெற்றுவிடக்கூடும். அரசியல்வாதிகள் மற்றும் எனையோரின் தலையீடு இல்லாமல் நடைபெற அத்தகைய விசாரணைகளுக்குக் காப்பளிப்பது அவசியமாகும். பாதிக்கப்பட்ட நபரிடமிருந்து வரப்பெறும் மனு மீது அல்லது

லோக்பாலின் கவனத்திற்குக் கொண்டுவரப்படும் ஏனைய தகவல்களின் பேரில், லோக்பால் முடிவு எடுக்கும்போதெல்லாம், அவ்வப்போது விழிப்புப்பணி-இலஞ்ச ஒழிப்பு இயக்ககம் அல்லது காவல் துறையினர் மேற்கொள்ளும் அத்தகைய ஊழல் வழக்கு சம்பந்தப்பட்ட விசாரணைகளை மேற்பார்வையிட சட்டப்படிக்கான அதிகாரங்களைக் கொண்ட நீதிபதி ஒருவர் மாநில லோக்பால் அமைப்பில் இருக்கலாம் என்று கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஏற்பாட்டினை ஒப்புக் கொள்கிறீர்களா?

51) அரசுப் பணிகளில் லஞ்சம் கேட்டுத் தொல்லைப் படுத்தும் அரசு அலுவலர்கள் பற்றி மேலதிகாரிகளிடம் புகார் செய்தால் சம்பந்தப்பட்டத் துறை அலுவலர்களால் தமக்கு பின்னால் தொல்லை ஏற்படலாமென அஞ்சுவதால் சம்பந்தப்பட்ட நபர்கள் அந்த அலுவலர் மீது புகார் செய்ய மிகவும் தயங்குகிறார்கள். மேலும் லஞ்சப் புகார் செய்யப்படும் அலுவலரின் மீதான விசாரணை நடவடிக்கைகளில்தான் சம்பந்தப்பட்ட துறை கவனம் செலுத்துகிறதே தவிர, பாதிக்கப்பட்டவரின் கோரிக்கையின் மீதான நடவடிக்கைகள் மீதும் கவனம் செலுத்துவதில்லை.

ஊழல் தடுப்புப் பணியில் மேற்கொள்ளப்படும் விசாரணைகளுக்குத் தடையாக இருந்துவரும் மேற்குறிப்பிட்ட நிலையைச் சீர் செய்ய தங்களது கருத்துக்கள் யாவை?

* * *

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு அரசு

# உயர்நிலைக் குழு - நிர்வாகச் சீர்திருத்தங்கள் மற்றும் ஊழல் தடுப்பு

## வினாப்பட்டி - 2

(பொது மக்களிடமிருந்து வந்த கருத்துக்கள் வாயிலாகவும் மற்றும் அரசுச் செயலாளர்கள், துறைத் தலைவர்களுடனான தொடக்க நிலை விவாதத்தின் போதும் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் ஆகியவற்றின் அடிப்படையில் இது தயாரிக்கப்பட்டுள்ளது.)

## வினாப்பட்டி - 2

(இது பெரும்பாலும் நிருவாகத்தில் துறை அளவிலான நடைமுறை பற்றியது)

* * *

**அலுவலக நடைமுறை**

1) கட்டிட வரைபடங்களுக்கு / வீடுகளை ஒதுக்குவதற்கு ஒப்புதல் அல்லது அனுமதி அளிப்பதற்காக, விதிமுறைகளை ஏற்றவாறு தளர்த்தவும், தன்னுடைய விருப்ப உரிமையைப் பயன்படுத்தவும் அரசுக்கு அதிகாரமளிக்கும் வகையில் சட்டத்திலும், சட்டப்படிக்கான விதிகளிலும், விதிமுறைகளிலும் உள்ளன. அத்தகைய விருப்பு உரிமை அதிகாரம் செலுத்துவதற்கான வாய்ப்பினால், அரசின் உயர் நிலைகளில் ஊழல் நடைபெறுவதற்கு வாய்ப்பு உள்ளது. அரசு விருப்புரிமை அதிகாரம் செலுத்துவது தொடர்பான அத்தகைய சட்டப்படிக்கான விதித்துறைகள் அனைத்தும், இந்நோக்கங்களுக்காக சட்டப்படி அமைக்கப்பட்ட அதிகாரிகள் குழுவின் பரிந்துரைகளின் பேரில் மட்டும்தான் அத்தகைய அதிகாரங்கள் செலுத்தப்பட வேண்டும் என்று வரையறுக்க வேண்டும் என்ற கருத்தை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா?

2) விண்ணப்பங்களை முடிவு செய்வதில் காலதாமதம் ஏற்பட்டால், அவை பரிசீலிக்கப்படும் பல்வேறு நிலைகளில் ஊழல் நடைபெறுவதற்கு வழிவகுக்கிறது. அரசு அலுவலகங்களில் இவற்றைக் கவனிக்கும் ஒவ்வொரு அதிகாரியும் அலுவலைச் செய்து முடிப்பதற்கு கால அளவு நிர்ணயிக்கப்பட வேண்டும். வரையறுக்கப்பட்ட கால அளவுக்கு மேல் கோப்பினை பரிசீலிப்பதில் காலதாமதம் ஏற்பட்டால், தானே கோப்பினைப் பெற்று, பரிசீலிக்கும் பொறுப்பு அதற்கடுத்த உயர் அதிகாரியைச் சேர்ந்ததாகும். உரிய கால அளவைப் பின்பற்றத் தவறிய கீழ்நிலை அலுவலர்களின் செயலற்ற நிலைக்காக அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும்.

இது குறித்து உங்களுடைய கருத்து என்ன?

3) நிர்வாகத்தில் முடிவெடுக்கும் அதிகாரம் உயர் மட்டத்தில் குவிந்து கிடப்பது கோப்புகளில் முடிவெடுப்பதில் காலதாமதம் ஏற்படுவதோடு லஞ்சத்திற்கும் வழி வகுக்கிறது. மேற்படி அதிகாரங்களை பரவலாக்குவதால் அலுவல்களை

விரைவாக முடிக்க வழிவகுக்கிறது. உங்கள் துறையில் மந்த எந்த நிலைகளில் அதிகாரங்களை பரவலாக்கலாம் என்பதைக் குறிப்பிடவும்.

4) அரசு அதிகாரிகள், நிருவாகிகளாக நியமிக்கப்பட்ட அரசியல்வாதிகள் ஆகியோர் சொந்த, தனி நோக்கங்களுக்காக அரசு வாகனங்களைப் பெருமளவுக்குப் பயன்படுத்துகின்றனர் என்று பொதுமக்களிடையே ஒரு கருத்து நிலவுகிறது. இவ்வாறு தவறாகப் பயன்படுத்துவதற்கான வாய்ப்பை களைவதற்கு நடைமுறையில் உங்களுடைய கருத்து என்ன?

5) அரசிடமிருந்து அல்லது உள்ளாட்சி அமைப்புகளிலிருந்து குடிமகன் ஒருவர், வசதிகள் அல்லது சில பணிகளைச் செய்து தருமாறு கோரும் நேர்வில், தேவைக்கு அதிகமான விவரங்களுடன் கூடிய வரையறுக்கப்பட்ட படிவத்தில் மனு செய்து கொள்ள வேண்டியிருக்கிறது. இதனால் படிப்பறிவில்லாத பொதுமக்கள் இடர்ப்பாட்டிற்குள்ளாவதற்கு வாய்ப்பு உள்ளதோடு, விவரங்கள் சரியாக அந்த விண்ணப்பத்தில் கூறப்படவில்லை என்று கூறி அவருடைய விண்ணப்பம் அரசால் அல்லது உள்ளாட்சி மன்றத்தால் தன்னிச்சையாக நிராகரிக்கப்படுவதற்கும் வாய்ப்புகள் உள்ளன. சாதாரண குடிமகன் அவருக்குத் தேவையான வசதிகள் அல்லது பணிகளைக் கேட்டுப் பெறுவதற்குரிய படிவங்களில் எவற்றை எல்லாம் நீக்கிவிடலாம் அல்லது கணிசமாக குறைக்கலாம் என்று நீங்கள் கருதுகிறீர்கள்?

6) 5-ஆம் வினாவில் குறிப்பிடப்பட்ட நோக்கங்களைக் கருத்தில் கொண்டு ஒவ்வொரு துறையும், துறையின் பணிகளை நிறைவேற்றுவதற்காக வரையறுக்கப்பட்ட பல்வேறு படிவங்களையும் ஆய்வு செய்து படிவம், நடைமுறை, மற்றும் வழக்கம் ஆகியவற்றில் தேவையான மாற்றங்களைச் செய்து கொள்ள வேண்டும். இந்த மறு ஆய்வைச் செய்யும்போது வினாப்பட்டி-1 வினா 7ல் குறிப்பிட்டுள்ள வகையைச் சார்ந்த சமூகப்பணி அமைப்புகளின் கருத்துக்களைப் பெறவேண்டும்.

இது தொடர்பாக உங்களுடைய கருத்துக்கள் யாவை?

7) நீங்கள் ஒரு அரசு அதிகாரி என்ற வகையில் துறைகளில் எந்தப் பகுதிகள் அல்லது இனப் பணிகள் வினாப்பட்டி 1-ன் வினா எண் 2-ல் குறிப்பிடப்பட்டுள்ள முறையில் எளிமையாக்கப்படலாம் என்று உங்களுடைய கருத்துக்களைத் தெரிவிக்கவும்.

## அனுமதிகள் / உரிமங்கள் / சான்றிதழ்கள்

8) அனுமதி / உரிமம் முதலியவற்றை வழங்க, விருப்ப உரிமைப்படி அதிகாரத்தைச் செலுத்த சட்டப்படிக்கான அல்லது நிருவாக விதிமுறைகளில் வழி இருக்கிறது. ஆனால், அத்தகைய விருப்ப உரிமை அதிகாரத்தைச் செலுத்தும் போது லஞ்சம் பெறுவதற்கான வாய்ப்புகள் உள்ளன. பல்வேறு சட்டங்கள் மற்றும் நிருவாக ஆணைகளில் உள்ள அத்தகைய அனைத்து விதிமுறைகள் மிகக் கவனமாக ஆராயப்பட்டு அத்தகைய விருப்ப உரிமை அதிகாரத்தைச் செலுத்துவதற்கு உரிய வழிகாட்டிக் குறிப்புகள் மூலம் நெறிப்படுத்தப்பட வேண்டும். அவ்வாறு செய்தால்தான் வரையறுக்கப்பட்ட கோட்பாடுகளைப் பின்பற்றியே இறுதி முடிவு எடுக்கப்பட்டது என்பது கண்கூடாகத் தெரியும்.

இது தொடர்பாக உங்களுடைய கருத்துக்கள் யாவை?

9) உரிமம் பெறுதல், அனுமதி பெறுதல் போன்ற சிலவற்றில் விண்ணப்பதாரர்கள் தங்களது மூல மனுவின் மீதான நடவடிக்கை தொடருவது சம்பந்தமாக சில துறைகளிலிருந்து தடையின்மை அல்லது மறுப்பின்மை சான்றிதழ் பெற வேண்டியுள்ளது. அவ்வாறு சான்றிதழ் பெறுவதில் மிகுந்த காலதாமதம் ஏற்படுகிறது. இதனைத் தவிர்ப்பதற்காக விண்ணப்பதாரர் மனுசெய்த குறிப்பிட்ட காலத்திற்குள், உதாரணமாக 30 நாட்களுக்குள், அவ்வாறுக்கு அவரது மனு சம்பந்தமான மேல் நடவடிக்கை பற்றித் தெரியப்படுத்தாவிடில் அவரது மனு மீதான நடவடிக்கைக்கு அந்தத் துறைக்கு மறுப்பேதுமில்லை என யூகம்செய்து மேற்கொண்டு மேல் நடவடிக்கை எடுக்கலாம். ஆனால், வருமானச் சான்றிதழ் மற்றும் சாதிச் சான்றிதழ் வழங்க விண்ணப்பதாரரின் விவரங்கள் சரிபார்க்கப் பட வேண்டியுள்ளதால் இது போன்ற நேர்வுகளில் யூகத்தின் அடிப்படையில் நடவடிக்கை எடுப்பது பொருந்தாது.

விண்ணப்பங்கள் மீதான நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துவதில், தங்களது துறையில் எந்த வகையில் அல்லது எந்த இனங்களில் மேற்சொன்ன "யூகத்தின் அடிப்படையிலான" மேல் நடவடிக்கை எடுக்க இயலும்?

## மேம்பாடுகள் மற்றும் நலத் திட்டங்கள்

10) குறைந்த விலை வீதத்தில் கிராம மக்களுக்கு பழக்கன்றுகள், காய்கறி விதைகள், மூலிகைச் செடிகள், பூச் செடிகள், மலைத்தோட்டப் பயிர்கள் முதலியவற்றை

வழங்குவதற்காகப் பின்பற்றப்படும் தற்போதைய நடைமுறையில் முறைகேடுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. அவற்றுள் பின்வருபவையும் அடங்கும்.

(1) பயனீட்டாளர்களுக்கு உதவித் தொகைகள் முழுமையாக வழங்கப்படுவதில்லை, அல்லது அவை அவர்களைச் சென்றடைவதேயில்லை.

(2) அவை வெளி அங்காடியில் விற்கப்படுகின்றன.

(3) பொருள்களை, வாங்குவதில் உள்ள முறைகேடுகள், வேண்டியவர்களுக்குத் தகாத பணப்பயனை அளிப்பதாக உள்ளது.

இத்தகைய முறைகேடுகளைக் களைவதற்காக நீங்கள் தெரிவிக்கும் கருத்துக்கள் யாவை?

11) தற்போது கூட்டுறவுச் சங்கங்கள், துறைத் தலைவர்களின் ஒழுங்குமுறைக் கட்டுப்பாட்டிற்குள் உள்ள நபர்களால் தணிக்கையிடப்படுகின்றன. இத்திட்டத்தில், தலைமைப் பதவியிலுள்ள செல்வாக்கு மிக்கவர்களின் உடந்தையுடன் பெரிய அளவில் செய்யப்படும் முறைகேடுகள் வெளியே வருவது சாத்தியமில்லை. கூட்டுறவு சங்கங்கள் அனைத்திலும், சுதந்திரமான தணிக்கை முறை ஏற்படுத்தப்பட வேண்டியது அவசியம்.

இது தொடர்பாக உங்களுடைய கருத்துக்கள் யாவை?

12) பணி ஒன்று நிறைவேற்றப்படும்போது அல்லது சில பொருள்கள் வழங்கப்படவேண்டியபோது தற்போதுள்ள திட்டத்தின்படி கூட்டுறவுச் சங்கங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகின்றன. இந்த ஏற்பாட்டின் மூல நோக்கம் என்னவெனில் இது தொடர்பாக தொழில் அல்லது வாணிபத்தில் நேரடியாக ஈடுபட்டிருக்கும் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்கள் பயனடைய வேண்டுமென்பதே ஆகும். ஆனால், நடைமுறையில் இவ்வாறு செய்வதன் மூலம் வெளியேயுள்ள நபர்கள் மற்றும் வணிகர்கள், கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்கள் என்ற போர்வையில், கூட்டுறவுச் சங்கங்களில் நுழைந்து பெரிய அளவில் முறைகேடுகள் செய்வதற்கு வகை செய்கிறது. இந்த குறைகளைக் களைவதற்காக நீங்கள் தெரிவிக்கும் கருத்துக்கள் யாவை?

**ஒப்பந்தப் புள்ளிகள்**

13) ஒப்பந்தப் புள்ளிகள் வழங்கப்படும்போது, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களில் குறிப்பிடப்படும் விலைவீதம், பல நேர்வுகளில், அங்காடி விலை வீதத்தைவிட

உயரளவாக உள்ளது. ஏனைய ஒப்பந்தப் புள்ளிகளில் குறிப்பிடப்பட்ட விலை வீதங்களைவிட குறைவாக இருந்தபோதிலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒப்பந்தப் புள்ளியில் குறிப்பிட்ட வீதங்கள் இவ்வாறு இருப்பதால் ஒப்பந்தப் புள்ளிகளை செயல்படுத்தும் இறுதி நேரத்தில் அதிகப்படியான வீதங்களில் ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசியத்தை ஏற்படுத்துகிறது. ஒப்பந்தப்புள்ளிகளில் குறிப்பிடப்படும் விலைவீதம் அங்காடி விலை வீதத்திற்கு கிட்டத்தட்ட சமமாக உள்ளதாக இருக்க வேண்டுமாறு பார்த்துக் கொள்ள வேண்டியது அவசியம். உண்மையான அங்காடி விலை வீதத்தை அறிந்த தொள்வதற்கும் மற்றும் பாரபட்சமற்ற வகையிலும் செயல்பட இந்த நோக்கத்திற்காக நீங்கள் தெரிவிக்கும் முறை யாது?

14) தற்போதுள்ள ஒப்பந்தப்புள்ளி நடைமுறை, தொடக்க நிலையில் ஒப்பந்தப்புள்ளிகளை ஆய்வு செய்யவும், மிகவும் பொருத்தமான ஒப்பந்தப்புள்ளிகளுக்குப் பரிந்துரைக்கவும், குழு ஒன்றை அமைக்க வகை செய்கிறது. ஒப்பந்தப்புள்ளியை ஏற்றல் மற்றும் பொருட்களை வழங்குவதற்காக (அல்லது) கட்டுமானப் பணிக்காக ஆணை பிறப்பித்தல் ஆகிய பொறுப்பு, வழக்கமாக, உயர் நிலையில் உள்ள தனி அதிகாரி ஒருவரிடம் நிலை பெறுகிறது. தற்போதைய நடைமுறையில் பெருமளவு தொகைக்கான ஒப்பந்தங்களை வழங்குவது பல்வேறு தரப்பிலிருந்தும் வருகிற பரிந்துரைகள் மற்றும் நிர்ப்பந்தங்களுக்கு உட்பட நேரிடுகிறது.

அத்தகைய பரிந்துரைகளையும், நிர்ப்பந்தங்களையும் தனியொரு அதிகாரி சமாளிப்பதைக் காட்டிலும், அதிகாரிகள் அடங்கிய ஒரு குழுவினால் திறமையாக அதனைச் சமாளிக்க முடியும். ஆகவே ஒப்பந்தப்புள்ளிகளைத் தொழில் நுட்ப முறையில் ஆய்வு செய்வதற்கும் அது குறித்து மதிப்பீட்டுக் குறிப்பு ஒன்றைத் தயாரிப்பதற்கும், தொடக்க நிலையில் ஒப்பந்தப்புள்ளி ஆய்வுக்குழு ஒன்று இருப்பதுடன், ஒப்பந்தப்புள்ளி ஏற்புக்குழு என்ற மற்றொரு குழு இருக்கவேண்டும். ஒப்பந்தப் புள்ளியை ஏற்பது குறித்த இறுதி முடிவு எடுப்பது இக்குழுவின் பொறுப்பாகும். ஒப்பந்தப்புள்ளி ஆய்வுக் குழுவில், நிதித் துறையிலிருந்து ஒருவர், தொழில்நுட்பத் துறையிலிருந்து ஒருவர், சம்பந்தப்பட்ட துறையின் நிருவாகப் பிரிவிலிருந்து ஒருவர் ஆக மொத்தம் மூன்று உறுப்பினர்கள் இருக்க வேண்டும். ஒப்பந்தப்புள்ளி ஏற்புக் குழுவிற்கு அத்துறையின் முதுநிலை அதிகாரி ஒருவர் தலைமை வகிப்பார். பொருத்தமான பதவித் தரத்தில் அதே

துறையிலிருந்து ஒருவரும், நிலைத் துறையிலிருந்து ஒருவரும் ஆக மேலும் இரு உறுப்பினர்கள் அக்குழுவில் இருப்பர்.

இந்த ஆலோசனை குறித்து தங்களின் கருத்துக்கள் யாவை?

**கட்டுமானப் பணிகள்**

15) குடியிருப்புகள் / வணிகக் கட்டடங்கள் / வளாகங்கள் கட்டும்போது, பெறப்பட வேண்டிய அனுமதிகள் பல உள்ளன என்றும், அவற்றிற்கான விதிகள் மிகவும் சிக்கலானவையாக இருப்பதால், கட்டுப்பாடுகள், விதிமுறைகளைக் கடந்து வருவதற்கு விண்ணப்பதாரர்கள் கையூட்டு செலுத்த வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகின்றனர் என்றும் கூறப்படுகிறது. இது குறித்த நடைமுறைகளை எளிதாக்கத் தங்களுடைய ஆலோசனைகள் யாவை?

**ஆய்வு / சோதனை**

16) அலுவலகங்களில் திடீர் சோதனைகள் நடத்துவதற்கும், பொதுமக்கள் அவர்களுக்கு அனுப்பிவைக்கின்ற புகார்களைக் கவனிப்பதற்கும் வட்டாட்சியர் தலைமையில் தற்போது மாவட்ட ஆய்வுப் பிரிவு ஒன்று உள்ளது. இப்பிரிவு பொறியாளர்கள், கணக்கிடும் பணியாளர்கள் ஆகியோருடன் பல துறை அமைப்பாக விரிவாக்கப்பட்டு ஒரு துணை மாவட்ட ஆட்சியர் தலைமையில் இயங்கினால் மாவட்டத்தில் பல்வேறு நலத் திட்டங்களைச் செயலாக்குவது தொடர்பாகவும், கட்டுமானப் பணிகளை நிறைவேற்றுதல் குறித்தும், பயன்படுத்தப்பட்ட கட்டுமானப் பொருள்களின் தரம், கணக்குகளைப் பராமரித்தல் முதலியவை குறித்தும் மிகவும் பயன்தரும் வகையில் சரிபார்க்க இயலும். பல்வேறு துறைகளில், அதிகாரிகள் நிலையிலிருந்து கீழ்நிலைப் பணியாளர்கள் வரை நேர்மை, திறமை, ஆகியவற்றைப் பேணி நிலைநிறுத்துவதற்கு மாவட்ட ஆட்சியருக்கும் துணைக் கோட்ட அதிகாரிக்கும் இது பெரிதும் உதவியாக இருக்கும்.

இக் கருத்தை நீங்கள் ஏற்கிறீர்களா?

17) பழங்காலத்தில் நிருவாகத்தின் முக்கிய அங்கமாக இருந்து வந்த மாவட்டங்களில் உள்ள அலுவலகங்களை குறிப்பிட்ட காலத்திற்கொருமுறை வாலாயமாக ஆய்வு செய்யும் முறை, தற்போது நடைமுறையில் இல்லை என்றே கூறப்படுகிறது. அத்தகைய ஆய்வுத்திட்டத்தை மீண்டும் செயலுக்குக் கொண்டுவரவும்

ஆய்வுக்குறிப்புகள் மீது பொருத்தமானதோர் நடவடிக்கை எடுக்கவும் தங்களுடைய ஆலோசனைகள் யாவை?

18) ஒரு மாவட்டத்திலுள்ள பல்வேறு துறைகளில் குறைபாடுகளைத் தீர்க்க வேண்டிய இடங்களைக் கண்டறிந்து பணிகளை மேம்படுத்த, பல்வேறு துறைகளின் சாதனைகளை மதிப்பீடு செய்வதற்காக, மாவட்ட ஆட்சியர் தலைமையில் மாவட்ட அளவில் காலாண்டுக்கொருமுறை கூட்டமொன்றை நடத்துவது பயனுள்ளதாக இருக்குமா?

19) பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் தேர்வு முறையில் ஊழல் பரவியுள்ளது. ஆசிரியர்களிடையே ஒழுக்கத்தைக் கண்டிப்பாகக் கடைபிடிக்குமாறு சொல்வதன் மூலமாகவே, ஆசிரியர்களின் முறைகேடுகள், தவறான நடத்தைகளைத் தடை செய்ய இயலும். இதன் பொருட்டு ஒழுங்குமுறை அதிகாரங்கள் கல்வி நிறுவனத்தின் முதல்வரிடமும், நிருவாகத்திடமும் நிலைபெற்றிருக்க வேண்டும். இதற்காக தமிழ்நாடு தனியார் பள்ளிகள் (முறைப் படுத்தல்) சட்டத்திற்கும், தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் (முறைப்படுத்தல்) சட்டத்திற்கும் பெரும் அளவில் திருத்தங்களைக் கொண்டு வரவேண்டியது அவசியமாகும். இக்கருத்தை நீங்கள் ஏற்கிறீர்களா?

20) பள்ளிகளிலும், பல்கலைக் கழகங்களிலும் உள்ள தேர்வு முறையில், தற்போது எல்லா வகையான முறைகேடுகளும் நடைபெறுகின்றன. தேர்வுத் தாளில் மாற்று எண்ணிடும் முறை உட்பட அவ்வப்போது பின்பற்றப்பட்ட பல்வேறு தடுப்பு நடவடிக்கைகள் பயன் தந்திருப்பதாகத் தெரியவில்லை.

தேர்வு முறை நேர்மையாகவும், தூய்மையாகவும் நடைபெறுவதை உறுதி செய்ய, நீங்கள் கருதும் சீர்திருத்தங்கள் யாவை?

21) அரசினர் கல்வி நிலையங்களில் முதல்வர்கள், முதுநிலைப் பேராசிரியர்கள் ஆகியோரை நியமனம் மற்றும் பணியிடமாற்றம் செய்யும் அதிகாரம், ஒழுக்க நடைமுறைகளை நல்ல முறையில் காக்க உதவும் வகையில் (இது ஊழலையும் ஊழல் தொடர்பான முறைகேடுகளையும் தீவிரமாகத் தடுக்கப் பெரிதும் உதவும்) அரசு அளவில் இருப்பதற்குப் பதிலாக, அந்தந்தத் துறைத் தலைவர்கள் அளவில் இருக்கலாம் என்று நீங்கள் கருதுகிறீர்களா?

22) அரசினர் மருத்துவமனைகளில் பயன்படுத்துவதற்கென்று, மருந்துப் பொருட்கள், மருந்துகளை மையக் கொள்முதல் செய்யும் முறையில் ஊழல் முறைகேடுகள் காணப்படுகின்றன என்று கூறப்படுகிறது. அரசினர் மருத்துவமனைகளில் பயன்படுத்துவதற்கென்று கொண்டு வரப்படும் மருந்துப் பொருட்கள், மருந்துகளில் ஒரு பகுதி, முடிவில், வெளி அங்காடியில் விற்பனை செய்யப்படுகின்றன என்றும் குறை கூறப்படுகின்றது.

இம்முறைகேட்டிற்கு முற்றுப்புள்ளி வைக்க தாங்கள் தெரிவிக்கும் நடைமுறை ஏற்பாடுகள் யாவை?

23) மருந்துப் பொருட்களை வாங்குவதற்காக அமைக்கப்பட்டுள்ள மையக் கொள்முதல் குழுவில் அரசு சாராத நேர்மையான சில மருத்துவர்களையும் இணைத்துக் கொண்டால் நலமாக இருக்குமா?

24) ஓட்டுநர் உரிமம் வழங்குதல், ஆவணங்களைப் பதிவு செய்தல், அது தொடர்பான பணிகள் முதலியவற்றுக்காக மாமூல் வாங்கும் பொருட்டு, வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களிலும், மோட்டார் வாகனப் பதிவு அலுவலகங்களிலும், முகவர்கள், தரகர்கள் பெரிய அளவில் செயல்பட்டு வருவதாகக் கூறப்படுகிறது.

இத்தகைய நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க தாங்கள் கூறும் ஆலோசனைகள் யாவை?

25) ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகள், போக்குவரத்துப் பணியாளர்களுக்குத் தொகை கொடுப்பதற்காக "பணிக்கட்டணங்கள்" என்ற பெயரில் ஓட்டுநர் உரிமங்களுக்காக விண்ணப்பிக்கின்றவர்களிடமிருந்து கூடுதல் தொகை வசூலிக்கின்றன என்பது தெரிந்த தகவலாகும். இந்நிலைக்கு முற்றுப்புள்ளி வைக்க நீங்கள் தெரிவிக்கும் கருத்துக்கள் யாவை? ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகளுக்கு உரிமம் அளிக்கும் முறை ஒன்றை அறிமுகம் செய்து, அப்பயிற்சிப் பள்ளிகள் வசூலிக்கும் கட்டணங்களுக்குக் கணக்கு காட்டுமாறு செய்யமுடியுமா?

26) நிலக்கிரயங்களைப் பதிவு செய்வதைப் பொறுத்தவரையில் இது தொடர்பாக ஊழல் ஏற்படுவதற்குரிய வாய்ப்பினைத் தவிர்க்க அறிவார்ந்த, நேர்மையான முறையில் நெறிமுறைக்கோட்பாட்டின் அடிப்படையில் விலை மதிப்பை நிர்ணயிக்க வேண்டியுள்ளது. இம்மாநிலத்தின் வெவ்வேறு பகுதிகளிலும் நகர்ப்

பகுதிகளின் வெவ்வேறு பகுதிகளிலும், நெறிமுறைக் கோட்பாட்டின் அடிப்படையிலான விலை மதிப்புகளை நியாயமாகவும், உரியவாறும் நிர்ணயிப்பதற்கு நீங்கள் தெரிவிக்கும் கருத்துக்கள் யாவை?

27) அதிகாரிகளைப் பணி மாற்றம் செய்வதும், நியமனம் செய்வதும், சில பல சலுகைகள், ஆதாயங்கள் மூலம் தீர்மானிக்கப்படுகின்றன என்று பரவலான ஒரெண்ணம் இருந்து வருகிறது. இதன் காரணமாக, கண்ணியமான, நேர்மையான அதிகாரிகள் அடிக்கடி பணி மாற்றங்கள் செய்யப்படுவதற்கும், முறையற்ற நியமனங்கள் செய்யப்படுவதற்கும் உட்பட்டு வருகின்றனர். இவ்வாறு விதிக்கு முரணாக / பழி வாங்கும் நோக்குடன் பணி மாற்றங்களும், நியமனங்களும் செய்யப்படுவதைத் தடுக்க, நீங்கள் தெரிவிக்கும் கருத்துக்கள் யாவை?

28) அரசுத் துறைகளிலும், அரசுத் தலைமை செயலகத்திலும் உள்ள உயர் பதவிகளிலும் நேர்மைக்கும், திறமைக்கும் பெயர்பெற்ற பொருத்தமான சிறந்த அதிகாரிகளை நியமனம் செய்ய வேண்டும். பதவிக்குரிய தகுதியையும், பொருத்தத்தையும் அடிப்படையாகக் கொண்டு, அப்பதவியின் நோக்கத்தையும், தேர்வையும் உறுதிப்படுத்த சம்பந்தப்பட்ட துறை அமைச்சரின் ஒப்புதலுடன், அரசு செயலாளர்கள் தாங்கிய சிறு குழு ஒன்றின் மூலம் பணியில் உயர் நிலைகளில் அதிகாரிகளை நியமனம் மற்றும் மாற்றம் செய்ய வேண்டும். இக்குழுவை "பணியாளர் குழு" என்று அழைக்கலாம். துறைத் தலைவர் அவருடைய துறையில் உள்ள பதவிகளுக்கு நியமனங்களைப் பொறுத்தவரையில், இக்குழுவின் செயல்பாட்டு நடவடிக்கைகளில் பங்குபெறுமாறு செய்யப்பட வேண்டும். இத்தகைய திட்டம் உயர் பதவிகளுக்கு அதிகாரிகளை விதிக்கு முரணாக தேர்ந்தெடுப்பதற்கான அல்லது தவறாகத் தேர்ந்தெடுப்பதற்கான வாய்ப்பினை நீக்கும். இக்கருத்தை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா?

29) வேலை வாய்ப்புக்குரிய நேர்முகத் தேர்வுகளுக்கு, வேலை வாய்ப்பகங்களில் பதிவு செய்துள்ள நபர்களை அனுப்பி வைப்பதில் வேலை வாய்ப்பகங்களின் செயல்பாடு, செல்வாக்கிற்கு இடமளிப்பதற்கும், ஊழலுக்குத் துணை போவதற்கும் வாய்ப்பளிக்கிறது. அரசு அலுவலகங்களில் வேலைக்குப் பணியமர்த்துகிற நடைமுறையை வேலை வாய்ப்பகங்கள் மூலம் அனுப்பி வைக்கின்றவர்களுக்கு மட்டும் என்று வரையறை செய்யாது, அரசு பணிக்கான தேர்வுகளுக்கு வெளியேயிருந்து வருபவர்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று உச்ச நீதி மன்றம் அண்மையில தீர்ப்பளித்துள்ளது. இத்தீர்ப்பினால்,

அரசு அலுவலகங்களில் பணி நியமன நடைமுறையில் வேலைவாய்ப்பகங்களின் பங்கு குறையலாம். வேலை வாய்ப்பகங்கள் இட ஒதுக்கீட்டு வகையின் கீழ் வருகிறவர்களது விவரங்களை மட்டுமே பதிவு செய்யலாம் என்பதையும் அப்போதுதான் ஆட்களைப் பணியமர்த்துகிற அனைத்து முகவரமைப்புகளும், அரசு பின்பற்றும் இட ஒதுக்கீட்டுக் கொள்கையை உரியவாறு கடைபிடிக்க இயலும் வகையில், இட ஒதுக்கீட்டின் கீழ் வருகிறவர்கள் குறித்து அதிகாரப் பூர்வமான தகவல் விவரங்களை பெற முடியும் என்பதையும் நீங்கள் ஒப்புக் கொள்கிறீர்களா?

30) சில பதவிகள் ஊழலுக்கு வழிவகுக்க மிகவும் ஏதுவாக உள்ளன. இப்பதவிகளில் உள்ள அலுவலர்கள் அதே பதவியில் நீண்ட நாட்கள் தொடர்ந்து நீடிப்பதும் மாற்றல் செய்யப்படும் போதும் அது போன்ற பதவிகளிலேயே மாற்றம் பெறுகிறார்கள் எனவும் தெரிய வருகிறது. மேற்கூறிய காரணத்தின் அடிப்படையில் ஒவ்வொரு துறையிலுமுள்ள பதவிகளை 'முக்கியத்துவம் வாய்ந்தது', மற்றும் 'முக்கியத்துவம் இல்லாதது' என பிரிக்கலாமெனவும், ஒரு பதவியிலிருந்து பதவி உயர்வுக்கு சம்பந்தப்பட்ட அலுவலர் 'முக்கியத்துவம் இல்லாத' பதவிகளிலும் குறிப்பிட்ட சில வருடங்களுக்குப் பணியாற்றியிருக்க வேண்டுமென்று ஒவ்வொரு துறையிலும் நிலையான விதியை ஏற்படுத்தலாம் என்று பரிந்துரைக்கப்படுகிறது.

இதனை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா?

31) மேற்குறிப்பிட்ட, முக்கியமான பதவிகளில் பணியாற்றும் பணியாளர்களைப் பொறுத்த வரையில் மிகவும் கடுமையான நடத்தை விதிகளைச் செயல்படுத்த, ஊழல் நடவடிக்கைகள் குறித்தும் மேலும் கண்காணிப்பது மிகவும் அவசியமாகும். சொத்துக்களை வாங்குவது, விற்பது, வைத்திருப்பது தொடர்பான நடத்தை விதிகள் இத்தகைய பதவிகளை வைத்திருப்பவர்களுக்கு மிகக் கடுமையாக பொருந்தச் செய்யலாம்.

இக்கருத்தை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா?

அவ்வாறு நீங்கள் ஏற்றுக் கொள்வதாக இருந்தால் இதற்காக தனி நடத்தை விதிகள் சிலவற்றைக் கூடுதலாகத் தெரிவிக்கவும்.

32) நுகர் பொருள் வழங்கல் துறையின் பொது விநியோக முறையின் கீழ் வருகின்ற விற்பனைப் பிரிவுகளில் பலதரப்பட்ட முறைகேடுகளும், ஊழலும் நடைபெறுவதாகக் கருதப்படுகின்றன. இதனால் பொதுமக்களுக்கு வழங்கப்படும் இன்றியமையாதப் பொருட்கள் தரம் குறைந்தவையாகவும், அளவு குறைந்தவையாகவும் இருக்கின்றன. பொது விநியோகத் திட்டத்தின் விற்பனைக் கடைகளில் பணியாற்றுகிற பணியாளர்கள், பொது மக்கள் மனநிறைவடைகின்ற வகையில் பணியாற்றுவதற்கு தனிவகையில் அவர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டியுள்ளது. தற்போது பொது விநியோகத் திட்டத்திலுள்ள பணியாளர்கள் பெரும்பாலும் வருவாய்த் துறையிலிருந்து பணியமர்த்தப்படுகின்றனர். அவர்களுடைய நியமனம், பொது நோக்கு அடிப்படையில், அவர்கள் அப்பணிக்குப் பொருத்தமானவர்களாகவும், தகுதியுடையவர்களாகவும் இருக்கின்றனரா என்பதைத் தனிப்பட்ட முறையில் சரி பார்க்காமல் வழக்கமான முறையில் நியமனம் செய்யப்படுவதாகத் தோன்றுகிறது. பொது விநியோகத் திட்டத்தின் விற்பனைக் கடைகளில் பணியாளர்களை வேலைக்கமர்த்துவதற்குத் தனித்திட்டமொன்றை வகுத்துப் பணியாளர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கும் நியமனம் செய்வதற்கும், நுகர் பொருள் வழங்கல் துறைத் தலைவர் - நிருவாக இயக்குநருக்கு அதிகாரம் அளிக்க வேண்டும். இது குறித்து தங்கள் கருத்துக்கள் யாவை?

33) அரசுப்பணியாளர்களைக் குறிப்பிட்ட காலத்திற்கொரு முறை பணிமாற்றம் செய்வது தொடர்பான அரசுக் கொள்கை பற்றி, பணியாளர் நிருவாகச் சீர்திருத்தத்துறையின் 7-1-1994 ஆம் நாளிட்ட 10 ஆம் எண் அரசாணையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. முக்கியமான பதவிகளிலிருந்து ஊழல் செய்யும் பணியாளர்களை உரியவாறு நீக்குவதற்கு மட்டுமல்லாது, ஊழல் புரிகிற மூத்த அதிகாரிகளின் பழிவாங்கும் விதமான மாற்றல் ஆணைகளிலிருந்து நேர்மையான அதிகாரிகளைப் பாதுகாப்பதற்கும் அரசின் கொள்கையில் சில மாற்றம் தேவைப்படுகிறது என்று நீங்கள் கருதினால் அத்தகைய மாற்றம் குறித்து நீங்கள் தெரிவிக்கும் கருத்துக்கள் யாவை?

34) அரசுப் பணியாளர்களின் செயல்பாடு குறித்த ஆண்டு கமுக்க அறிக்கைகள் குறித்து குறிப்பு எழுதுகின்ற முறையை நீக்கியதால், அரசுப்பணியாளர் ஒருவரின் நேர்மை, பணியில் தேர்ச்சித்திறன், பொது மக்கள் தொடர்பு போன்றவற்றைப் பொறுத்தவரையில் குறிப்பிட்ட ஒரு பதவிக்கு அவர் பொருத்தமானவரா என்பதை மதிப்பிடுவது இயலாததாக உள்ளது. குறிப்பிட்ட பதவிகளுக்கு

அவ்வப்போது பொருத்தமான பணியாளர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு இயலும் வகையில், "ஆண்டு செயல்திறன் குறித்த மதிப்பீட்டு அறிக்கை" நடைமுறைத் திட்டம் ஒன்றைப் புதிதாக தற்போது கொண்டு வரலாம். இத்திட்டம் வெளிப்படையான நடைமுறையாக இருக்கலாம். பதவி நியமனத்தைத் தீர்மானிப்பதற்கு மட்டும். இந்த அறிக்கைகளைப் பயன்படுத்தலாம். பதவி உயர்வுகளை முடிவு செய்வதற்கு அவற்றின் பயன்பாட்டினை அறிந்திக்கு இடம் கொடாதவாறு, நாளடைவில் தக்கவாறு மேற்கொள்ளலாம்.

இத்தகைய புதிய திட்டத்தை நீங்கள் ஆதரிக்கிறீர்களா? ஆதரிக்க வில்லையெனில், உங்கள் கருத்துக்களுக்கு ஆதாரமான காரணங்களை கூறவும்.

35) அரசு அலுவலகங்கள் மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களில் ஒரு குறிப்பிட்ட நிகழ்வில் ஊழல் நடை பெறுவதாக தெரியவருமிடத்து, எந்த வழிமுறையில் அவ்வலுவலகத்திலேயே பணிபுரியும் ஒரு சார் அரசு ஊழியர் அந்த ஊழல் விவகாரத்தை சரிபார்த்துப்பட்ட மேலதிகாரியின் கவனத்திற்குக் கொண்டு வந்து தடுக்க இயலும்? தற்போதுள்ள சூழ்நிலையில் அத்தகைய நேர்மையான சார் அலுவலர், மேலதிகாரியின் ஊழல் விவகாரங்களை சுதந்திரமாக வெளிக் கொண்டுவர இயலாது. எனென்றால் அந்த சார்நிலை அலுவலர் பல விதமான ஒழுங்குமுறை நடவடிக்கைகளினால் பழிவாங்கப்படும் சூழ்நிலை இருக்கிறது. இதனை பார்த்த தாங்கள் கூறும் யோசனைகள் என்ன?

36) ஊழல் புரிகின்றவர்கள் மற்றும் முறைகேடாக நடக்கின்றவர்கள் எனத் தெரியவரும் மேனிலை அதிகாரிகளின் நேர்மையற்ற சட்டத்திற்குப் புறம்பான நடத்தைகளுக்கு பணிச்சங்கங்கள் தங்களது மறுப்பைத் தெரிவிக்க நடைமுறைக்கு உகந்த முறை யாது? பணியில் அத்தகைய செயற்பாட்டைப் பெற இளநிலை அதிகாரிகள் முயற்சி செய்யும் போதெல்லாம், அது உடனடியாக ஒழுங்கினச் செயலாகக் கருதப்பட்டு, தடை செய்யப்படுகிறது.

ஒழுக்கமுடைமைக்குப் பாதகமின்றி, விரும்பிய நோக்கங்களை எய்த நடைமுறைக்கு உகந்த முறை யாது?

## விழிப்புப் பணி

37) ஒவ்வொரு துறையின் தலைவர், அவருடைய துறையில் ஊழல் நடை பெறாமல் தடுப்பதற்கு அவர் முற்றிலும் பொறுப்பாவார் என்பது, ஊழல் தடுப்பு - விழிப்புப்பணியின் அடிப்படைக் கொள்கையாகும். அவருடைய

பணியாளர்களிடையே ஒழுங்குக் கட்டுப்பாட்டைச் செயல்படுத்தவும், உரியவர்களை உரிய பதவிகளில் நியமிக்கவும், பணியாளர்களை இடமாற்றம் செய்யவும், சீர்மிகு இடங்களில் குறிப்பிட்ட காலத்திற்கொரு முறை திடீர் சோதனைகளை நடத்தவும் அவருக்கு அதிக அளவில் சுதந்திரம் அளிப்பதன் மூலம் இந்தப் பொறுப்பை அவர் நிறைவேற்ற உதவி புரிய வேண்டும்.

இந்த அடிப்படைக் கொள்கையை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா?

38) ஒவ்வொரு துறையின் தலைவர் இந்தப் பொறுப்பை நிறைவேற்றுவதற்கு விழிப்புப்பணி அதிகாரி ஒருவர் உதவிபுரிய வேண்டும். தற்போது, துறையின் முதுநிலை அதிகாரி தன்னுடைய மொத்தமான ஏனைய பணிகளோடு, விழிப்புப்பணி அதிகாரியாகப் பணி புரியுமாறு செய்யப்பட்டுள்ளார். அத்தகைய பகுதிநேர விழிப்புப்பணி அதிகாரி தற்போதைய சூழ்நிலைக்குத் தேவையானவற்றை நிறைவு செய்ய இயலாது.

தங்களது கருத்துப்படி இக்காரியத்திற்காக முழுநேர விழிப்புப்பணி அதிகாரி தேவைப்படும் துறைகள் யாவை?

## உழல் தடுப்பு - விழிப்புப் பணித் துறை இயக்ககம்

39) போதிய அளவிற்குச் செயல் நோக்கமும், தாங்கள் பார்க்கும் பணியைப் பெருமிதமாகக் கொள்ளும் அளவிற்குச் சிறந்த அதிகாரிகளை இப்பதவிகளில் திறம்படப் பணிபுரிய ஈர்க்கும் வகையில், விழிப்புப் பணி அதிகாரிகள், அவர்களுடைய பணியாளர்கள் மற்றும் உழல் தடுப்பு - விழிப்புப்பணித்துறை இயக்ககத்தைச் சேர்ந்த பணியாளர்கள், அதிகாரிகளுக்கு கூடுதல் சம்பளம் மற்றும் தனிப்படிகள், அளிக்க வேண்டும்.

இது குறித்து தங்களுடைய கருத்து யாது?

40) தற்போது உழல் தடுப்பு விழிப்புப் பணித்துறை இயக்ககம் மேற்கொள்ளும் விசாரணைகளுக்குப் பல இயல்பார்ந்த அணுகுமுறை தேவைப்படுகிறது. உழல், தகாத செயல்கள் குறித்த குற்றச்சாட்டுகள் பற்றி, குறிப்பாக உயர்நிலைகளில் உள்ளோர் மீது சாட்டப்படும் இத்தகைய குற்றச்சாட்டுகள் பற்றி, விரிவாகப் புலனாய்வு செய்வதற்கு பொறியாளர்கள், கணக்காளர்கள், தணிக்கையாளர்கள் ஆகியோரின் பணி அதிக அளவில் தேவைப்படுகிறது.

காவல் துறை அதிகாரிகளோடு மேற்சொன்னவர்களையும் ஊழல் தடுப்பு - விழிப்புப் பணித் துறை இயக்ககத்தில் நியமிக்க எம்மாதிரியான தனி ஏற்பாடுகள் செய்யப்படவேண்டுமென்று தாங்கள் கருத்துத் தெரிவிக்கின்றீர்கள்?

41) தற்போது ஊழல் தடுப்பு - விழிப்புப் பணித் துறை இயக்ககம். ஒரு காவல் துறை அமைப்பாக குற்றவியல் நடைமுறை சட்டக கோவையின் விதித்துறைகளின் கீழ், புலனாய்வு செய்வதற்குரிய அதன் அதிகாரங்கள் அனைத்தையும் செலுத்தி பணிபுரிந்து வருகிறது. தற்போது விழிப்புப்பணி விசாரணைகள் பல இயல்பார்ந்த பணிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளதால், குறிப்பிட்ட குற்றங்கள் தொடர்பாக ஊழல் தடுப்பு விழிப்புப் பணி இயக்ககம், தன்னுடைய சொந்தப் பணியாளர்களைக் கொண்டு, சோதனையிடுவதற்கும், கைது செய்வதற்கும், புலனாய்வு செய்வதற்கும் அவசியமான அனைத்து அதிகாரங்களையும் தெளிவாக வரையறுத்துக் காட்டுகின்ற தனியானதொரு சட்டத்தை, அதாவது, வருமான வரிச்சட்டம், மத்திய ஆயுதீர்வை கங்குச் சட்டம் முதலிய சட்டங்களைப் போன்று தனியானதொரு சட்டத்தை ஊழல் தடுப்பு - விழிப்புப்பணித் துறை இயக்ககத்திற்காக இயற்றியளிப்பது பயன்தரத் தக்கதாகும். வாலாயமான, காவல் துறைக்குப் பொருந்தத்தக்க நூற்றாண்டு பழமைவாய்ந்த நீதிமன்ற பழைய தீர்ப்புக்களை அடிப்படையாகக் கொண்டு செயல்படாமல், ஊழல்தடுப்பு விழிப்புப் பணித்துறை இயக்ககம், விசாரணை மற்றும் புலனாய்வுகளில், தனக்குரிய சொந்த முறையைக் கொண்டு செயல்பட இந்த இயக்ககத்திற்கு, இத்தகைய தனியானதொரு சட்டம் உதவிபுரியும். பல இயல்பார்ந்த ஓர் அமைப்பு என்ற முறையில் ஊழல் தடுப்பு விழிப்புப் பணித்துறை இயக்ககம் பதிவு செய்யும் சாட்சியம், பெருமளவில் நம்பிக்கைக்குரியதாக ஆகும் என்பதோடு, நீதிமன்ற நடைமுறைகளில் அதன் தகுதியைக் கொண்டு மதிப்பிடவும்படும்.

**இந்தச் சீர்திருத்தத்தைத் தாங்கள் ஆதரிக்கிறீர்களா? இல்லையெனில், அதற்குரிய காரணங்களைக் குறிக்கவும்.**

**கணக்காய்வு**

42) மாநிலக் கணக்கரின் கால முறை தணிக்கைத் துறை அறிக்கையில் வெளிக் கொணரப்படும் நிதி சம்பந்தப்பட்ட முறை கேடுகள் சில சமயங்களில் அத்துறை சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் ஊழல் நடவடிக்கைக்குத் தொடர்பு உடையதாக இருக்கலாம். அத்தகைய தணிக்கை அறிக்கைகள் அரசின் கவனத்திற்குக்

கொண்டு வரும்போது வழக்கமான நிதி மற்றும் நிருவாக நடைமுறைகளின் அடிப்படையில் ஆய்வு செய்யப்படுவதோடு விழிப்புணர்வு கண்ணோட்டத்திலும் ஆய்வு செய்யப்பட வேண்டும்.

அத்தகைய தணிக்கை அறிக்கையை பொது கணக்குக் குழுவின் ஆய்வுக்கு கொண்டு வருவதற்காக வழக்கமாக எடுக்கப்படும் நடவடிக்கையோடு விழிப்பு நிலையிலும் பரிசீலிக்க எந்தவிதமான நடைமுறையை பின்பற்றலாம்?

**ஒழுங்கு நடவடிக்கை**

43) ஊழல் புரியும் பணியாளர்களை எப்போதும் விழிப்போடு கண்காணித்து அவர்களது ஒழுங்குக் கட்டுப்பாட்டை நிலைநிறுத்துவது மிகவும் இன்றியமையாததாகும். தவறுசெய்யும் பணியாளர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதற்குரிய அதிகாரம் தற்போது சற்று உயர்நிலையிலுள்ள அதிகாரிகளிடம் தான் உள்ளது. தற்போதுள்ள இந்த நடைமுறையினால், அன்றாட ஒழுங்குக் கட்டுப்பாடு போதிய அளவிற்கு நிலைநிறுத்தப்பட இயலவில்லை. இந்த முறையைத் திருத்தியமைக்க வேண்டும். ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதற்குரிய அதிகாரங்கள், ஒழுங்கு மீறிய பணியாளரின் பதவித்தரத்திற்கு மேல், இரண்டு நிலைகளுக்கு மேற்படாத ஓர் அதிகாரியிடம் இருக்கவேண்டும். மேல்முறையீட்டை விசாரிப்பதற்கான அதிகாரங்கள், குறிப்பிட்ட பதவித் தரத்திற்கு மேல், மூன்று நிலைகளுக்கு மேற்பட்ட அதிகாரியால் செலுத்தப்படலாம்.

இத்தகைய முறையை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா?

44) அரசுத் துறைகளில் தற்போதுள்ள ஒழுங்குக் கட்டுப்பாட்டு முறையில் காணப்பெறும் குறைகள் மற்றும் குறைபாடுகள் யாவை?

ஒழுங்கு நடவடிக்கைகளை எடுப்பதில் காலதாமதம் ஏற்படச் செய்வதற்கும், சம்பந்தப்பட்ட பணியாளருக்குத் தொல்லை கொடுப்பதற்கும் உரிய காரணங்கள் யாவை?

இது குறித்து ஏதேனும் பரிகார நடவடிக்கைகள் பற்றி நீங்கள் கருத்துத் தெரிவிக்கின்றீர்களா?

45) ஒழுங்கு நடவடிக்கைகளை மேற்கொள்வதில், விதிகள் மற்றும் நடைமுறைகளைப் பின்பற்றுவதில் ஏற்படும் தவறு, காலதாமதத்திற்கு வழிவகுப்பதோடு, இறுதியில், ஒழுங்கு நடவடிக்கையைத் தோல்வியுறவும் செய்கிறது விசாரணைகளை நடத்துவதிலும், ஒழுங்கு நடவடிக்கைகளை மேற்கொள்வதிலும் கண்காணிப்பு அதிகாரிகள் நிலையில் முறை அதிகாரிகளுக்கு குறிப்பிட்ட காலத்திற்கொரு முறை பயிற்சி அளிக்கும் திட்டம் இருக்க வேண்டும்.

பயிற்சி அளிக்க அத்தனை செயற்பாட்டை வலுப்படுத்த தங்களுடைய திட்டவட்டமான கருத்துரைகள் யாவை?

* * *

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS




அரசு மைய அச்சகம், சென்னை-600 079.